www.tamilarangam.net

டிசம்பர் 2000

# எரிமலை





ஆனைக்கு முந்திய மணியோசை

ஓயாத அலைகள் - 4

## விடுதலைப் பாதையில் வெற்றிகள் தந்து கடந்து சென்ற இரண்டாயிரம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கறைப் பூக்கள்

விடுதலைப் புலிகள் தமிழீழத் தாயகத்தில் விடுதலைக்காக உழைப்பவர்கள் என்பதை நன்கு வெளிப்படுத்துவதாக தொடர்ந்து வெளிவரும் எரிமலை இதழ்கள் வெளிப்படுத்துகின்றன. மேலும் பல புதுமைகளை இவ்விதழில் படைத்து, விடுதலை வரலாற்றின் எழுச்சி வரலாற்று ஆவணமாகத் திகழ வாழ்த்துகின்றேன்.

என்.ரூபன்
லீவர்கவுசன்
ஜேர்மனி

✉ ✉ ✉

ஓயாத அலைகள்-4 சிங்களப் பேரினவாதத்தை ஓங்கி அடித்துக் கொண்டுள்ளது உலக அரங்கில் சமாதானப் புறாவாக வேடமிடும் சந்திரிகா தமிழர்களையும், தமிழ் மக்களையும், சிறுவர்களையும் கொன்று தன் இனவெறியை வெளிப்படுத்தி வருகின்றார்.

தமிழர் விடிவிற்காய் தம்தேச விடிவிற்காய் தன்னுயிரையே அர்ப்பணித்து தன் புகழ் வெறுத்து விண்ணில் ஒளிர்விடும் நட்சத்திரங்களாக பிரகாசித்துக் கொண்டுள்ளனர். முதல் மாவீரர் சங்கர் முதல் பெண் மாவீரர் மாலதி, காந்தி தேசத்தை தலை குனிய வைத்த திலீபன், அன்னை பூபதி, காந்தி தேசத்தின் நயவஞ்சகத்தால் கடலில் வெடித்த கேணல் கிட்டு உட்பட பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் நினைவில் தாயகம் நோக்கிய எம்பயணம் தொடரும்

மேவி.குமார்
அனுப்பூர், சேலம்
தமிழ்நாடு

✉ ✉ ✉

எரிமலையின் ஒக்டோபர் மாத இதழ் கிடைக்கப் பெற்றேன். கையினில் இடைத்தர எறிகணை செலுத்தியோடு காத்திருக்கும் வீரனின் அட்டைப்படத்தோடு பொலிவுடன் வந்தது. புதிதாக ஆட்சிக் கட்டிலேறி அம்மையாரின் கையாட்களால் படுகொலை செய்யப்பட்ட நிமலராஜன் பற்றிய கட்டுரை வெகு ஆழமாக அதேவேளை அவலத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. தேர்தலை ஒட்டி வந்திருந்த கட்டுரைகள் வெகு சிறப்பாக இருந்தன.

ப.வேலாயுதம்
தூத்துக்குடி
தமிழ்நாடு.

✉ ✉ ✉

என் இனிய நண்பர் ஒருவர் மூலம் எரிமலை கிடைக்கப்பெற்றேன். ஒக்டோபர் எரிமலையின் அட்டைப் படத்தில் களமுனையில் கயவர் அழிப்பில் துடிப்புடன் நிற்கும் புலிவீரனின் தோற்றம் என்னை ஒரு கணம் சிலிர்க்க வைத்துவிட்டது. ஒரு நகரத்தின் விடுதலைக் கதை விவரணக்கட்டுரை சிங்களர் பிடியில் கிளிநொச்சி நகர் பட்ட பாட்டை தெளிவாக எடுத்தியம்பியிருந்தது. முதற் பெண் மாவீரர் மாலதியினது நினைவில் ஆழ்ந்தவாறு வரலாற்று ஏடு ஒன்றோடு உறவாடிய மகிழ்வோடு எரிமலை இதழை வாசித்து முடித்தேன்.

க.சின்னசாமி
தர்மபுரி
தமிழ்நாடு

✉ ✉ ✉

எங்கே போனது தமிழரின் வீரம் என்ற மாபெரும் வினாவுக்குப் பதிலாக காதாலும் கண்ணாலும் ரசிக்க ரசிக்க தேனாக விருந்து படைத்தார் தமிழீழத்தின் தலைமகன் பிரபாகரன் அவர்கள். ஓயாத அலைகள்-3 என்று சுழன்று அடித்த மாபெரும் வீரர் படையெடுப்பில் காணாமல் போனது தமிழரின் அடிமைச் சங்கிலி. களத்தில் நின்று உறுதியாகவும் அர்ப்பணிப்புடனும் போராடும் தமிழர் சேனையின் வெற்றிக்கு மலேசியாவிலிருந்து வாழ்த்துகின்றேன்.

சி.சுந்தரம்
பராக்
மலேசியா

✉ ✉ ✉

எரிமலை நவம்பர் சிறப்பிதழ் எம் கரங்களை வந்தடைந்தது. மாவீரர் ஞாபகார்த்த பரிசாக ஓயாத அலைகள் மூன்றில் அவர்கள் அடைந்த வெற்றிச் சாதனைகளை மக்களின் கரங்களில் தவழவிட்ட எரிமலைக்கு எங்கள் மனம் பூரித்த வாழ்த்துக்கள். நிழற்பட ஆவணத் தொகுப்பாக வெளிவந்துள்ள எரிமலைச் சிறப்பு இணைப்பு ஒவ்வொரு ஈழத் தமிழனினதும் இல்லங்கள் தோறும் பேணிப் பாதுக்க வேண்டியது. மாவீரர் நாளின் அருமை பெருமைகளை ஆழ்ந்துணர்த்திய எரிமலைக்கு வாழ்த்துக்கள்.

வி.கண்ணன்
பாரிஸ்
பிரான்ஸ்.

✉ ✉ ✉

யாழ்ப்பாண இடப்பெயர்வின் அவலத்தை வெளிப்படுத்துவதாக, மீள நினைவுபடுத்துவதாக மக்கள் அளித்த மாபெரும் இடப்பெயர்வு நிகழ்வு அமைந்திருந்தது. முதற் பெண் மாவீரர் மாலதி நினைவாக கட்டுரைகள் வந்திருப்பின் வெகு நன்றாக அமைந்திருக்கும். கவிதை அருமையா இருந்தது. திரு. இளங்குமரன் எழுதிய வரலாற்றுக் கட்டுரை தமிழன் பாரம்பரிய சந்ததியில் வந்தவன் என்பதை உணர்த்துவதாக அமைந்திருந்ததோடு. சிங்களவர்களே இலங்கைத் தீவின் இறைமையை அந்நியனுக்கு ஈடு வைத்தவர்கள் என்பதாக அமைந்திருந்தது.

சி.கணேசமூர்த்தி
தூலூஸ்
பிரான்ஸ்

✉ ✉ ✉

எரிமலையை கடந்த ஆறு மாதங்களாகப் படித்து வருகின்றேன். 6 இதழ்களினையும் உற்று நோக்கும்போது அதில் வளர்ச்சி தெரிகிறது. ஒப்பாரும் மிக்காருமின்றி தமிழில் வருகின்ற மாத இதழ்களில் வடிவமைப்பில் முதன்மையாக விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை. கடந்த இரண்டு இதழ்களிலும் சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்திருக்கிறீர்கள் பாராட்டுக்கள். கண்கள் கூறும் வார்த்தை எதிர்காலத்தில் தமிழீழத்தின் மிகச்சிறந்த நிழற்படங்களும் கவிவரிகளும் என தொகுக்கப்படவேண்டியவை.

சாந்தன்
டென்கில்டர்
நெதர்லாந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...

எரிமலை
டிசம்பர் 2000


## கட்டுரை

| | |
|---|---|
| விடுதலைப் பாதையில் வெற்றிகள் தந்து, கடந்து செல்லும் இரண்டாயிரம் | பக்கம் - 04 |
| ஆனைக்கு முந்திய மணியோசை | பக்கம் - 08 |
| தேசிய மக்கள் படைக் கட்டுமானத்தின்... | பக்கம் - 14 |
| ஓயாதஅலைகள் தந்த உணர்வலைகள். | பக்கம் - 18 |
| தீர்வுக்கான மார்க்கம் | பக்கம் - 20 |
| பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த யுத்தம்... | பக்கம் - 22 |
| ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டமும் அதன் இலக்கியப் பதிகையும். | பக்கம் - 24 |
| படையியல் தொழில்நுட்பத்துறை வரலாற்றின்... | பக்கம் - 30 |
| சகோதரிக்காகப் பிரசவிக்கப்பட்ட சகோதரன். | பக்கம் - 31 |
| திறந்தவெளிச் சிறைக்கூடத்தில் யாழ்ப்பாண மக்கள் | பக்கம் - 35 |
| மக்கள் அங்கீகாரம் | பக்கம் - 36 |
| வழிகள் திறந்துள்ளன | பக்கம் - 37 |
| யுத்தத்திற்கு அரசு தயாராகிவரும்... | பக்கம் - 42 |
| திறந்தவெளிச் சிறைச்சாலை மனச்சாட்சியின் குரல் | பக்கம் - 43 |

## அணையாத தீபங்கள்

| | |
|---|---|
| மேஜர் அல்பேட் | பக்கம் - 47 |

## சிறுகதை

| | |
|---|---|
| அறிவிப்பு– கருணை ரவி | பக்கம் - 28 |
| அந்நியமான உண்மைகள்– சாந்தன் | பக்கம் - 40 |

## கவிதை

| | |
|---|---|
| வேகாவனம்- புதுவை இரத்தினதுரை | பக்கம் - 11 |
| விடுதலைப் போராளி இசையழகன் | பக்கம் - 13 |
| களமுனைப் போராளிகளின் கவிதைகள் | பக்கம் - 21 |
| நேற்றைய துயர் தொலைய நிகழ்காலம் எம்பக்கம் - வியாசன் | பக்கம் - 26 |

## தொகுப்பு

| | |
|---|---|
| மாவீரர் நாள்–2000 | பக்கம் - 38 |
| நிலவரம் | பக்கம் - 45 |
| மீள்பார்வை நவம்பர் | பக்கம் - 46 |
| கண்கள் கூறும் வார்த்தைகள் | பக்கம் - 48 |


**12** யாழ் குடாநாடு விடுதலைக் குறியீடு




**16** ஆயிரம் கதைஅளந்து ஆட்சியேறிய அபூர்வ சிந்தாமணி



**32** பாடநூல்கள் தமிழர் வரலாற்றுக்கு நஞ்சூட்டும் சிங்கள இனவாதம்.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# “இந்தப் போர் எமக்குப் புதிய அனுபவங்களைத் தந்து போராற்றலை என்றுமில்லாத அளவில் வளர்த்துவிட்டது”



– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

“இன்று இந்தப் போர் என்றுமில்லாதவாறு வளர்ச்சி பெற்று, அகற்சி பெற்று நிற்கிறது. இரு தேசங்களது படைகளும் முழுஅளவிலான போருக்கு முகம்கொடுத்து நிற்கின்றன. சிங்கள தேசம் ஒரு ஆக்கிரமிப்புப் போரை நடாத்துகின்றது. எமது மண்ணை அபகரித்து, எமது மக்களை அடிமை கொள்ள முனைகிறது. அன்னிய ஆக்கிரமிப்பிலிருந்து எமது மண்ணை விடுவித்து, எமது மக்களைக் காக்கவே நாம் போராடுகின்றோம். சிங்களம் ஒரு அநீதியான போரை நடத்துகின்றது. நாம் ஒரு நீதியான விடுதலைப் போராட்டத்தை நடத்துகிறோம். இந்தப் போரில் தர்மம் எமக்குச் சார்பாக நிற்கிறது.

தமிழின ஒடுக்குமுறையின் சிகரத்தில் ஏறிநிற்கும் சந்திரிகா அரசு இந்தப்போரை தீவிரப்படுத்தி தொடர வேண்டும் என்பதில் முழு முனைப்பாக நிற்கிறது. எத்தனையோ பேரழிவுகளின் மத்தியிலும், பொருளாதாரம் சீரழிந்த நிலையிலும், இராணுவ இயந்திரம் ஆட்டம் கண்ட நிலையிலும் போரைத் தொடரவே சந்திரிகா அரசு விரும்புகின்றது. போரை அரசியலாகவும், அரசியலைப் போராகவும் மாற்றம் செய்திருக்கும் சந்திரிகாவின் ஆட்சிக்காலமானது ஒரு நீண்ட, முடிவில்லாத யுத்த காண்டமாகவே தொடர்கிறது.

எத்தனையோ கற்பனைகளோடும் அரசியல் கனவுகளோடும் ஆரம்பிக்கப்பட்ட சந்திரிகாவின் போர்த்திட்டம் இன்று எதையுமே சாதிக்க முடியாது சிதைவுற்றுக் கிடக்கின்றது. சிங்கள நாட்டின் இராணுவ பலத்தையும் வளத்தையும் ஒன்றுகுவித்து புலிகள் இயக்கத்தை வேரோடு சாய்க்க வேண்டும் என சந்திரிகா விரும்பினார். இந்தக் கனவுதான் போரின் மூலோபாயமாக வரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. ஆனால் புலிகள் இயக்கம் சாய்ந்து விடவில்லை. மாறாக, வேர் பரப்பி வளர்ந்து விருட்சமாக நிமிர்ந்து நிற்கிறது. இந்தப் போர் எமக்குப் புதிய அனுபவங்களைத் தந்து எமது விடுதலை இயக்கத்தின் போராற்றலை என்றுமில்லாத அளவில் வளர்த்துவிட்டது. எத்தகைய பலங்கொண்ட சக்தியாலும் எம்மை வென்றுவிட முடியாதென்ற மனோதிடத்தையும் தன்னம்பிக்கையையும் தந்தது. வற்றிப்போய்க் கிடந்த ஆயுதக்களஞ்சியங்களைப் பெருமளவில் நிரப்பி விட்டது. போர் எம்மைப் பல வழிகளில் பலப்படுத்தி வளப்படுத்தியிருக்கிறது.


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு
டிசம்பர்
*2000*

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail: erimalai@freesurf.fr

# தலைவாசல்

## போர்நிறுத்தம்

கடந்த நவம்பர் ஆரம்பத்தில் நோர்வே நாட்டு சிறப்புப் பிரதிநிதியை வன்னியில் சந்தித்த தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் மக்களின் நிலைப் பாட்டினை உத்தியோகபூர்வமாக தெளிவுபடுத்தினார். இதனைத் தொடர்ந்து சிங்கள அரசு மீது புலிகள் தொடுத்துவரும் அனைத்துலகரீதியான அரசியல் - இராஜதந்திரக் கணைகள் கூர்மையடைந்துள்ளது. கடந்த ஆண்டு நவம்பரில் ஓயாத அலைகள் 3 எனும் வீரவரலாற்றை ஆரம்பித்து சிங்களத்தின் இராணுவ மேலாதிக்கத்தை தகர்த்த தமிழீழத் தேசியத் தலைவர், இவ்வாண்டு நவம்பரில் ஆரம்பித்த பெரும் அரசியல் - இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் சிங்களத்தின் கபடத்தனத்தையும், கொடூரத்தையும் அனைத்துலக ஈடுபாட்டுடன் அம்பலப் படுத்தி வருகின்றார்.

நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கான அழைப்பு, நோர்வே மற்றும் அனைத்துலக நாடுகளுடனான தொடர்ச்சியான இராஜதந்திர கருத்துப் பரிமாற்றம் என்ற திசையில் தமிழீழ - சிங்கள முரண்பாட்டினை இழுத்துச்சென்ற புலிகள் இயக்கம், தற்போது ஒருதலைப்பட்ச போர்நிறுத்த அழைப்பின் மூலம் சிங்களத்தின் போர்வெறியையும் - இனவெறியின் ஆழத் தையும் உலகின் முன் இழுத்து நிறுத்தியுள்ளது.

பாரிஸில் இடம்பெற்ற சிறீலங்கா அபிவிருத்தி மாநாட்டில் ஐரோப்பிய சமூகம் தெரிவித்த காட்டமான கருத்துக்கள், கொழும்பில் தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை உலகம் ஏற்றுக் கொள்ளும் என்ற பிரித்தானிய பிரதி வெளிவிவகார அமைச்சரின் உரை, தமிழர்களின் அபிலாசைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற தெளிவான இராஜதந்திர வார்த்தைகளுடன் உலகநாடுகள் விடுக்கும் அறிக்கைகள், புலிகளின் போர்நிறுத்தத்தை வரவேற்ற பிரித்தானியா என்பன போன்ற செய்திகள் தொடர்ச்சியாக அனைத்துலக ஊடகங்களில் வெளிவருகின்றன.

சிங்களம் போர்நிறுத்தத்தை மறுத்து, தமிழ் மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் போது பேச்சுக்களை நடாத்தலாம் என்ற விசித்திரமான விவாதங்களை ஆரம்பித்துள்ளபோது, புலிகள் இந்தியா, அமெரிக்கா உட்பட பல தரப்பினரையும் அழைத்து சிங்களத்தின் கடும்போக்கை தளர்த்திட உதவுமாறு கோரியுள்ளனர். யாழ்.குடாவை தமிழர்கள் மீட்டிட முற்பட்டபோது எமக்குத் தடைபோட்டவர்கள் இப்போது சிங்களத்தின் கடும்போக்கிற்கு பதிலளிக்குமாறு இராஜதந்திர மொழிகளால் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த புறச்சூழ்நிலைகளில் தமிழர்களின் விடுதலைப் போர் மற்றுமொரு பரிமாணத்தை எட்டிவருகின்றது. சந்திரிகா தலைமையில் சிங்கள இனவாத அரசு நீண்ட திட்டமிடப்பட்ட பரப்புரைப் போரை தமிழர்களுக்கு எதிராக உலக அரங்குகளில் நடாத்தி வந்தது. புலிகளைப் பயங்கரவாதிகள் என சிங்கள அரசு வசைபாடி வந்தது. தமிழ்த்துரோகக் குழுக்கள் மற்றும் நீலன் போன்றவர்களின் துணையுடன் தமிழீழ விடுதலைப் போரின் நியாயங்களை சிங்களம் சிதைக்க முற்பட்டது. மறுபுறம், பெரும் இராணுவக் குவிப்பு மூலம் தமிழர்களின் சுய ஆட்சி உருவாகி வந்த பிரதேசங்களை தொடர் போருக்குட்படுத்தி தமிழீழம் என்ற அரசியல் இலக்கை அழித்தொழிக்க சந்திரிகா முற்பட்டார்.

இத்தனை எதிர்ப்புக்களுக்கும் ஈடுகொடுத்துப் போராடி, சிங்களத்தின் இராணுவ, அரசியல் வழிமுறைகளை தோல்விநிலைக்குத் தள்ளியுள்ள புலிகள், தமிழீழத்தின் அரசியல் நிலைப்பாட்டைப் பாதுகாத்தவாறு அனைத்துலகரீதியாக சந்திரிகாவின் வலைவிரிப்பை வெட்டி எறிந்து வருகின்றனர். மறுபுறம், போர்முனையில் புலிகளின் இராணுவத்திறனும், வியூகங்களும் சிங்களப் படைகளுக்குப் பெரும் குழப்பத்தை விளைவித்து வருவதை கொழும்பு ஊடகங்கள் ஒப்புக்கொண்டு வருகின்றன.

நோர்வேயின் மத்தியத்துவத்துடன் புலிகளுடன் பேச வேண்டிய தவிர்க்கமுடியாத கட்டத்தில் சிங்களம் அனைத்துலகப் பரப்புரைப் போரில் தோற்றாலும்கூட, களமுனையில் வென்றே ஆகவேண்டும் என்ற கடும்போக்கை எடுக்க முற்படுகின்றது. இதன் அடுத்த கட்டம் சிங்களத்தின் பெரும் போர் நடவடிக்கையாக அமையலாம். இணக்க முயற்சிகளைக் குழப்பி, அதிலிருந்து தப்பித்தவாறு பெரும் இனஅழிப்புப் போர் ஒன்றிற்கு சந்திரிகா முயல்வார் என்பதற்கான அனைத்து சாத்தியங்களும் உள்ளன. அந்தப் பெரும் அழிப்பு முயற்சியை தடுத்து நிறுத்திட மற்றுமொரு "ஓயாத அலை" தயாராகிடல் வேண்டும். பலம் மிக்கதொரு படையாய் எழுந்து சிங்களத்தின் ஆக்கிரமிப்பிற்கு முடிவுகட்டிடும் வலுவே இன்றைய காலத்தின் மற்றைய தேவையாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப் பாதை தந்து கடந்து சென்ற இ

உலக நாடுகள் யாவும் ஆடம்பரமாக வரவேற்ற, இரண்டாயிரம் ஆண்டு நிறைவடைந்து, இப்போது இரண்டாயிரத்து ஓராம் ஆண்டினிலே உலகம் கால் பதித்து நிற்கின்றது. முடிந்துபோன 2000ஆம் ஆண்டில் எத்தனையோ வரவுகள் செலவுகள் என எல்லாமுமே உருண்டோடி விட்டபோதிலும், அதன் எச்ச சொச்சங்களுடன் புதிய 2001ஆம் ஆண்டு பிறந்திருக்கின்றது. இந்த வகையில் ஈழத்தமிழர்களாகிய நாம், கடந்து போன இரண்டாயிரம் ஆண்டில் தமிழீழ தேசத்தின் முக்கிய நிகழ்வுகளை சற்று மீள்பார்வை செய்து பார்ப்பது உகந்ததே. ஆழமாக இல்லாவிடினும் தமிழீழ தேசத்தில் பொங்கிப் பிரவகித்துக் கொண்டிருக்கும் புதிய வீரியத்தையும், அதன் பலாபலன்களையும் சற்று மேலோட்டமாகவெனிலும் பார்ப்பது சாலச் சிறந்தது.

தமிழீழ தேசத்தின் விடுதலைப் பயணப்பாதையில் கடந்துபோன ஆண்டுகளிலேயே, வெற்றி மகுடம் சூடிய ஆண்டாக 2000மாம் ஆண்டினைக் கருதலாம். ஏனெனில், எமது இழந்துபோன வாழ்விடங்களின் பெரும் பகுதியை மீட்டுத்தந்தது இந்த ஆண்டே. அதேபோல விடுதலைப் புலிகளால் எதுவுமே செய்ய இயலாது என மார்தட்டிக் கனவு கண்டுகொண்டிருந்த சிறீலங்கா அரசுக்கும் அதன் பேரினவாதத்துக்கும் சாவுமணியடித்து, ஆனையிறவு உட்பட பற்பல இராணுவ முகாம்களை அழித்தொழித்து விடுதலைப் புலிகள் தாம் யார் என்பதை சிங்கள அரசுக்குக் காட்டியதோடு அரசை என்றுமில்லாதவாறு நிலைகுலையச் செய்த ஆண்டாகவும் இதே 2000ஆம் ஆண்டினை எடுத்துக்கொள்ளலாம்.

துல்லியமான திட்டமிடல்கள் மூலம் விடுதலைப் பயணத்தை வெற்றிப் பாதையால் கொண்டு செல்லும் விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் 40 அடி உயர பிரமாண்டமான உருவப்படத் திரைநீக்கத்துடன் தமிழீழ தேசம் 2000ஆம் ஆண்டின் முதலாவது மாதத்தை வரவேற்றுக் கொண்டது. 1999களில் கிடைத்த மாபெரும் வெற்றிகளில் திழைத்திருந்த மக்கள் உற்சாகமாகவே புத்தாண்டை வரவேற்றனர். அந்த உற்சாகம் எள்ளளவேனும் குன்றிவிடாமல், மேலும் மேலும் அதிகரித்து வெற்றிகளை ஏறுவரிசையாக்கியது கண்கூடு. இனி...



*சிறுமியே*
*எழுது கோல்களுக்குக் கிட்டாத*
*ஆயிரமாயிரம் உணர்வலைகள்*
*உன்முகத்தில்...*
*கலங்காதே இனி*
*ஓயாத அலைகள்*
*உன் நிலை மாற்றும்*
*புலியணிகளின் வெற்றியில்*
*உன் புன்னகை பூக்கும்*

2000 ஆண்டின் 12 மாதங்களையும் வரிசைக்கிரமமாக எடுத்து, அந்தந்த மாதங்களில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளையும், சம்பவங்களையும் சற்றுநோக்குவோம்.

ஜனவரி, மூன்றாவது ஓயாத அலைகளின் வீச்சு ஒன்றுக்கு ஆனையிறவின் மேற்குப் பகுதியில் பலியாகிப்போன 60 படையினரில் நல்ல நிலையில் இருந்த 16 சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அரசிடம் விடுதலைப் புலிகள் கொடுத்த சம்பவத்தோடு அந்த ஆண்டு ஜனவரியில் புலிகளின் வெற்றியும், படையினரின் தோல்வியும் தீர்மானிக்கப்படுகிறது. தொடர்ந்து 5ஆம் திகதி தமிழீழ மக்களின் விடுதலைப் போரின் நியாயத் தன்மைக்கு குரல் கொடுத்த தமிழ் அரசியல்வாதியும், மனித உரிமைகள் சட்டத்தரணியுமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் அரச பயங்கரவாதத்தினால் கொல்லப்பட்டமை அம் மாதத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. தமிழினத்துக்கு ஆதரவுக் குரல் கொடுக்கும் யாராக இருந்தாலும் சிங்களப் பேரினவாதம் அதை ஏற்றுக்கொள்ளாது என்கின்ற தெளிவான உண்மையை புலப்படுத்துவதாக இச் சம்பவம் அமைந்து விடுகிறது. தொடர்ந்து 7ஆம் திகதி திரு. குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் "மாமனிதர்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

13ஆம் திகதி சிறீலங்காக் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பூசகரின் மகள் சாரதாம்பாளின் இறுதிக்கிரியையும் 30ஆம் திகதி உயரிய பாதுகாப்புக்கொண்ட வவுனியா பிரதேச தபாலகத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்போடு இந்த மாதம் நிறைவடைகிறது.

பெப்ரவரி, ஐ.நா அதிகாரிகளின் வன்னி வருகையுடன் ஆரம்பிக்கின்ற இம்மாதத்தில் 7ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் படையினரின் கடல் வலய தடைச் சட்டத்தை நீக்கக்கோரி 10,000 பேர் கலந்து கொண்ட மாபெரும் கண்டனப்பேரணியும், 16இல் நோர்வே அதிகாரிகளின் இலங்கை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பில் வெற்றிகள்

# ரண்டாயிரம்



விஜயத்துக்கு பௌத்த பேரினவாத அமைப்புக்கள் கடும் எதிர்ப்பும் தெரிவித்தன. 17இல் எழுதுமட்டுவாளில் வைத்து விடுதலைப் புலிகளால் சிறீலங்கா விமானப்படையின் பெல் 212 உலங்குவானூர்தி ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டது. 26ஆம் திகதி நெடு நாட்களாக மூடப்பட்டிருந்த வவுனியாவுக்கான பயணிகள் பாதை திறக்கப்பட்டு மக்கள் வவுனியாவுக்குள் செல்லப் படையினர் அனுமதித்தனர். முள்ளுக்கம்பிகளினூடு பலத்த சிரமத்தின் மத்தியில் பயணிகள் வவுனியாவைச் சென்றடைந்தனர். அடுத்து 28இல் போர்க் கைதிகளாக இருந்த 4 படையினரை மனிதாபிமான அடிப்படையில் விடுதலைப் புலிகள் விடுதலை செய்து அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

மார்ச், மீண்டும் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து 4 பௌத்த சிங்கள மத பீடங்கள் அறிக்கையொன்றை விடுத்ததோடு ஆரம்பிக்கின்ற மார்ச் மாதத்தில் கொழும்பு பொரள்ளையில் நடைபெற்ற பாதுகாப்பை கேள்விக் குறியாக்கிய தாக்குதலும், 26இல் அமைதிப் பேச்சுக்களை 3ம் தரப்பு மத்தியத்தத்துடன் நடாத்த வேண்டும் என்றும் தமிழர்கள் மீதான ஆயுத அழுத்தங்கள் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரியும், அவற்றுடன் இன்னும் சில கோரிக்கைகளையும் முன்வைத்து யாழ் நகரில் மீண்டுமொரு மாபெரும் ஊர்வலம் இடம்பெற்றது. இம்மாதத்தின் இறுதியில் பலாலியில் இருந்து கொழும்பு நோக்கி 40 படையினரை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட அன்ரனோவ் விமானம் ஒன்று அனுராதபுரப்பகுதியில் வீழ்ந்து நொருங்கியது. இந்த மாதத்தில் மட்டும் சிறீலங்கா அரசு இழந்த 3வது விமானம் இதுவாகும்.

ஏப்ரல், இம்மாதத்திலேயே தமிழீழத்தின் தொண்டைக்குள் சிக்கிய முள்ளாக வர்ணிக்கப்பட்ட ஆனையிறவுப் பெருந்தளம் 22இல் விடுதலைப் புலிகளால் மீட்டெடுக்கப்பட்டது. இம்மாத ஆரம்பத்தில் சிங்களப் படைகள் வலிந்து மேற்கொண்ட "வலி சக்கர" படை நடவடிக்கை படுதோல்வியைச் சந்தித்தது. 6ஆம் திகதி பௌத்த பீடாதிபதிகளும், சிங்களப் பேரினவாதக் கட்சிகளும் இணைந்து நடாத்திய மாபெரும் சமாதான எதிர்ப்பு ஊர்வலத்தில் நோர்வேயின் தேசியக்கொடி எரிக்கப்பட்டது. இதே தினத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் போர் நடக்கும் பகுதிகளில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

சிக்குண்ட மக்களை விடுவிக்கக்கோரி அரசுக்கெதிரான பகிஸ்கரிப்பும், மறியல் போராட்டமும் நடத்தப்பட்டது. மறுநாள் 7ஆம் திகதி நாகர்கோயில் கடற்பரப்பில் கடற்படையின் இரு டோராப்பீரங்கிப் படகு களை புலிகள் மூழ்கடித்தனர். இதேபோல் புத்தளம் பகுதியிலும் ஓர் கடற்கலம் மூழ் கடிக்கப்பட்டது. ஆனையிறவுத் தளம் கைப் பற்றப்பட்ட ஒரு வாரத்துக்குள் பளை இரா ணுவ முகாமும் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது.

மே, இம்மாத ஆரம்பத்தில் யாழ்ப் பாணத்தில் சிக்குண்ட இராணுவத்தினர் வெளியேற வசதியாக ஒரு வாரகாலப் போர்நிறுத்தம் செய்ய புலிகள் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இம்மாத நடுப்பகுதியில் படையினரின் ஈவு இரக்க மற்ற செயலால் 10 மாணவர்கள் உட்பட 24 தமிழ்ப் பொதுமக்கள் மட்டக்களப்பில் கொல்லப்பட்டதும், கைதடியில் முதியோர் இல்லம் மீது நடாத்திய எறிகணை வீச்சில் 15 முதியவர்கள் பலியானதும் பதிவாகிறது. 20ஆம் திகதி புலிகளின் வேகமான யாழ் நோக்கிய நகர்வால் சாவகச்சேரிப் பிர தேசம் மீட்கப்படுகிறது.

ஜுன், இம்மாதத்தில் 5ஆம் திகதி வடமராட்சிக் கடலில் இரு டோராக்களும் பருத்தித்துறையில் 26இல் படையினருக்கு ஆயுத மேத்திச் சென்ற "உகண" கப்பல் கடற் கரும்புலிகளால் தாக்கி மூழ்கடிக் கப்பட்டது. 7ஆம் திகதி இரத்மலானையில் படையினருக்கு நிதி சேகரித்துச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக் கள் அடங்கிய ஊர்வலத்தில் குண்டு வெடித் ததில் 23 பேர் கொல்லப்பட்டனர். 27இல் நோர்வே நாட்டின் சமாதானத்துக்கான சிறப்புத் தூதுவர் எரிக் சொல்கெய்ம் கொழும்புக்கு விஜயம் செய்ததை எதிர்த்து அவர்களது நிறுவனமான "றெட்பானா" தலைமைக் காரியாலயம் மீது கைக்குண்டு வீசப்பட்டு பேரினவாதிகளால் சமாதானத் துக்கான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

ஜுலை, இம்மாத ஆரம்பத்திலும் இறுதி யிலும் தமிழகம் நோக்கி அகதிகளாகச் சென்ற ஈழத்தமிழர்கள் பலவந்தமாக தமிழக மீனவர்களால் கடலில் இறக்கி விடப்பட்டதாலும் மற்றும் படகு கவிழ்ந்த தாலும் 37 பேர் பரிதாபமாகப் பலியானதும், அல்வாயில் மாணவி மீது படையினரின் பாலியல் வல்லுறவும், யாழ் இந்துக் கல் லூரி மாணவன் சஞ்சீவன் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதும் பதிவாகியிருப் பதுடன் 26ஆம் திகதி முல்லை புதுக்குடி யிருப்பில் சிங்கள அரசின் நிவாரணவெட்டு, மருந்துத் தடைகளை எதிர்த்து மாபெரும் கண்டனப் பேரணியும் இடம்பெற்றது.

ஒகஸ்ட், 3ஆம் திகதி பாராளுமன்றத் தில் அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு எதிராகக் குழப்பமும் கூச்சலுமாக எதிர்க் கட்சியினரால் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப் பட்டதுடன், ஜே.வி.பி யினரால் தீர்வுத் திட்டத்துக்கெதிராக ஆர்ப்பாட்டமும் இடம் பெற்றது. இதன் பிரகாரம் 8ஆம் திகதி தீர்வுத் திட்டம் காலவரையறையின்றி பிற் போடப்பட்டது. இம்மாதத்தில் 9ஆம் திகதி 20 வயது சந்திரமோகன் (மட்டக்களப்பு) 18ஆம் திகதி முறக்கொட்டாஞ்சேனையில் பாடசாலை மாணவன் விஜயதர்சன், 20இல் வந்தாறுமூலையில் 45 வயது தவராசா என்பவர்கள் படையினரால் அநியாயமாகச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

செப்டெம்பர், இம்மாதத்தில் அமைச்சர் அஸ்ரப் உட்பட மேலும் சிலரின் திடீர் மரணமும், மல்லாவியில் பொதுமக்களின் மாபெரும் ஊர்வலமும் 26இல் ஓயாத அலைகள் - 4 நடவடிக்கை ஆரம்பமும், 30இல் கற்பிட்டிக் கடற்பரப்பில் கடற் புலிகளால் படையினரின் டோரா பீரங்கிப் படகு ஒன்றும் மூழ்கடிக்கப்பட்டு மாதம் நிறைவடைகிறது.

ஒக்டோபர், இம்மாதம் 10ஆம் திகதி சிறீலங்காவின் 11வது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிவடைகிறது. என்றுமில்லாதவாறு இத்தேர்தல் காலப் பகுதியில் 1800க்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைகள் பதிவு செய்யப்பட்டன. மற் றும் பிரதமர் சிறீமாவின் மரணம், திரு மலைத் துறைமுக அதிரடித்தாக்குதல், உலங்குவானூர்தி அழிப்பு என்பவற்றுடன் 19ஆம் திகதி யாழ்ப்பாணப் பத்திரிகை யாளர் நிமலராஜனின் படுகொலையும், 25ஆம் திகதி பிந்துநுவெவப் படுகொலை யும் (இதன்போது 31 தமிழிளைஞர்கள் கொல்லப்பட்டனர்) பதிவாகின்றது.

நவம்பர், இம்மாத ஆரம்பத்தில் நோர் வேயின் சமாதானக் குழுவும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களும் கலந்துரை யாடி, சமாதானத்துக்கான வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்தனர். 3ஆம் திகதியும் 16ஆம் திகதியும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிங்களப் பகுதிகளில் ஆர்ப் பாட்டங்கள் இடம்பெற்றதுடன், எரிக் சொல் கெய்மின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. தமிழீழ மாவீரர்நாள் 27இல் தமிழீழம் மட்டுமின்றி உலக நாடுகள் பூராகவும் மிகவும் சிறப்புற அனுட்டிக்கப்பட்டது. நிபந் தனையற்ற பேச்சுக்கு தாம் தயாராக இருப் பதாக தேசியத் தலைவர் அவர்களால் மாவீரர் தினச் செய்தியில் தெரிவிக்கப் பட்டது.

டிசம்பர், இம்மாதம் 18ஆம் திகதி படையினரின் "கினிகிர" படை நடவடிக்கை யின் படுதோல்வியும், 24ஆம் திகதி விடுதலைப் புலிகளின் ஒரு மாதகால யுத்தநிறுத்த அறிவிப்பும் பதிவா கின்றது. அத்துடன் மாத இறுதியில் படையினரின் காட்டுமிராண்டித் தனமான மிருசுவில்ப் படுகொலை யும் முக்கிய பதிவுக்குட்படுத்தப்படு கிறது.



மேற்கூறப்பட்ட 12 மாதங்களிலும் எடுத்துக் காட்டப்பட்ட விடயங்கள், முக்கியமானவற்றுடன் சில சம் பவங்களும் பதிவுகளும் மட்டுமே. ஆனால் உண்மையிலேயே கைது கள், படுகொலைகள், பாலியல் வல் லுறவுகள், தாக்குதல்கள், தாக்குதல் முறியடிப்புக்கள், இடப்பெயர்வுகள், அநர்த்தங்கள் எனப் பல விடயங்கள் பதிவாகியுள்ளன.

இதுவரை சம்பவப் பதிவுகளைப் பார்த்த நாம் இனி விடயத்துக்குள் வருவோம்.

சிறீலங்கா அரசும், அதன் பேரினவாத சக்திகளும் தமிழரது

www.tamilarangam.net




பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் எந்த அளவுக்கு அக்கறையுள்ளனவாக இருக்கின்றன என்பதனை மேற்கூறப்பட்ட பதிவுகளினடிப்படையில் நோக்கும்போது கிடைக்கின்ற பதில் தலைகீழானதாகவே இருக்கிறது. பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதில் அவற்றைத் தூண்டிவிடவும், தானாக வருகின்ற நல்லெண்ண சமிக்ஞைகளையும் தட்டிக் கழித்துவிடுவதாகவுமே இருக்கின்றது. இது சிறீலங்கா அரசதரப்பின் பக்கம் இருக்கின்ற பார்வை.

தமிழீழத்தின் பக்கம் எமது பார்வையைச் செலுத்துவோமாயின், இராணுவ ரீதியிலும் சரி அரசியல் ரீதியிலும் சரி, வெற்றி என்பது விடுதலைப் புலிகளின் பக்கமே இருப்பதாக 2000ஆம் ஆண்டின் சம்பவங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. விடுதலைப் புலிகளால் இராணுவ ரீதியில் நுட்பமாகத் திட்டமிடப்பட்ட தாக்குதல்கள் மூலம் எதிரிகளின் முகாம்களை அழிப்பதிலும், இழந்த பிரதேசங்களை மீட்பதிலும் அரசியல் ரீதியில் நிபந்தனையற்ற பேச்சுக்கான அழைப்பு மூலமும் ஒரு மாதகால யுத்தநிறுத்தம் மூலமும் அரசின் போலித்தனத்தைத் தோலுரித்துக் காட்டியதோடு அவர்களை சர்வதேச ரீதியில் ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளியிருப்பதன் மூலமும் விடுதலைப் புலிகளின் வெற்றியினைக் கணித்துக்கொள்ளலாம்.

இவை எல்லாம் இவ்விதம் இருக்க இத்தனைக்கும் மத்தியில் தமது சுயத்தை இழக்காமல் வீராப்புடன் வாழ்ந்து வருகின்ற எமது தமிழீழ மக்களைச் சற்று நோக்குவோமாயின் இன்றைய வெற்றிகளுக்கெல்லாம் தோளுக்குத் தோளாக நின்று செயற்படுபவர்கள் அவர்கள்தான் என்பது புலனாகும்.,

யாழ்க் குடாவை இராணுவம் ஆக்கிரமித்தபோது உடுத்த உடையுடன், சொத்து சுகங்களை இழந்து வன்னியின் வசதிக் குறைவையும் நாளடைவில் வசதியாக்கிக் கொண்டு உறுதியுடன் வாழ்ந்து இன்றைய வெற்றிக்கு உறுதுணையாகச் செயற்படும் இவர்கள் உண்மையிலேயே போற்றப்படவேண்டியவர்கள்தான்.

ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடமாகவும் அந்த இடத்தில் இருந்து வேறோர் இடமாகவும் இடம்மாறி மாறி இடம் பெயர்ந்து எதுவுமே இன்றி வன்னி மண்ணில் கால்பதித்த இவர்கள் இன்று விலை மதிக்கமுடியாத வெற்றிக்களிப்போடு யாழ் நகரின் நுழைவாயிலைத் தொட்டு நிற்கின்றனர். கடந்த ஆண்டுகளில் ஓயாத அலையென வேகம் கொண்ட மூச்சு 2001இல் யாழ் நகரை முற்றுமுழுதாக மீட்டுவிடும் என்பது திண்ணம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் அவர்கள் தனது மாவீரர் தின உரையில் குறிப்பிட்டதுபோன்று எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும், எத்தகைய இடையூறுகளை எதிர்கொண்டாலும், எத்தகைய சக்திகள் எதிர்த்து நின்றாலும் விடுதலைப் புலிகள் இயக்கம் யாழ் நகரை மீட்டெடுத்தே தீரும். இந்த மீட்பானது பிறக்கப்போகின்ற புதிய ஆண்டிலேயே நிறைவேறும் என்பதை நாம் எல்லோரும் நம்புவோமாக.

2000த்தின் இறுதியில் மாபெரும் வெற்றிக் குவியல்களுக்குள்ளும் சாதனைகளுக்குள்ளும் நின்று கொண்டிருக்கின்ற எமது ஈழத் தமிழ் மக்களுக்கு இனிவரும் காலங்கள் எல்லாம் வசந்தமான நாட்கள்தான்.

வீதியோர வாழ்வின் அவலங்கள் முடிந்து போய் மீண்டும் எம் தமிழினம் தத்தமது ஊர்களை மீட்டெடுத்து முத்தமிழ் விழாக் கொண்டாடும் காலம் வெகுதொலைவில் இல்லை. இடப்பெயர்வுகளும், மரண ஓலங்களுமே தினசரி விடியல்களாகிய காலம் மாறி வெற்றிகளும், மீட்புக்களுமென விடிகின்ற இன்றைய நாட்களின் இனிவரும் ஓர் நாளில் யாழ் நகரும் மீண்டது, தமிழீழமும் மலந்தது என்கின்ற இனிப்பான செய்திக்காய் உறுதியுடன் காத்திருப்போம்.

**–மொறிஸ் தர்மபாலன்**

## காத்திருப்பு

பிரிவுப்பாதை– இன்னும்
வரிந்து கட்டிக்கொண்டு தொடர்கிறது
பாதையோரமெங்கும்– இதயத்தை
வதை செய்கின்ற துன்ப முள்ளுக்குள்
கவலைச் சிலுவைகள் தோள்களிலே–
ஆனால்
இயேசுவின் மன உரம்தான் எமக்கில்லை
குடும்பமாய் நிற்கும் செடிகளைக் கூட
குரோதமாய் பார்க்கிறது மனசு
உறவுகளின் வருகையின் நாளுக்காய்
தவிக்கிறது எல்லாமே
விடிவு வரும் வேளையில்– எல்லாமே
விடிந்து விடும் என்பதனால்
அழுத கண்ணீரை அழுத்தித் துடைத்துக் கொண்டு
காத்திருக்கின்றோம் அந்நாளுக்காய்

**-தமிழிசை.வீ.**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓயாத அலைகள் -4



— பிரபுத்திரன் —

புலிகள் நடத்திய ஓயாத அலைகள் -3 நடவடிக்கையோடு சந்திரிகா அரசாங்கம் தனது ஐந்துவருட ஆட்சிக்காலத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிடுவார்கள், அழிக்கப்பட்டு விடுவார்கள் அதற்கான கால நிர்ணயம்கூட தனது கைகளிலேயே இருப்பதாக சிங்கள தேசத்திற்கும், உலக நாடுகளிற்கும் காட்டிவந்த "மாயமான்" மறைந்து போயிற்று. இதனால் மாயமானைக் காட்டி நடத்திய அரசியல் பிழைப்பை அச்சுறுத்துவதாக இராணுவ அரசியல் நெருக்கடிகள் எழுந்து தாண்டவமாடியபோது, பதிலிறுக்க முடியாது பதறிய அரசு தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தென்மராட்சியில் எடுத்த படை நகர்த்தல் கவசத்தை புலிகளின் ஓயாத அலைகள் -4 உடைத்தெறிந்துவிட்டது.

சந்திரிகா அரசாங்கம் தனது வலுவனைத்தையும் திரட்டி எடுத்த உச்சக்கட்ட முயற்சியாகவே தென்மராட்சியில் நடந்த "ரிவிகிரண" 1-2, "கினிகிர" 1-2 ஆகிய இராணுவ நடவடிக்கைகள் அமைந்தன. இந்நடவடிக்கைகளின் அவசியத்திற்காக எழுந்த காரணங்கள் என்ன? நிர்ப்பந்தங்கள் எவை? என்பதைப் பார்ப்போமானால் அவை அதிலடைந்த விளைவுகளின் பரிமாணத்தையும் விளங்கிக்கொள்ள முடியும்.

(1) தென்மராட்சியில் புலிகளின் நிலைகொள்ளலால் இராணுவம் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பில் தனது படைவலுவை ஒருமுனையில் குவிக்க முடியாது பலமுனைகளிற்கும் (அரியாலை, கோப்பாய், புத்தூர், சரசாலை, சாவகச்சேரி, பளை, கிளாலி, நாகர்கோவில்.... என)இழுத்துப் பரப்பவேண்டியுள்ளது. ஓயாத அலைகள் -3 இன் பின் மிகச் சொற்பமாக மாறிவிட்ட தனது தாக்குதற் படைகளை மேலும் விரித்துப் பரப்பவேண்டியுள்ளதால் பாதுகாப்பு வியூகத்தில் ஏற்படக்கூடிய பலவீனம் கருதி படைத்தரப்பு திணறுகின்றது.

(2) தென்மராட்சியில் புலிகள் ஒரு தளத்தை தக்கவைத்திருக்கும் வரைக்கும் யாழ்ப்பாணத்தின் எந்தமுனை நோக்கியும் புலிகளால் போகமுடியும் என்ற அச்சம்.

(3) யாழ்ப்பாணம் புலிகளின் கைகளில் விழுந்தால் அதனால் ஏற்படக்கூடிய படையிழப்பு, படைக்கலங்களின் இழப்பு, மொத்தமாக சிறீலங்காப் படைகளின் போருக்கான மனோதிட இழப்பு, ஆட்சேர்ப்பில் ஏற்படக்கூடிய இழப்பு என்பவற்றை படைத்தரப்பு கணித்துள்ளது.

(4) இராணுவச் சமநிலையில் புலிகளின் கை மேலோங்கிவிட்டதான சர்வதேச மதிப்பீட்டால் அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடி.

(5) இனி அரசபடையால் இழந்ததைக் கைப்பற்றவோ, இருப்பதைத் தக்கவைக்கவோ முடியாது என்ற சிங்கள மக்களின் அபிப்பிராயத்தால் அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய உள்நாட்டு எதிர்ப்பலை.

(6) யாழ்ப்பாணத்தை புலிகள் மீட்டால் அதன் பின் புலிகள் அடையக்கூடிய அரசியல் ஸ்திரத்தன்மை.

(7) புலிகள் அடையும் வெற்றியின் பின்னால் உலகத்தமிழர் மத்தியில் எழக்கூடிய போராட்ட ஆதரவெழுச்சி.

(8) சமாதான முயற்சிக்கு சர்வதேசம் கொடுக்கக்கூடிய அழுத்தமும், அப்போது இராணுவமேலாண்மை நிலையிலிருந்து ஒரு "அடிமை சாசனத்தை" திணித்துவிடும் தனது திட்டத்தை நிறைவேற்றவோ அல்லது பேரினவாத நலன்களை பிரதிபலிக்கும் நிபந்தனைகளையிடவோகூட முடியாத பலமின்மை.

என விரிந்து செல்லும், அரசியல் தாக்கங்களை எதிர்கொள்ள தனது எஞ்சிய படை இயலுமையை ஒருங்கிணைத்து அரசு தனது இராணுவ, பொருளாதார பலமனைத்தையும் திரட்ட முயன்றது. இந்நடவடிக்கைகள் மூலம்

ஆனை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்திற்கான உடனடி அச்சுறுத் தலை தவிர்த்தல், இராணுவ சமநிலையில் புலிகளின் கை மேலோங்கிவிட்டது என்ற சர்வதேச மதிப்பீட்டைக் குலைத்தல், படை யினரின் போருக்கான மனோதிடத்தை உயர்த் துதல் போன்ற இலக்குகளை அடையவிருந்த படைத்தரப்பு சம்பாதித்தது என்ன? என்பதே நாம் இங்கு அவதானிக்க வேண்டியது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த, ஜெனரல் றொகான் தலுவத்த ஆகி யோர் உட்பட ஏனைய படைத்தளபதிகளும் நேரடியாக வழிநடத்த புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட பலகுழல் பீரங்கி உள்ளடங்க, இதுவரை பயன்படுத்தியிராதளவு செறிவான சூட்டுப் பலத்தோடு படையினர் கடந்த ஒக் டோபரில் ஆரம்பித்த "ரிவிகிரண" -1 அதன் பின்னான "ரிவிகிரண" -2 மற்றும் "கினிகிர" -1, "கினிகிர" -2 நடவடிக்கைச் சமர்களில் படை யினர் சந்தித்த இழப்புக்களும் தமது நட வடிக்கை இலக்குகளை எட்டமுடியாமல் போனமையும் அரசிற்கு பெரும் அதிர்ச்சி வைத்தியமாகவே இருந்திருக்கும். இந் நடவடிக்கைக் காலங்களில் இருந்துமட்டும் 400 வரையான படைஆட்கள் கொல்லப் பட்டும், 1800 வரையானோர் காயப்பட்டும் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள னர். இவைதவிர ஓயாத அலைகள் -3 விருந்து இன்றுவரை பெயர் சூட்டப்படாமல் படை யினரால் நடாத்தப்பட்ட முன்னேற்ற நடவடிக் கைகளிலும், பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் கொல்லப்பட்ட, காயமடைந்து களத்திலிருந்து அகற்றப்பட்ட படையினரின் எண்ணிக்கை யைப் பார்த்தால் படை இழப்பு எண் ணிக்கை என்பது இன்னும் அதிகம் உயரும். புலிகளின் ஓயாத அலைகள் -3 இன் முன் இந்தப் படையிழப்பென்பது சிறீலங்கா இரா ணுவத்தின் படையிருப்பால் ஈடுசெய்யக் கூடி யதானதாக இருந்திருக்காலம். ஆனால், இன் றைய நிலை அதுவல்ல.

சிறீலங்காப் படைத்தரப்பு இன்றுள்ள நிலை யில், இவ்விழப்புக்கள் அதன் பலத்தில் பெரி யளவான தாக்கத்தை விளைவிக்கக்கூடிய தாகவே உள்ளது. புலிகளின் ஓயாத அலை கள் -3 இனால் சிறீலங்காவின் முன்னணிப் படைகள் பெரும் இழப்பைச் சந்திக்க நேர்ந் தது. குறிப்பாக பரந்தன், உமையாள்புரம், வெற்றிலைக்கேணி, ஆனையிறவுப் பகுதி களில் நிலைகொண்டிருந்த 54வது டிவிசனின் சிதைவினால் இது இன்று கலைக்கப்பட்டுள் ளது. தாழையடித் தளத்திலும், பின்னர் இத்தாவில்-கண்டிவீதியில் நிலை கொண்டி ருந்த புலிகளுக்கெதிரான கடுமையான முறி யடிப்புத் தொடர் நடவடிக்கைகளிலும் 53வது டிவிசன் மிகப் பெருமளவு இழப்பைச் சந்தித் தது. அம்பகாமம், மாங்குளம் பகுதியிலும் பின்னர் ஆனையிறவிலும், சாவகச்சேரியிலும் 55வது டிவிசன் கணிசமான தனது படையி னரை இழக்க நேர்ந்தது. சிறீலங்காவின் தாக்குதற் படையணிகளான இம் மூன்று டிவிசன்களும் இவ்வாறான இழப்பைச் சந்தித் திருக்க, நடவடிக்கையில் உதவிப்படையாகச் செயற்பட்ட கனகராயன் குளத்தை தலைமை யகமாகக் கொண்டிருந்த 56வது டிவிசன் தனது பெரும்பான்மைப் படைவலு இழக்கப் பட்ட நிலையில் முன்னணிப் போர்முனையில் பங்காற்ற முடியாத நிலையில் இன்று உள் ளது. இத்தகைய முன்னணிப் படைகளின் இழப்பு, படையினரின் தாக்குதற் பலத்தை சிதைத்துவிட்டிருக்கின்றது. இந்நிலையில் ஆனையிறவு உள்ளிட்ட யாழ்ப்பாணத்திற் கான நுழைவாயில்களை புலிகளிடம் இழந்து விட்ட படைத்தரப்பு யாழ்ப்பாணத்திற்கெழுந்த அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக சிதைக் கப்பட்ட இவ் டிவிசன்களின் எஞ்சியவர்களையே நம்பியிருக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள் ளது. இப்படைவலுவின் போதாமை கருதி இவற்றை ஒருங்கிணைத்து நடவடிக்கையில் படைத்தரப்பு பயன்படுத்திவருகின்றது. இத னால் பயன்படுத்தப்படும் இப்படைவலுவும் மேலும் இழப்புகளைச் சந்திக்கவேண்டியுள்ளது.

மொத்தத்தில் இந்நடவடிக்கைகளினால் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு மீதான அச்சுறுத் தலை தவிர்க்க முடியவில்லை. புலிகளின தாக்குதற் பலத்தை சிதைக்கமுடியவில்லை. படையினரின் போருக்கான மனோதிடத்தை உயர்த்த முடியவில்லை. இராணுவ சமநிலை யில் புலிகளின் கை மேலோங்கிவிட்டதான சர்வதேச மதிப்பீட்டைக் குலைக்க முடிய வில்லை. ஆக, இவற்றிற்கு எதிர்மாறான நிலையையே நடவடிக்கை அடைந்தது. ஆனால் அரசாங்கமோ புலிகளின் முன்னேற்றத்தை தாம் தடுத்து நிறுத்திவிட்டதாகவும், புலிகள் பாரிய இழப்புகளைக் கண்டுவிட்டதால் தொடர் ந்து முன்னேற முடியாதிருப்பதாகவும், தமது புதிய ஆயுதக் கொள்வனவு புலிகளை முடக் கிவிட்டதாகவும், மீண்டும் இழக்கப்பட்ட பகு திகள் பிடிக்கப்பட்டு வருகின்றன என்றும் தாம் போட்ட கோசத்தை மெய்ப்பிப்பதற்காக நட வடிக்கைகளை காட்ட முயல்கின்றது. ஆனால் அவை கண்ட பேரிழப்பு ஒருபுறம் போக புலி கள் ஓயாத அலைகள் -4ஐ தொடங்கி தாம் தேர்ந்தெடுத்த நிலப்பகுதியில் களத்தைத் திறந்து எஞ்சியுள்ள இராணுவ பலத்தை சிதைத்து யாழ் மீட்பிற்கான முன் நடவடிக் கைச் சமர் ஒன்றைத் தொடங்கியுள்ளனர்.

26.09.2000 அன்று பகல் 2.45 மணியள வில் கிளாலி, பளை, நாகர்கோவில் என மும்முனைகளில் ஓயாத அலைகள் -4 சம ரைத் தொடங்கினர் புலிகள். அடுத்து நகர்ந்த இரண்டு நாட்களுக்குள் நடந்த சண்டைகளில்



9கி.மீ நீளமாக தொடர் காவலரண்களைக் கைப்பற்றி கிளாலி, எழுதுமட்டுவாள் படைத் தளங்களுக்கு அமைக்கப்பட்ட முன்னரங்க பாது காப்பை உடைத்து புலிகள் முன்னேறினர். இத்தகைய நகர்வை அடுத்து புலிகள் தொடு க்கும் அடுத்த தாக்குதல் பிரதான தளங்க ளான கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர்கோவில் படைத்தளங்களின் மீதான நேரடித் தாக்குதலாக அமையுமென்பதால் புலிகளின் ஒரு பாய்ச் சல்கூட தளத்தை வீழ்ச்சியடையச் செய்யும் நிலையுள்ளது. அத்துடன் இவற்றிற்கிடையி லான விநியோக மார்க்கங்களும், பாதுகாப்பு வியூகங்களும் பரஸ்பர தொடர்பு கொண்ட வலைப்பின்னலாக அமைந்திருப்பதால் ஒன்றின்

க்கு முந்திய மணியோசை

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓயாத அலைகள் -4



வீழ்ச்சி மற்றதினது வீழ்ச்சிக்கும் அடிகோலும் என்பதை உணர்ந்துள்ள படைத்தரப்பு தனது திரட்டக்கூடிய படையனைத்தையும் புலிகளை எதிர்கொள்வதற்காக இக்களமுனையில் நிறுத்த வேண்டியுள்ளது. இழக்கப்படும் படைத்தொகைக்கேற்ப புதிய படையணி களைக் கொண்டுவந்து நிறுத்தவேண்டிய கள நிர்ப்பந்தத்தை உருவாக்கியதன் மூலம் சிறீ லங்காவின் உண்மைப் படைத்திரட்டு நிலை கொண்டுள்ள யாழ்ப்பாணத்தில் முன்னணிப் படைகளைக் கவர்ந்தழிக்கும் "கொலைப் பொறி"யை ஏற்படுத்தி ஓயாத அலைகள் -4 களத்தை இயக்கி வருகின்றனர் புலிகள்.

யுத்தத்தின் இறுதி வெற்றியென்பது எதி ரிப்படை போரிடும் மனநிலையை இழத்தலி லேயே தங்கியிருக்கின்றது. போரிடும் மன நிலையிழப்பு என்பது வெற்றியை அடைய முடியாத தொடர்ச்சியான உயிரிழப்புக்களி லேயே தங்கியிருக்கிறது. புலிகள் விடுதலைப் பயணத்தில் வன்னிச்சமர் நடவடிக்கைகளில் தமது மரபுப்போர் ஆற்றலைக்கொண்டு எதிரி ஒரு தந்திரோபாய பின்வாங்கலைச் செய்ய முடியாதவாறான தாக்கியழிப்புச் சமர்களையே செய்துவந்துள்ளனர். வன்னிக்களத்தில் இரா ணுவம் தனது நடவடிக்கையின் இலக்குகளை எட்டவோ, தமது இலக்குகளிலிருந்து இரா ணுவத்தினரை தப்பவோ புலிகள் அனுமதித் திருக்கவில்லை.

ஓயாத அலைகள் -4 தொடங்கப்பட்ட திலிருந்து MI-24 உலங்குவானூர்தி ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டும், மற்றொன்று சேத மடைந்தும் 250 வரையான இராணுவம் கொல் லப்பட்டதுமான 19/12/2000 திகதிய சண்டை வரையில் 850 வரையான படைத்துருப்புக்கள் கொல்லப்பட்டதுடன், 550 வரையிலானோர் காயப்பட்டு களத்திலிருந்து அப்புறப்படுத் தப்பட்டுள்ளனர். (அரசு 266 பேர் கொல்லப் பட்டும் 2000 பேர் காயமடைந்ததாகவும் அறிவித்தது) இழக்கப்பட்ட படையினர் 53,55வது டிவிசன்களையே பெரும்பாலும் சேர்ந்த வர்கள். புலிகள் தேர்ந்தெடுத்த "கொலை முனைக்கு" தனது முன்னணிப் படைகளை தொடர் அழிவுகளுக்கு மத்தியிலும் அனுப் பியே ஆகவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் படைத்தரப்பு சிக்கியிருக்க, மறுபுறம் ஓயாத அலைகள் -4இன் கடல் நடவடிக்கையாக கடற்புலிகள் திருமலைத் துறைமுகத்தின்மீது நடத்திய பாய்ச்சலால் படைத்தலைமை அதிர்ந்து போயுள்ளது.

யாழ் குடாநாட்டு ஆக்கிரமிப்பும், ஆக்கிர மிப்பு இராணுவமும் கடல்வழி விநியோகத் தையே ஆதாரமாகக் கொண்டவை. கடற் புலிகளின் பலம் விநியோக மார்க்கத்திற்கும், விநியோகத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாகவே இருந்துவந்துள்ளது. இந்நிலையில், குடா நாட்டை மீட்டெடுப்பதற்காக புலிகள் ஒரு சமரைத் தொடங்கியுள்ள சூழலில் விநியோகம் கொண்டிருக்கக்கூடிய பளு சாதாரண சூழ லைவிட பல மடங்கு அதிகமாகவே படைத் தரப்பை அழுத்தும், பளுவைச் சுமப்பதில் சிறு பிசிறு ஏற்பட்டாலும்கூட அது நேரடியாக யுத்தத்தைப் பாதிப்பதாகவே இருக்கும். இத் தகையதொரு சூழலில்தான் கடற்புலிகள் திருகோணமலைத் துறைமுகத்தினுள் புகுந்து ஒரு அதிர்ச்சித் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

யாழ் குடாநாட்டு இராணுவத்திற்கு விநியோகத் தளமாக திருகோணமலைத் துறைமுகமே இருந்துவருகின்றது. அத்துடன் வடக்கு, கிழக்கு கடல்ரோந்து கண்காணிப்பு நடவடிக்கைக்கான கடற்படைத்தளமும் இத் துறைமுகமே. எனவே யாழ் குடாநாட்டுப் போருக்கு இது ஜீவாதாரமானது ஆயின், இதன்மீதான தாக்குதலும் குடாநாட்டு இரா ணுவத்தின் ஜீவாதாரத்தின் மீதான தாக்கு தலாகவே கொள்ளமுடியும். இத்தகையதொரு நுட்பமான தாக்குதலையே 23.10.2000 அன்று புலிகள் நடத்தியிருந்தனர்.

இந்தப் போரில் திருகோணமலைத் துறை முகத்தின் முக்கியத்துவம் கருதி மிகக் கடு மையான பாதுகாப்பு ஏற்பாடுகளை படைத் தரப்பு செய்திருந்தது. இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகளை உடைத்து 23ம் திகதி அதி காலை துறைமுகப்பகுதியில் புகுந்த கடற் கரும்புலிகளினது தாக்குதற் படகுகள் துறை முகத்தினுள் நிலைகொண்டிருந்த கப்பற் தொகுதிமீது தாக்குதலை நடாத்தின.

இதேவேளை திருமலைப் படையணி துறை முக கடற்படைத் தளம்மீதும் கப்பற் தொகு திமீதும், உதவிக்கு விரைந்த இராணுவத் தினர் மீதும் கடற்படையினர் மீதும் மோட் டார் எறிகணைத் தாக்குதலை நடத்தியது. உதவிக்கு வந்த MI-24 உலங்குவானூர்தி "ராதா விமான எதிர்ப்பு அணி" யினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது. தாக்குதலுக்கு தளமாகப்பயன் படுத்தப்பட்டதாக படைத்தரப்பு கருதும் "மாபிள் பீச்" வெள்ளை மணற்பகுதி, நாச்சிக்குடா என் பவை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருக்கக்கூடிய நிலையில் எவ்வாறு புலிகள் கனரக ஆயுதங்களுடன் நகர்ந்து தாக்கினர் என்பது படைத்தரப்பை திகைப்பில் ஆழ்த்தி யுள்ளது. யாழ். குடாநாடு மீது புலிகள் நடவ டிக்கையை தொடங்கியுள்ள இச்சூழலில் துறைமுகம் மீதான புலிகளின் இத்தகைய ஒருங்கிணைந்த வெற்றித் தாக்குதல் படைத் தரப்பை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. மொத் தத்தில் ஓயாத அலைகள் -4 நடவடிக்கையில் இரு MI-24 உலங்குவானூர்திகளை இழந்த துடன், ஒரு பீரங்கிப் படகையும், இரண்டு கடற் படைக் கப்பல்களையும், ஒருவிநியோகக் கப் பலையும் இழந்ததோடல்லாமல் 700 வரையான இராணுவம் கொல்லப்பட்டும் 2800 வரையிலா னோர் காயமடைந்தும் உள்ளதான களமுனை யின் இழப்பிற்குப் பின்னும் சிங்கள அரசாங் கத்தின் யாழ் ஆக்கிரமிப்பு மீதான விடாக் கண்டத்தனத்தால் புலிகளின் தாக்குதலுக்கு முகம்கொடுக்க படைத்தரப்பு திணறுகின்றது.

புலிகளோ யாழின் மீட்பிற்காக வாய்ப் பானதும், மக்களது உயிர்ச்சேதம் நிகழாத தும், உடமைச் சேதத்தைத் தவிர்க்கக் கூடி யதுமான நிலப்பிரதேசத்தில் யுத்தத்தை மையங்கொள்ள வைத்து, தாம் திறந்த களப் பூமியில் எதிரிப்படைகளை கவர்ந்தழிக்கும் நடவடிக்கையாக ஓயாத அலைகள் -4ஐத் தொடர்கின்றனர்.

யாழ்ப்பாணத்தை தக்கவைப்பதற்காக நிறுத்தப்பட்ட எதிரியின் முன்னணிப் படை சிதையச், சிதைய யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு எனும் சிங்கள அரசின் கனவுக் கோட்டை சரிந்து கொண்டிருக்கின்றது. ஓயாத அலை கள் -4 தொடர்கிறது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வேகாவனம்

வேகாவனமென்றால் வெந்துதணியாக்காடு,
எரியாவனமென்றும் எழுதலாம்,
ஒட்டுசுட்டானும் வேகாவனமென்றே விளங்குகிறது.
ஒட்டுசுட்டானுக்கு மட்டுமல்ல
வன்னி முழுமைக்கும் தகுமிந்நாமம்,
முல்லையும்,
மருதமும்,
நெய்தலும் சேர்ந்து
சொல்லவொண்ணா அழகுச் சோதியாய் மிளிரும் வன்னி
எம் தாயின் வயிறு.
தண்புனல் நிறைந்த தாமரைக் குளமும்,
வெண்கொக்குத் தவமியற்றும் விரிந்த வயல்களும்,
விண்தொட நிமிர்ந்த வியத்தகு வனமும்,
அலைவந்தெறியும் ஆழியாய்க் கரையுமாக
அழகெடுத்த கலையுடுத்த அணங்கா
வளம் கொளித்துக் கிடக்கின்றாள் வன்னிமகள்.
பால் சுரக்கும் மடிகனத்த பசுக்களும்
வாலடித்துத்திமிரும் காளைகளும்
வயலுழுது வரும் எருமைகளும்
வன்னிக்கு முதுகு,
வைகாசி மாதம் வன்னிக்கு வளைகாப்பு
அந்த மாதத்தில்தான் இங்கே பொங்கல் நடக்கும்.
காட்டு மரங்களுக்கும் அப்போதுதான்
வசந்தோற்ஸவம்
பூத்துக்கிடக்கும் பூவனம்.
காற்றுக்கும் ஆயிரம் கச்சேரி
குழலெடுத்து ஊதிக் குதுாகலிக்கும்.
கூத்து வன்னி நிலத்தோடு கூடப்பிறந்தது.
தண்டையும், சிலம்பும் சிலம்பாத ஊர்களென
இங்கே எதுவும் கிடையாது.
ஆசைகள் பெரிதாய் எதுவுமற்ற அற்புதமாக ஜீவிதம்,
கொத்துக்கு அளவான அரிசி
குடத்துக்கு அளவான தண்ணீர்
முள்ளுக்கும் நோகாத ஒரு வாழ்க்கை முறை.
பொல்லாப்பெதுவுமின்றி இங்கே பொழுதுபுலரும்.
பண்டார வன்னியனும்
கைலாய வன்னியனும்
அடங்கமறுத்த அபூர்வமண்.
குருவிச்சி நாச்சியார் இந்தப்பூமியிற் தான்
ஆடினாள்,
பாடினாள்,
அடங்கினாள்,
அரியாத்தையென்ற எங்கள் பெரியாத்தை
ஆனை அடக்கிய அற்புதம் இங்கே தான் நடந்தது.
வன்னிக்கு எவரும் விலங்கிட முடியாது
இது அடங்காப்பற்று
அடங்காததில் இதற்கு அத்தனை பற்று.
காந்திதேசம் எங்களுக்குக் கண்ணி வைத்த காலத்தில்
விடுதலை அவாவிய அனைவருமே
விக்கித்து நின்ற நாட்களில்
அடங்கா மண்தானே அடைக்கலம் தந்தது.
இந்தச் சந்தனக்காடுகள் தானே தஞ்சமளித்தன.
வன்னி மண்ணே எமக்கு வளையாச்சு
வென்று மீண்டனர் எங்கள் வீரர்கள்
மீண்டும் காலச்சக்கரத்தின் ஒரு சுழற்சியின் பின்
சங்கிலியன் தோப்பிலிருந்து
பண்டார வன்னியனின் பழைய அரண்மனைக்கு
அணையா விளக்குடன் அடைக்கலமானோம்.
இன்றும் வன்னிமண்ணே எமக்குக் கவசமானது.
ஓடி வந்த போது வாரி அணைத்தவளே!
வன்னி மண்ணே நின்னை வணங்குகின்றோம்.
உன் பாதக்கமலம் பற்றினோம்.
வதையுண்டும் எழுந்தாய்
எரியுண்டும் நிமிர்ந்தாய்
வீரத்திலூறியது வேகாவனம்.

— புதுவை இரத்தினதுரை





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"யாழ்.குடாநாடு கூப்பிடு தூரத்திற்குள்ளேயே போராளிகளது கால் பதிந்துவிட்ட நிலையில் தன்னை மீட்க பெரும் விடுதலைப் படை வரும் என்ற எதிர் பார்ப்புடன் காத்திருக்கிறது."

# யாழ்.குடாநாடு... ...விடுதலை

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் மிகவும் முக்கியமான ஒரு வரலாற்றுக் கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இவ்வரலாற்றுக் கட்டம் இரண்டு பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

1. எமது தேசியப் பரிமாணம்
2. சர்வதேசப் பரிமாணம்

இவ்விரண்டு பரிமாணங்களும் தனித் தனியே இயங்குபவையல்ல. மாறாக ஒன்றில் ஒன்று கலந்து, நெருங்கிய உறவு கொண்டு இயங்குகின்றன. தேசியப்பரிமாணத்தின் காத்திரமான வீச்சு சர்வதேசப் பரிமாணத்தின் புதிய இயங்குதலுக்கு, புதிய நகர்வுக்கு வழிவகுக்கிறது.

பொருத்தமான வரலாற்றுக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலைகள்- 3 வெற்றிகரத் தாக்குதல் நடவடிக்கைகள் சர்வதேசப் பரிமாணத்தில் ஒரு பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியது. இதனால் எமது தேசிய விடுதலைப்போராட்டம் குறித்த சர்வதேசப்பார்வையும் மாறியுள்ளது. முன்னர் உள்நாட்டு மோதலாக, இனமோதலாக, குறைந்த வலு மோதலாக கணிக்கப்பட்டு, மலினப்படுத்தப்பட்டது. ஒரு தேசிய இனத்தின் உயிர் வாழ்க்கைக்கான தற்காத்தல் என்ற கணிப்பு ஏற்படவில்லை. மாறாக "ஜனநாயக அரசாங்கத்திற்கெதிரான" பயங்கரவாதமாக கணிக்கப்பட்டது. எனவேதான் சிறீலங்காப் பேரினவாத அரசிற்கு ஆயுதங்கள், பயிற்சிகள், ஆலோசனைகள் அமெரிக்காவால் பெருந்தன்மையுடன் அள்ளிக் கொடுக்கப்பட்டன.

ஓயாத அலைகள் -3 வெற்றிகர நடவடிக்கைகள் இக்கருத்தோட்டத்தில் பெரும் ஆளணிச் சேதத்துடன் இராணுவத்தளபாட இழப்புடன் சிறீலங்கா ஆயுதப்படைகள் தாம் ஆக்கிரமித்திருந்த பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்டு யாழ். குடாநாட்டிலிருந்து தப்பியோட முற்பட்டனர். தமிழ்மக்கள் அல்லலுறும்போது மௌனித்து நின்ற சர்வதேச சமூகம் சிறீலங்காப் பேரினவாத ஆயுதப்படைகள் தப்பிஓடுவதற்கு வசதியாக "மனிதாபிமான" உதவிகளைத் தர முன்வந்தது. அக்கறைகள் அப்படியிருந்தது.

ஆக்கிரமிக்கப்பட்டிருந்த யாழ். குடாநாட்டில் "ஓயாத அலைகள்" ஆர்ப்பரித்து தாக்குதலைத் தொடர்வது சிறீலங்கா ஆயுதப்படைகளுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கவல்லது. தாம் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது சிறீலங்காப் பேரினவாத அரசியலாளர் உணராதது அல்ல. "இனிப் பேச்சுவார்த்தைகள் கிடையாது, யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளை ஒழிப்போம்" என தேர்தல் காலத்தில் பேரினவாத உச்சிக்கிளையில் நின்று கொக்கரித்தவர்கள், இப்போது யாழ். குடாநாட்டை "எப்படியும் தக்கவைப்பது" என்பதில் குறியாக உள்ளனர். யாழ். குடாநாட்டிலிருந்தே தாம் விரட்டப்பட்டால் தமது அரசியல் இராணுவ இருப்பே கேள்விக்குரியதாகிவிடும், தமிழீழ தேசத்தின் உருவாக்கலுக்கு வழிவகுக்கும் என்பதை அவர்கள் புரிந்து வைத்துள்ளனர். ஆனால் எமக்கோ யாழ். குடாநாட்டிலிருந்து சிறீலங்காப் படைகளை விரட்டுதல் என்பது



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிக்க அவசியமானது. இது தேசிய விடுதலைப் போராட்ட நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

யாழ். குடாநாட்டிலிருந்து சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் துடைத்தெறியப் படுதல், பெரும் மாற்றங்களுடனான தொடர் நிகழ்வுகளை, எமக்குச்சாதகமான தேசிய, பிராந்திய, சர்வதேசிய நிலைப்பாடுகளை ஏற்படுத்தும். அதேவேளை, சிறீலங்காவில் பெரும் முரண்பாடுகளை, உள்மோதல்களைக் கொண்டு வரும்

யாழ். குடாநாட்டு மீட்பு பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தவல்லது.

* பெருமளவில் இராணுவம் யாழ். குடாநாட்டில் குவிக்கப்பட்ட நிலையில் ஆளணி ஆயுத தளபாட இழப்பை சந்திப்பின் சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பு சீர்குலைக்கப்படும். மீளவும் நிமிர முடியாத வகையில் முதுகெலும்பு உடைக்கப்பட்டு விடும்.

* சிறீலங்கா ஆயுதப் படைகளின் எஞ்சி உள்ளவர்களும் சிதைந்து தப்பிஓடும் மனப்பாங்கு உருவாகும்.

* சிறீலங்கா அரசின் பேரினவாத அத்திவாரம் உலுப்பப்பட்டு வெடிப்புக்காணும். ஏனெனில் சிறீலங்காவின் அரசியல் சமூக பொருண்மிய அமைப்புக்கள் யாவுமே பேரினவாத நிறுவனங்களாகவே உருவாக்கப் பட்டு இயங்குகின்றன.

*மேற்குறித்தவை யாவுமே சிறீலங்காவின் சமூகச் சீர்குலைவிற்கு இட்டுச்செல்ல நவீன ஏகாதிபத்தியத்தின் மூலதனத்தை மட்டும் நம்பிக் காலத்தை ஓட்டும் சிறீலங்கா அரசு கையறு நிலையில் “காணாமலே” போய்விடும்.

*எமது தேசிய விடுதலைப் போராட்டம் சிறீலங்காவின் உள்விவகாரமல்ல. மாறாக ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் உயிர் வாழ்க்கைக்கான, இருப்பிற்கான வீறார்ந்த சிறந்த தலைமைத்துவத்தின் வழிகாட்டலைக் கொண்டுள்ள விடுதலைப் போராட்டமாகும் என்பதை அனைத்துலகத்திற்குமே உணர்த்திவைக்கும்.

உலக வரலாற்றில் அடிமை விலங்குகளை அறுத்தெறிவதற்கான ஆக்கிரமிப்பிற்கெதிரான பெரும் போராட்ட குறியீடுகளாக சில நகரங்கள், பிரதேசங்கள் விளங்குகின்றன. சீனப்புரட்சி வரலாற்றில் “நெடும் பயண” இலக்காகிய யேனான் பிரதேசம் இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜேர்மன் படைகளின் முற்றுகையை உடைத்ததன் மூலம் யுத்தத்தின் போக்கையே மாற்றிய ஸ்ரலின் கிராட், யூதமக்களின் இலக்காக விளங்கிய ஜெருசலம், கியூப புரட்சி வீரர்களது தளமாகிய சியோமஸ்த்ரா எனப் பல போராட்ட திருப்பு முனைக்குறியீடுகளாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளன.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் யாழ். குடாநாடு முக்கிய இடத்தைப் பெறுகிறது. யாழ். குடாநாடு ஒருபெரும் மக்கள் தொகையைக் கொண்ட பிரதேசம் என்பதற்கும் அப்பால் விடுதலைப் போராட்டத்தின் ஒரு புதியபரிமாணத்திற்கான அரும்பு விடும் வித்தாக யாழ். குடாநாடு கண்முன் விரிந்து நிற்கிறது.

சிறீலங்காவின் ஆக்கிரமிப்பிற்குட்படுத்தப்பட்டு, விலங்கிடப்பட்டாலும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது எதிர்ப்பைக் காட்டத் தயங்காத யாழ்.குடாநாடு கூப்பிடு தூரத்திற்குள்ளேயே போராளிகளது கால் பதிந்துவிட்ட நிலையில் தன்னை மீட்க பெரும் விடுதலைப் படை வரும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறது. பலம் பெறுதல் என்பது ஆளணிப் பெருக்கம் என்ற முன்தேவையைச் சார்ந்து நிற்கும் இன்றைய சூழலில் நாம் பெரும் மக்கள் படையாக உயரவல்லவர்கள் என்பதை வெளிப்படுத்துவதே இன்றைய உடனடி வரலாற்றுத் தேவையாகும்.

- குத்தூசி

# விடுதலைப் போராளி

காலத்தின் கட்டளையால்
தாய் மண் காக்கப்புறப்பட்டவன்(ள்)
தாய் மண்ணின் விடிவிற்காய்
தன்னலத்தை மறந்தவன்(ள்)
தமிழின் வாழ்விற்காய்
தன் வாழ்வை அர்ப்பணம் செய்தவன்(ள்)
அவன்(ள்) பயணிக்கும் பாதை
அபாயம் நிறைந்தது.
அவனை(ளை)
துன்பங்கள் துரத்தின.
துயரங்கள் வருத்தின.
சோதனைகள் சுற்றிப்படர்ந்தன
வேதனைகள் உச்சி வரை வீசின.
எல்லாவற்றையும் வென்று
விடுதலைப் பாதையில்
ஆழக்காலினைப் பதித்தான்(ள்)
குடும்பம் என்ற கூட்டை விடுத்து
நாடு என்ற வானில் சிறகடிக்கும்
சிட்டானான்(ள்)
உறவுகள் பல வந்து அவனை(ளை)
தொட்டன
பாசங்கள் பலவந்து அவனை(ளை) வருடின.
எல்லாவற்றையும்
ஏற்றான்(ள்) எளிமையுடன்
சுமந்தான்(ள்) தூய்மையுடன்
கண்முன்னே,
களத்தில் பல உறவுகள் கல்லறை புகுந்தனர்.
பல பாசப்பிணைப்புக்கள் உடல்சிதறி
விடுதலைக்கு உரமூட்டினார்கள்.
காதுக் கெட்டிய செய்திகளால்
கண்கள் கலங்கின.
எனினும் கண்ணீர் கசியவில்லை விழிகள்
ஏனெனில் தன் கண்ணீரில்
களத்தில் விதையான வீரர்கள்
கனவுதனை கரைக்க விரும்பவில்லை.
தன் சுவாசம் உள்ளவரை
தன் சுடுகுழலும் சுவாசிக்கும் என்ற
உறுதியோடு விடுதலைப் பயணத்தில்
அவன்(ள்)

—போராளி இசையழகன்



குறியீடு !



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசிய மக்கள்ட கட்டுமானத்தின் வளர்ச்சியும், எ

தமிழர் தாயகப் பிரதேசத்தில் எழுந்த தமிழீழ மக்களின் எழுச்சியின் விளைவாக அடக்குமுறையாளர்களுக்கெதிரான போரில் தமிழினம் வியத்தகு வெற்றிகளைச் சமைத்து நிற்கின்றது. இப்பேரெழுச்சியின் பயனாக ஆக்கிரமிப்பாளர்களினால் ஆக்கிரமிப்பிற்குட்படுத்தப்பட்டிருந்த தாயகப் பிரதேசத்தின் பாரியபகுதி மீண்டும் தமிழர் சேனையிடம் மீண்டுள்ளது.

இதுவரை காலமும் தமிழினத்தின் மீது சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்துவிட்ட போரின் அனர்த்தங்களினாலும், போர் அழுத்தங்களினாலும் தமிழினம் சொல்லொணாத் துன்ப துயரங்களுக்கும், பெரும் இடர்களுக்கும் முகம் கொடுத்து நின்ற வேளையிலெல்லாம் ஓரம் நின்று கைகட்டிப் பார்த்திருந்த வல்லரசுகள் பல தற்போதைய காலகட்டத்தில் தமிழினத்தின் பேரெழுச்சி நிலையினைக் கண்டுணர்ந்து சிங்கள அரசுக்கு போரை விரைந்து முடிவிற்குக் கொண்டு வருவதற்கு அமைதிப் பேச்சுக்களில் ஈடுபடுமாறு அழுத்தங்களையும், அரசியல் ஆலோசனைகளையும் நல்கி நிற்கின்றன.

இன்றைய சர்வதேசப் போக்கின் நியதியாகவுள்ள "பலமே" வெற்றியைத் தீர்மானிக்கின்றது என்பது பெரும் சக்தியாக விளங்குகின்றது. இந்த வகையிலேயே அண்மைக் காலங்களாக தமிழர்சேனை படைத்து வரும் வியத்தகு போரியல் சாதனைகள் மூலம் தமிழினம் பலம் பொருந்தியதொரு இனமாக இனங்காட்டிக் கொண்டமையின் பிரதிபலிப்பே மேற்படி மாற்றங்கள் எனலாம். (எந்தவொரு நாட்டிலும் சரி நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களின் இறுதிக் காலகட்டத்தில் போராட்டமானது மக்கள் மயப்படுத்தப்பட்டதாக மாறுவதையும் அது அடக்குமுறையாளர்களுக்கெதிராக வெற்றிகளைக் குவிப்பதையும் வரலாறுகள் சுட்டி நிற்கின்றன.) குறிப்பாக எல்லோரும் எல்லாமும் போருக்கே எனும் நிலை உருவாக்கப்பட்டு, முழுமூச்சுடன் உழைத்து வியத்தகு சாதனைகளையும் வெற்றிகளையும் கண்டு பல விடுதலைப் போராளிகள் தமக்கான தாயகங்களையும் ஸ்திரப்படுத்திக் கொண்டனர். இதிலும் குறிப்பாக எதியோப்பிய அரசுக்கெதிராகப் போராடிப் பெரும் சவால்களை எதிர்கொண்டு தமக்கான தேசமான எரித்திரியாப் பிரதேசத்தை போராளிகள் தமதாக்கிக் கொண்டனர். இதற்கு முன்பாகவே உலகின் முதன்மை வல்லரசாகக் கணிக்கப்பட்ட அமெரிக்க கழுகுப் படைகளோடு மோதி வியட்நாம் போராளிகள் பெரும் வெற்றிகள் குவித்தனர். இவை போன்ற இன்னும் பல விடுதலைப் போராட்டங்களை இங்கு குறிப்பிட முடியும்.

அண்மைக்காலமாக இராணுவக் கட்டுப்பாடற்ற தமிழர் தாயகப் பிரதேசங்களில் என்றுமில்லாதவாறு தேசிய மக்கள்படைக் கட்டுமானம் பேரெழுச்சி கொண்டு வீரியம் பெற்று நிற்கின்றது. தமிழீழ மனிதவலு அனைத்தும் ஒன்றிணைந்ததும் தமிழீழ வளங்களில் கணிசமானவையும், விடியலுக்கான போரின்பால் ஈர்க்கப்பட்டமையே இவ்வியத்தகு சாதனைகளைச் சாதித்துக்கொள்ள வழி செய்ததோடல்லாமல், போராட்டத்தின் உண்மை நிலையினை மேற்கு நாடுகளின் செவிகளில் எதிரொலிக்கவும் செய்தது. இந்த வகையில் தனியரசு அமைப்பதற்கான விடுதலைப் போராட்டப் பாதையில் மக்கள் எழுச்சியானது மைல்கற்களாக நிற்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளைனைத்தும் "ஓடுகிற தண்ணீருக்கேற்ப நீந்திச் செல்பவர்களாக" இருந்து கொண்டு இனவாத தேசிய அரசை அமைக்கும் முயற்சியில் ஈடுபாடு காட்டி வருவதோடல்லாமல் ஆளும் தரப்பானது மறுபுறம் அடுத்த கட்டப் போருக்கு ஆட்திரட்டுவதிலும் நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலும் அதிதீவிரம் காட்டி வருகின்றது. ஆக மொத்தம் அமைதிப் பேச்சு வார்த்தைகளில் தாம் ஆர்வமுள்ளவர்களாக வெளியுலகிற்கு இனம் காட்டிக்கொள்வதிலும் தவறவில்லை. தமிழீழ மக்களினது போராட்டக் குரல்வளையை நெரிப்பது தமிழ் பேசும் மக்களின் அரசியல் பொருளாதார ஆத்மாவையே வேரறுக்கக்கூடிய அரசியல் தீர்வுகளைத் திணிப்பது போன்ற சிங்கள அரசினது கபடத்தனங்களைப் புரிந்து கொண்டு தமிழினமாகிய நாமனைவரும் எம்மைத் தற்காத்துக் கொள்வதற்கும் அடக்குமுறையாளர்களின் சூழ்ச்சி வலைகளிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் எமது தேசிய மக்கள் படையின் இராணுவப் பேரெழுச்சியானது இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாத தொன்றாக அமைந்துவிட்டது.

விடுதலைப்போரை ஓரம் நின்று பார்க்கின்ற நிலையானது அறவே தவிர்க்கப்பட்டு அனைத்து மக்களும் பூரண அரசியல் இராணுவ அறிவுப் பயிற்சி பெற்றவர்களாகி போரின் பங்காளிகளாக மாறிய நிலைமையானது சர்வதேச மட்டத்தில் எமக்குக் கிடைத்திருக்கின்ற அங்கீகாரமொன்றிற்கும் வழிவகுத்துள்ளது. இதுவரை காலம் தமிழினத்தின் கழுத்துக்களில் சுருக்குக் கயிறுகளை வீசி அவற்றை தங்கச்சங்கிலிகள் என்று உலகின் கண்களுக்கு இருட்டடிப்புச் செய்து வந்த அரசின் பொய் முகங்கள் யாவும் கிழித்தெறியப்பட்டுள்ளன.

போராட வலுவுள்ளவர்கள் நிரந்தரப் படையாகவும் மீதமானவர்கள் எல்லை காப்புப்படை, துணைப்படை, கிராமியப்படைகளாகவும் இராணுவக் கட்டுமானங்களிலும் வளர்ச்சி காணப்பட்டுள்ளது. அத்துடன் விழிப்புணர்வுகளை மக்களிடத்தில் ஏற்படுத்தும் விதமாக போரெழுச்சி மாநாடுகள் மூலமும் கருத்தரங்குகள், மக்கள் தரிசிப்புக்கள் போன்ற




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...டைக் தீவிர ...ழுச்சியும்

அ.அன்ரனி

நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் அனைத்து மக்களிற்கும் பூரண இராணுவ, அரசியல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்ற பணியில் மீதியானவர்களும் பங்காளிகளாக மாறியுள்ளனர். இந்த ஒட்டுமொத்த தமிழினத்தின் பேரெழுச்சியினாலேயே அனைத்து சமூகங்களினதும் நாவில் உரைக்கப்படுகின்ற ஒரு பலம் பொருந்திய இனத்தவர்களாகக் கணிக்கப்படுகின்றோம். இவ் எழுச்சியின் மூல வேராகவும் தமிழீழத்தின் தாங்கு சக்தியாகவும் விளங்குகின்ற தலைவர் பிரபாகரனின் நேரிய போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியின் உச்சக்கட்டமே இன்று தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் தேசிய மக்கள்படை பேரெழுச்சி வடிவங்களாகும்.

இலங்கையின் பல பாகங்களிலும் அதிலும் குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் புலிகளின் போர்வலுத் தாக்குதல்களைத் தடுக்கும் முகமாகவும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை தக்கவைப்பதற்காகவும் சிறீலங்கா படைபலத்தை செறிவாக்கி பயன்படுத்த வேண்டிய நிலைக்குச் சிங்கள அரச படைத்தரப்பு தள்ளப்பட்டுள்ளது. இப்படைகளின் சமநிலைக்கேற்ப வடதமிழீழத்தில் இன்று பெரு வளர்ச்சி கண்டு நிற்கும் தமிழ்த் தேசிய இராணுவ மக்கள்படைக் கட்டுமானத்தைக் கண்டு அரசு கலக்கம் கொண்டுள்ளது. ஆகவே நாளைய தமிழீழத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற படைவலுச் சமநிலையை தமிழினம் பெற்றிருப்பது என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி கடும் உழைப்பின் பயனாய் நாம் பெற்றிருக்கும் இராணுவ வெற்றிக்களிப்பில் மிதப்பதோடு மாத்திரம் நாம் நின்றுவிடாது மேலும் மேலும் ஒட்டுமொத்த தமிழினத்தின் மத்தியில் அரசியல் இராணுவ விழிப்புணர்வினை ஏற்படுத்தி தமிழீழத்தின் நிரந்தரப் படையைப் பலப்படுத்துவதில் ஈடுபடவேண்டும். நவீனரக ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டு மீண்டும் எம் மீது கொடும் போரைத் தொடுப்பதற்கான முஸ்தீப்புக்களில் இறங்கியுள்ள சிறீலங்கா அரசின் கபடத்தனத்தைப் புரிந்து கொண்டு எம்மை நாம் தற்காத்துக் கொள்வதற்காகவும் எமது பாதுகாப்பை பலப்படுத்துமுகமாகவும் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவதற்கு போர்ப்பங்காளிகளாக மாறிடல் வேண்டும். அதுவே வரலாற்றுக் கடமையாகும்.

# தமிழீழத்தின் நீங்காத நினைவுகளில் எம்.ஜி.ஆர்

இலங்கைத்தீவினிலே தமிழினம் கேட்பாரெவருமின்றி வேட்டையாடப் பட்டுக்கொண்டிருந்த வேளையில் தமிழீழத் தமிழர்களுக்காக ஓங்கிக் குரல் கொடுத்தவர் மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள். தமிழக முதல்வராக இருந்து கொண்டு தமிழீழ விடுதலைக்காக குரல் கொடுப்பதோடு நின்றுவிடாது விடுதலையை வென்றெடுக்க வல்ல தலைமையாக தமிழீழத் தேசியத் தலைவரை இனங்கண்டு ஆதரித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவது ஒன்றே தமிழீழத்தவர்களுக்கு மீட்சி தரும் என்பதை தீர்க்கதரிசனமாக எண்பதுகளின் ஆரம்பத்திலேயே உணர்ந்து கொண்டு அதற்கென காத்திரமான பங்களிப்பையும் வழங்கினார்.



## விடுதலைக்கு நிழல் தந்த விருட்சம்

17.1.1917 அன்று மலையகத்தில் கண்டி நகரில் ஆசிரியர் ஒருவரின் மகனாக மக்கள் திலகம் அவதரித்தார்.

இயல்பாகவே மக்கள் திலகத்திடம் நேர்மைத் திறனும், பிறர் இடுக்கண் கண்டு கவலையுறுந் தன்மையும் நிறைந்தே காணப்பட்டது. சிறீலங்காப் பேரினவாத அரசு தமிழீழ மக்கள் மீது குண்டு மாரி பொழிந்தும், துப்பாக்கியில் சுட்டும், சிறைப் பிடித்தும் வதைத்தும் துன்பம் அனுபவிப்பது கண்டு துடித்தார். ஈழத்தமிழர்கள் படும் அவலங்கள் கண்டுணர்ந்த எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழீழ மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தினை ஆதரிக்க முன்வந்தார்.

இதன் விளைவாகவே தமிழீழ மக்களுடைய விடுதலையை ஆக்கபூர்வமாக மீட்டெடுக்கக் கூடிய அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழீழ மக்களிற்கான தீர்க்கதரிசனம் மற்றும் நுண்மதி மிக்க விலைபோகாத தலைமையுமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களைக் கண்டுணர்ந்து மனிதநேயத்தோடு எண்ணிறைந்த உதவிகளைச் செய்தார். தாம் வகித்த முதல்வர் பதவிக்கு ஆபத்து வந்தாலும் வரட்டுமென தமிழீழ விடுதலைக்காக செயற்கரிய பங்களிப்புக்களைச் செய்தார்.

தமிழீழத்திலிருந்து தாய்த் தமிழகத்திற்கு ஏதிலிகளாக வந்த தமிழர்களுக்கு பல நல்வாய்ப்புத் திட்டங்களை வகுத்தார்.

தனது அரசு, கட்சி, சொந்தச் செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்தி தமிழீழ விடுதலைக்கு உதவிய புரட்சித் தலைவர் அவர்கள் தீராத சுகயீனம் காரணமாக 24.12.1987 அன்று இயற்கை எய்தினார்.

ஆண்டுதோறும் தமிழீழ மக்களால் எம்.ஜீ.ஆர் அவர்களின் நினைவு தினம் உணர்வுபூர்வமாகவும் நன்றிப் பெருக்கோடும் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. மக்கள் திலகம் அண்ணல் எம்.ஜி.ஆர் அவர்கள் மறைந்து பதின்மூன்று ஆண்டுகள் நிறைந்துள்ளநிலையில், தமிழீழத்தின் விடியலுக்காக எதுவித பிரதிபலனும் பாராது பாடுபட்ட அந்த நல்ல உள்ளத்தினை நினைவிற் கொள்கிறோம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆயிரம் கதை அளந்து ஆட்
# அபூர்வசிந்தா



வே.பாலகுமாரன்

ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி பற்றித்தானே கேள்விப்பட்டிருக்கின்றோம். இதுவென்ன புதிய தலைப்பு என எம் வாசகர் வியப்படையக் கூடும். எம் மக்களின் ஆயிரமல்ல பல்லாயிரம் தலைகளை வாங்கிய பின்னரும் சென்ற அக்டோபர் 19ஆம் திகதிய தேர்தலில் வெற்றிகிடைப்பதென்பது அன்று நிச்சயமற்ற நிலையிலே அம்மையாருக்கு இருந்தது. பெரும்போரை நடத்தியும் அமைதிப்பொதியென மாயவித்தை காட்டியும் பேரினவாதிகளையோ தமிழ், சிங்கள மக்களையோ ஏன் சர்வதேசத்தையோ திருப்தி செய்ய முடியாத கையறு நிலையே ஆறாண்டின்பின் அம்மையார் எதிர்நோக்கிய நிலை. அவ்வாறாயின் அம்மையாரின் முன்னணி எவ்வாறு 107 இடங்களைப்பெறவும் ரணில் 89 இடங்களைப் பெறவும் நேர்ந்தது என்கிற கேள்வி இங்கே எழுகின்றது அல்லவா?

இது எமக்கு அவசியமற்ற கேள்விதான். இருந்தபோதும் இக் கேள்வியின் விடை எமக்குத் தருவது பெரும் வரலாற்றுப் படிப்பினை. எப்படியும் வெல்லவேண்டும் என்பதற்காக அம்மையார் என்ன செய்தார் பாருங்கள். அக்டோபர் 10ஆம் திகதிக்கு சில நாட்கள் முன்னதாகவே அம்மையார் பெருவேகமாக இயங்கத்தொடங்கினார். இதுவரை தான் சொன்ன பொய்கள் அதைவிடச் சாதாரணம் என நிரூபித்தார். தனது வக்கிரம் பிடித்த மூளையிலிருந்து இனவாத நஞ்சு துணுக்கமாக நுணுக்கப்பட்ட இமாலயப்பொய்களை கதைகளாக உற்பத்தி செய்தார். உச்சப் பொய்களை தானும் அதியுச்சப்பொய்களை "நானும் வந்தேனய்யா நாகரீகக் கோமாளியென" வந்த பிரதமர் மூலமும் வெளிவிட்டார். அவரது இடக்கை வலக்கைகள் எனப்படும் நவீன நாகரிகக் காடையர்களான திசநாயக்காவும் மங்கள முனசிங்காவும் அவரது மூலக்கதைகளிலிருந்து பல குட்டிக்கதைகளை உருவாக்கி நாடெங்கும் பரப்பினர். இக்கதைகள் சிங்கப்பூரில் பிரபாகரன் கடிதத்தை ரணில் பெற்றதிலிருந்து தொடங்கி ரணிலும் புலிகளும் தன்னைக் கொல்லச் சதியென வளர்ந்து ஆனையிறவை பிடிக்கும் கதை, ரணிலும் பிரபாகரனும் செய்த உடன்பாட்டின் பிரதி இதோ என படிப்படியாக உச்சம் பெற்று தேர்தல் தினத்திற்கு முதல் நாள் புலிகளை போர்மூலம் அழித்து விட்டுத்தான் மறுவேலை என சூளுரைத்ததோடு முற்றுப்பெற்றது.

ஏற்கெனவே போரின் உயிரிழப்புக்கள், பொருண்மிய நெருக்கடிகள், வன்முறை கட்டுக்கடங்காமல் வழியும் சமூகச் சூழல் போன்றவற்றால் மனநிலை பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் அபூர்வ சிந்தாமணியின் இத்தகைய அதிர்ச்சி ஊட்டும் கதைகளால் முற்றிலுமாக குழம்பி அம்மையாரின் பணயக் கைதிகளாகினர். குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் விதத்தில் அரசியல் காடைத்தனமும் பெரும் தேர்தல் மோசடிகளும் அரங்கேறின. கண்டி, அனுராதபுரம், புத்தளம், மாத்தளை, கம்பகா, கேகாலை, குருநாகல், நுவரெலியா போன்ற மாவட்டங்களில் மிகப் பரவலாகவும் குறிப்பாக 17 தேர்தற்தொகுதிகளில் அப்பட்டமாகவும் வாக்குமோசடிகள் நடைபெற்றன என்பதே தேர்தலைக் கண்காணித்த குழுக்களின் ஏகமனதான முடிவு. இங்கெல்லாம் மீண்டும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பது இவர்கள் வேண்டுகை. ஆனால் சிறீலங்காவின் வரலாற்றில் இத்தகைய முன்மாதிரிகள் இல்லையென்பது உலகறிந்த உண்மை. இப்போது தெளிவான முடிவொன்றிற்கு நாம் வர முடியும். உண்மையிலே தேர்தல் முடிவுகள் இவ்வாறு தான் இருந்திருக்கவேண்டும். ஒன்றில் பொதுசன முன்னணி பெற்ற இடங்கள் ஐக்கிய தேசியக் கட்சி பெற்றதாக அமைந்திருக்கவேண்டும். அல்லது இருகட்சிகளுமே ஏறத்தாழ சமமான இடங்களைப் பெற்றிருக்கவேண்டும்.

தமிழீழத்தில் நடைபெற்ற தேர்தல்கள் பற்றி நாம் என்ன சொல்ல வேண்டும்? இது வெறும் கேலிக்கூத்தென்பது கண்காணிப்புக் குழுக்களின் முடிவு. இத் தேர்தல் பற்றி சி.அ. யோதிலிங்கம் (அரசியல் திறனாய்வாளர்) வீரகேசரி 16.10 இளங்கதிர் இணைப்பில் கூறுவதை வாசியுங்கள். "வடக்கு, கிழக்கு தமிழர்களின் நிலையை பொறுத்தவரை இன்றைய அரசியல் நிலையென்பது இன அரசியலின் மூன்றாம் கட்ட நிலையென்பது அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுகின்ற நிலையே. இக்கட்டத்தில் தேர்தல், அரசியல் பிரதிநிதித்துவம் என்பதெல்லாம் தேவையற்ற ஒன்றே. அதனை மக்கள் தெளிவாகவே காட்டியுள்ளார்கள். பெரும்பான்மை மக்கள் வாக்களிப்பிலிருந்து ஒதுங்கியுள்ள நிலையும் வாக்குகளை நிராகரிக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சியேறிய மணி

கச் செய்த நிலையும் ஏனோதானோ என்று வாக்களித்த நிலையும் இதனையே வெளிப்படுத்தியுள்ளன. அளிக்கப்பட்ட வாக்குகள்கூட மிதக்கும் வாக்குகளாகவுள்ளன. மிதக்கும் வாக்குகளின் வாக்களிப்பு நடவடிக்கைகளில் கண்ணுக்கு உடனடியாகத் தெரிகின்ற பிரச்சினைகளே முதன்மையான நிலையிலிருக்கும்...”

1947ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலே இம்முறை நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகள்தான் தமிழ் மக்களுக்கு மிகத்தெளிவாக எவ்வித மயக்கமுமற்ற அப்பட்டமான ஒரு வரலாற்றுண்மையை அதிர்ச்சியூட்டத்தக்க வகையில் வெளிப்படுத்துகின்றன. இனிவரும் காலத்தில் இவ் வரலாற்றுப் படிப்பினைகளின் விளைவுகளுக்கு எவ்விதம் எம்மக்கள் முகம் கொடுக்கப்போகின்றார்கள் என்பதிலேயே எமது அரசியல் எதிர்காலம் தங்கியுள்ளது. இதுவே நாம் மனம் கொள்ளவேண்டிய செய்தி.


மிகத்தெளிவாக எவ்விதமயக்கமுமின்றி முதன்மையாக வெளிப்படும் பாடமென்ன? சனநாயக முறைமை மிக ஆழமாக வேரோடக் கூடிய நாடென அன்று மேற்குலகால் விதந்துரைக்கப்பட்ட சிறீலங்காவின் இன்றைய இழி நிலை உலகிற்குத் தெரியாதா? சனநாயக முறைமையின் உயிர் நிலையான நாடாளுமன்ற தேர்தல் முறையையே குழிதோண்டிப் புதைக்குமளவிற்கு சென்றுவிட்ட விபரீத நிலையின் பின்னரும் மேற்குலகம் மௌனம் காப்பதேன்? பெரும் தொகையாகவும் பரபரப்பான அறிக்கைகளைவிடுக்கும் சனநாயகக் காவலர்போல் வந்திறங்கிய ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் எல்லோரும் போகும்போது வாலைச் சுருட்டிச் சென்றதேன்? அல்லது நடந்து முடிந்த மோசடிகளுக்கும் காடைத்தனத்திற்கும் நேரடியான சாட்சிகளான சிங்கள மக்களும் அவர்களது காவலர்களான பௌத்த மகாசங்கத்தினரும் ஏன் ஐக்கிய தேசியக் கட்சியினரேகூட கொதித்தெழவில்லை? தேர்தல்களை நிராகரிக்கக் கோரவில்லை? சனநாயகம் காக்க முன்வரவில்லை? ஏன்? ஏன்? ஏன்?

ஏனென்றால் சர்வதேசத்தை பொறுத்த வரையிலும் சரி, சிங்களவரை பொறுத்த வரையிலும் சரி, எல்லாமே ஒன்றுதான். அதாவது எக்கட்சி பதவிக்கு வந்தாலும் எல்லாமே ஒன்றுதான். வெளிநாட்டவர் மூலதனத்திற்கு பாதுகாப்புத்தான். எக் கட்சியேறினாலும் நாடாளுமன்றம் தமிழ்மக்களை ஒடுக்கும் கருவிதான். இது அன்று தொட்டு இன்றுவரை தொடரும் கதை. தமிழ்மக்களை அரசியல் அரங்கிலிருந்தே அகற்றிவிடும் ஒரேநோக்கோடு செயற்படுவதையே இலக்காகக்கொண்டு சிங்களத்தின் நாடாளுமன்ற ஆட்சிமுறை உருவாக்கப்பட்டது. வரலாற்றின் ஏடுகளைப் புரட்டிப்பாருங்கள். 1919இல் உருவாகிய இலங்கைத் தேசியக் காங்கிரசில் ஒன்றாகவிருந்த சிங்களவர் சோல்பரியின் அரசியல் திட்டத்தில் சனநாயகம் என்பது பெரும்பான்மையினர் ஆட்சி என்கிற வரியை மட்டும் நன்றாகப் புரிந்ததின் விளைவாக தமிழரை நட்டாற்றில் விட்டோடிய நாளிலிருந்து இன்று அம்மையார் காலாவதியாகி கலைக்கப்பட்ட நாடாளுமன்றிற்கே உயிரூட்டி அவசரகாலச்சட்டத்தை நீடித்த காலம்வரை (ஏன் பதினோராவது நாடாளுமன்றின் முதலாவது பணியே அவசரகால நிலையை நீடிப்பதாகவே அமைந்ததல்லவா) சிறீலங்காவின் நாடாளுமன்ற வழமை இதுதான்.

இம்முறை நடந்தேறிய தேர்தலின்போது மூன்று பிரதான சிங்களக்கட்சிகளுக்கிடையில் என்ன பிரதான வேறுபாட்டை சிங்களவரால் கண்டிருக்கமுடியும்? இம்மூன்று கட்சிகளும் சிங்கள மக்களுக்குச் சொன்ன அரசியல் செய்தி என்ன? போரே முடிந்த முடிவு என்றவர் அம்மையார். (தமிழருக்கு கடுகளவு உரிமையைத் தன்னும் வழங்காத) தீர்வுப்பொதியடங்கிய அரசியல் பரப்பினை இறுதிவரை எதிர்ப்போம் என்றவர் ரனில். போரும் முறையாக நடத்தப்படும் - பொதியும் நெருப்புக்குள் வீசப்படும் என்றது ஜே.வி.பி. ஜே.வி.பி வைக்கும் தீர்வு என்ன? தங்களை நம்பி வாக்களித்த தாலா (?) சுயநிலையை தன்னாட்சி உரிமையற்ற தமிழ்மக்களுக்கு சோசலிச (??) அடிப்படையில் தீர்வு வழங்கப்படும். இதுதான் அவர்களின் தீர்வு. இப்போதுள்ள நிலவரங்களின்படி வருங்காலத்தில் ஜே.வி.பியே இரண்டு பேரினவாதக் கட்சிகளை விடவும், தீவிர பேரினவாத சிங்கள “உருமய” வை விடவும் சிங்கள மக்களால் விரும்பப்படும் இளமைத்துடிப்புள்ள வேகமான புதிய வகை பேரினவாதக் கட்சியாகும் என கணிக்கப்படுகின்றது. இதுபற்றி யோதிலிங்கம் பின்வருமாறு கூறுகிறார். “உண்மையிலேயே மக்கள் விடுதலை முன்னணியே எதிர்பார்க்காத அளவிற்கு இவ் எழுச்சி (தேர்தல் முடிவு) நடைபெற்றுள்ளது. மிதக்கும் வாக்குகள் இதனை நோக்கி நகர்ந்ததை விடவும் பேரினவாத சக்திகளின் வாக்குகளும் இதனை நோக்கி நகர்ந்துள்ளமை இதற்கு பிரதான காரணம். தீவிர சிங்கள இனவாதிகளை விடவும் சிறந்த வகையில் அரசியல் தீர்வு யோசனைகளுக்குகெதிராக போராட்டங்கள் நடத்தியமை இதற்கொரு காரணமாக அமையலாம்.”

இம்முறை இன்னொரு நுட்பமான பேரினவாதப் போக்கு. அரசியல் சாயங்களான தேசிய ஐக்கியம், தேசிய அரசாங்கம் என்பனவற்றைப் பூசிக்கொண்டு சிங்களத்தில் மேற்கிளம்புகின்றது. அடுத்த ஆறாண்டிற்கு அரசியல் சூனியத்தில் அமையப்போகும் ஐ.தே. கட்சி செல்நெறி தெரியாது பூதாகார பொருண்மிய நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும். பொதுசன முன்னணி தமிழ், முஸ்லீம் கட்சிகளை தங்கி ஆள்வதே அவமானம் என நினைக்கும் சிங்களச் சக்திகளின் போக்கு அவற்றின் விளைவுகள் இவ்விரு கட்சிகளின் தனித் தனி சுயநலப்போக்குகளை ஒருமித்த ஒரே சுயநலப்போக்காக்கிவிடுமோ என்பது காலம் சொல்லவேண்டிய செய்தி. ஆனால் நாமறிய வேண்டிய செய்தியிதுதான். கொண்ட கொள்கைகளைக் கைவிட்டு சொந்த மக்களை வாட்டி வதைத்து துன்புறுத்தி அம்மையாரின் கால்தூசியை நெற்றியில் பூசி துரோகத்திற்கே நவீன வரைவிலக்கணம் கொடுத்த தமிழர் என நாமம் பூண்டோரைக் கூட சிங்களச் சக்திகள் நம்பத்தயாராகவில்லை என்பதுதான் அச்செய்தி.

இதற்கு மேல் என்ன விளக்கம் கூற முடியும்? அவர்கள் நிலை அவ்வாறாயின் எம் நிலை எவ்வாறுள்ளது? இத்தகைய இழி அரசியலிலிருந்து முற்றிலுமாக விலகி மேன்மையுற்ற அரசியல் நிலையில் நாமிருக்கின்றோம். தமிழரின் அரசியல் வாழ்விலே புதியதொரு அரசியல் - இராணுவச் சமநிலை புலிகளால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இம் மூன்று கட்சியானது மட்டுமல்ல சிங்கள தேசத்தின் அரசியல் தலைவிதியே எங்கள் கரங்களில். போர்க்களத்தில் வெற்றியைத் தீர்மானிப்பது நவீன ஆயுதங்களல்ல. போர் மூலோபாயம், படைவீரன் மனவுறுதி, ஒழுங்கு, கட்டுப்பாடு, கீழ்ப்படிவு. புலிகள் காக்கும் அமைதி பெரும் புயலுக்கு முன்னான அமைதி என்பவர் ஜானக பெரேரா (சண்டே லீடர் 27.08.2000). இது போர்க்களத்திற்கு மட்டுமல்ல அரசியல் களத்திற்கும் பொருந்தும். எனவே சிங்களத்தின் சகல அரசில் இராணுவ அடக்குமுறை வடிவங்களையும் சிதைக்கும் ஒரேயொரு சக்தியான விடுதலைப் புலிகள். அதற்காக இப்போது பெறவேண்டியது விரைவான இராணுவ வெற்றியல்லவா? அதனைப் பெற துணைநிற்க வேண்டியது நீங்களல்லவா?





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓயாத அலைகள் தந்த உணர்வலைகள்



– அம்பிகா –

முள்ளியவளைச் சந்தைக்கு பக்கத்தை நின்று சனத்தை படம் பிடிச்சுக் கொண்டிருந்தம். 'நேற்றிரவிருந்தே ஒட்டுசுட்டான் பக்கம் பயங்கர செல்லடி.... மனம் பக்குப்பக் கெண்டு அடிக்குது. துலைவார், அம்பகாமப் பக்கத்தாலையும் அஞ்சாறு நாளா வெளிக்கிட நிக்கிறாங்கள். அம்பகாமத்தால வட்டக்கச்சிக்க பாஞ்சா... இஞ்சால உள்ளவை இஞ்சால, அங்கால உள்ளவை அங்கால, இறுகவேண்டியதுதான். இதென்ன வெள்ளிடியப்பா, உவன் ஒட்டுசுட்டானுக்கால வெளிக்கிடுறான்போல. 'ம்... உதுக்கால புதுக்குடியிருப்போ.... முல்லைத்தீவோ தெரியா.... நெடுங்கேணிப் பக்கத்தாலும், படார் படார் எண்டு வெடிச்சுக் கேக்குது.' 'ச்சாய் அது இஞ்ச அடிக்கிறதுதான், அங்கபோல கேக்கிது' 'ம்.... மயிலன்ர வண்டில் ஆலடியில வந்து அவுக்கிறான். வீட்டுச் சாமானுகள் ஏத்தி வருது... என்னடாப்பா... எங்கால செல்லடி...'

'அ... அங்காலதான். பொடியள் செல்வந்தாலும் எண்டு போகச் சொல்லுறாங்கள்... ம் போன வரியமும் நெல்லப் போட்டுட்டு வர, மாடு திண்டிட்டுது. இப்பவும் விதைச்ச பாதி, விதையாத பாதியா..ச்ச... மாடுகள் என்ன செய்யுதோ... ம்... அவன் முல்லைத்தீவைப் பிடியாம ஓயான்... ம் இவன் சும்மா... அவன் மந்துவிலுக்க குண்டு போட்டதே புதுக்குடியிருப்பு பிடிக்கத்தான்...'

'சனம் மனம் போனபடியெல்லாம் கதைக்கிது... எனக்கும் யோசினயாத்தான் கிடக்கு, இனி எங்கபோற... விட்டாச்சு எல்லாம் விட்டாச்சு... செல்லுச்சத்தம் கேக்க, கேக்க. நெஞ்சுக்குள்ள இடிவிழுறமாதிரித்தான் இருக்கு... இன்னும் சூழாமுறிப்புச் சனம் சயிக்கிள்ளையும், வண்டில்லயும், தலையிலயுமா சாமானுகளோட வருதுகள். அவன் இஞ்சால வாறானெண்டா, பிறகென்னத்துக்கப்பா முள்ளியவளைக்கு வருதுகள்' எண்டொருத்தர் புறுபுறுக்கிறார். அவர் ராமன் ஆண்டா என்ன? ராவணன் ஆண்டா என்ன? கட்சிக்காறர்...' நான் மெல்ல அந்த இடத்தால கழண்டன். ஒரு இருபது யார் வந்திருப்பன்.

'ஒட்டுசுட்டான் பிடிச்சாச்சாம்....'

'ஆர்...பொடியளோ....'

'பின்ன நீயே... நெடுங்கேணிக்க சண்டையாம்...'

'எப்படி? நான் சொன்னன், அங்கயும் சத்தங்கேக்குதெண்டு... நீ இல்லை யெண்டாய்...?' 'ஆர் நானோ.... ங.... நான் காலமையே சொல்லுறன்... உது பொடியள்தான் அடிக்கிறாங்களெண்டு... விசர்க் கதை பறையிறாய்....'

'சாமத்தில சத்தங்கேக்கயுக்கயே எனக்கு தெரிஞ்சிட்டு, உது எங்கடயாக்களெண்டு...'

'நான் நெச்சனான். கிட்டடியில உவைக்கு இருக்கெண்டு...'

'அவன் கரிப்பட்டமுறிப்புக்கயும், நெடுங்கேணிக்கயும் பாஞ்சிருப்பானப்பா...'

'விசர்... நெடுங்கேணிக்க அடி நடக்குதாம்'

'ம்.... ஆர் சொன்ன - நெடுங்கேணி பிடிச்சாச்சாம்....'

'நல்லாத் தெரியுமே....?'

'ம்...உங்கின கராச்சில கதைச்சாங்கள்...'

நான் 'நைசா' அந்த இடத்தால விலத்தினன். 'ஒருக்கா ரேடியோவப் போடுவம்... ஏதும் சொல்லுவன்... அ... இதென்னப்பா, எல்லைப் படை செயலகத்தில உவளவு சனம்... ம்... ஆரும் வீரச்சாவோ... மெல்ல வாங்கோ எட்டிப்பாப்பம்...'

'அண்ணை வரிசையா வாங்கோ... நான் என்னண்டு எழுதிற... காட் இருக்கோ...'

'ஓமக்கா'

'தகடு எடுத்தாச்சே நம்பர்....'

'தகடு தரேல்ல... சும்மா எழுதிப் போட்டு விடுங்... ஏன்ரா இடிக்கிறியள் வரிசையில வாங்கோ...'

'அண்ணை... உங்களுக்கு வாற கிழமை ரேண் எல்லே...'

'பரவாயில்லப்பிள்ளை, நான் இப்ப போறன்...'

'பிறகு உங்கட ரேணுக்கு...'

'அப்பவும் போறன்...'

'என்ன கரைச்சலண்ணை, எல்லாரையும் ஒரேயடியா அனுப்பேலா'

'அம்மா... நாங்கள் தொடர்ந்து நிக்கிறம்... இப்ப போகாட்டி...' எல்லைப்படை வீரருக்க அடிபுடி- 'எட சுந்தரமண்ணை பெண்டில் பிள்ளைய பாக்கோணுமெண்டு சொன்ன நீ... இஞ்ச...' 'ஹ்... ஹ்... சமாளிப்பாள். நான் எல்லைக்கு போப்போறன்' ம்... எல்லாம் நேரந்தான். உலகமே தலைகீழா மாறின மாரிக் கிடக்கு, பின்நேரம் செய்திவருது. மணவாளன் பட்டமுறிப்பில பிள்ளையளாம். ஒதியமலையில பொடியளாம்... சந்தோசமெண்டா குதிக்கோணும் போல கிடக்கு... 'எடேய் பொடியா... நல்லா வாங்கியிருக்கிறான். குவியலா நிண்டு அலம்பாதையுங்கோடா. கிபீரக் கொணந்து போட்டிடுவான்.'

மற்றநாள் காலம்பற கரிப்பட்டமுறிப்பு ஒதியமலை தனிக்கல் எண்டு... பறக்கிறது. 'ஓயாத அலைகள் மூண்டாம்...' 'கனகராயன் குளத்தில் நல்ல அடியாம்... கனகராயன்குளம் அடிச்சா மாங்குளத்தான் மடக்குப்படுவான்...' ஆரைக்கண்டாலும் ஒரு தலைவெட்டு... கைதூக்கு. இங்கிலீசுப் பற்றனில ஒரு 'ஹாய்'... 'சுந்தரத்தாற்ற மனிசி ஏதோ தாவணித் தொங்கலுக்க மடிகட்டி... கொண்டு போறா... என்னணை'.

'அது பிள்ளையளுக்கு உலருணவு சேர்க்கிறம்....'

'அங்கின பள்ளிக்கூடப் பிள்ளையளும் ஏதோ சேர்க்கினம்....'





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




❝ விடிவு எட்டும் வரை தமிழீழ மக்களே உங்களது போரை முன்னெடுத்துச் செல்லுங்கள். இந்த நூற்றாண்டு வரலாறு உங்களால் முடிவடைகிறது. அடுத்த நூற்றாண்டின் வெற்றியானது உங்களது கொடியாக முத்திரை பதிக்கப்படும்.

ஓயாத அலைகள் மூன்றின் பேரெழுச்சியானது தமிழகத்துக்கும், உலகத்துக்கும் புலிகளின் வலிமை வெல்வதற்கு அரியது என்ற உண்மையை மெய்ப்பித்து இருக்கின்றது. சந்திரிகா அரசு இதுவரையிலும் செய்துவந்த பொய்க்கருத்துப் பரப்பலை இந்த போரெழுச்சியானது தவறெனக் காட்டியிருக்கிறது.

தமிழீழ மக்களுக்கு நடுவில் அவர்களுடைய வாளும், கேடயமுமாக தமிழீழ விடுதலைப் புலிகளே இருக்கின்றார்கள் என்கின்ற உண்மையை இனிமேல் யாரும் மறைக்கமுடியாது என்பதை இந்த மாபெரும் வெற்றி உணர்த்தக்கூடிய செய்தி ஆகும். தமிழீழ மக்களின் ஆதரவு இல்லாவிட்டால் இந்த அளப்பரிய வெற்றியை புலிகள் பெற்றிருக்க முடியாது என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக கருத்துப் பிரச்சாரம் செய்பவர்கள் இனிமேலாவது உணர்ந்து கொள்ள வேண்டும். ❞

– தமிழக கவிஞர் இன்குலாப்

மற்றநாள். 'மாங்குளம், கனகராயன்குளம் எல்லாம் பிடிச்சாச்சாம்... புளியங்குளமும் சண்டை நடக்குது எட மூண்டுமுறிப்பு பனங்காமத்தாலும் ஓடிற்றானாம்... இனியென்ன வாங்கோ நாங்கள் உந்த ஒட்டுசுட்டானால கனகராயன்குளம் மட்டுமெண்டாலும் போய்ப் பாப்பம்....' ஒட்டுசுட்டான் வன்னிப் பாரம்பரியத்தில முதல் தேரோடின கோயில். தான்தோன்றியீஸ்வரர் ஆலயம். இந்த சந்தியில, 1984இல் முதல் இஞ்ச கிடந்த பொலிஸ்ரேசன் எங்கட பொடியளால அழிஞ்சது.

"மூன்றாம் பிறைமாதர் கங்கை முடியணிந்து
தான்தோன்றி வீற்றருளும்
சங்கரனாய் -தோன்று லிங்கம்
மங்கள ஒட்டுசுட்டானாய்
மகிந்துறை
எங்களது வன்னி நகரே...."

இதைப்பாக்க பழைய கோயில் அப்பிடியே கிடக்குது. மாங்குளம் திரும்பினா, எட ரெண்டு பக்கமும் காடுகள் வெட்டி சுத்தமா துடைச்சு அங்கால அம்பது இஞ்சால அம்பதெண்டு யார் கணக்குலதான் வீதி வெளியாக்கிடக்கு.

எங்கட மக்களின்ர....

வீதி வெளியாச்சு... காடோ கதியாச்சு, எண்டு வாழ இஞ்ச... மணவாளன்பட்ட முறிப்பு... அருவிப் பாலங்கள் பேராற்றுப் பாலந்தான் அந்த மாரிகட்டி புதுரோட்டும் போட்டாச்சு. மாடுகள் அங்கினையங்கின கூட்டமா நிண்டதுகள் இந்த எல்லேக்கால தங்கட பக்கம் கொண்டே விட்டிட்டான். ஆத்துக்க தண்ணிபாயிற சத்தம்.

"ஆறுகள் பாயொலி ஆநிரை பாயொலி.
ஏறுகள் பாயொலி இத்தனை மாறொலி.
சங்கமித்தே வரும் தாரணி தானதாம்
எங்களது வன்னி நகரே"

எண்ட பாட்டு திரும்ப நினைவுக்கு வருது, அப்படியே கரிப்பட்டமுறிப்பு (கரி-யானை) யானைக்கு பொறிவைத்து பிடிக்கும் இடமாம். இது முக்கியமான கட்டளைத் தளம் இருந்ததற்கான அறிகுறிகள் இருந்தாலும் அலுக்குலைஞ்சு போன கிராமமா இது இருக்குது. 'மெய்யே, இந்தப்பக்கம் இனி எந்தக் காலம் சனம் வந்து குடியேறப்போகுதோ... அ... புளியங்குளமும் பிடிச்சாச்சு... இனி..' அது இருக்கட்டும் இந்தப் பக்கம் அம்பகாமம் ஊடாக போற வீதி... அது தான் கனகராயன்குளத்தில அந்தப் பகுதியில் சனம் பழைய ரோட் எண்டு சொல்லுற கோட்டடியில குளக்கட்டுக்கு எதிரில துவங்கிற றோட்டு கற்கிடங்கடியால இஞ்ச வருது. இது பண்டாரவன்னியன் காலத்து யாழ்ப்பாண சாலை. பிறகு வெள்ளைக்காறன் ரெயில்விட வசதியா குளக்கட்டுகளை அண்டி ரெயில் ரோட்டும், அதை அண்டி தார்ரோட்டும் போட்டு ஆனையிறவால யாழ்ப்பாணம் போட்டான். பின்ன இந்த ஒலுமடு நல்ல விவசாய நிலம், இப்ப ஒண்டுமில்லாம கிடக்கு. கடபுடா பாலம், கண்ணைப் பறிக்குது... மாங்குளம் பிள்ளையாரை சுத்தி ஒண்டும் கிடையாது. பாவம் பிள்ளையார்... ஏன் சந்தியில கிடந்த வேதக் கோயில் முகப்பு மட்டும் கிடக்கு. அங்கால ஒரு அடையாளமும் இல்லை. ஏதோ ஒரு காலமும் பாராத ஊரைப்பாத்தமாரி மறுபிறவி எடுத்துக் கிடக்குது, ஊரெல்லாம். ஒரு மரமோ மட்டையோ, வீடோ வாசலோ... இருந்தாத் தானே நான் சொல்ல. பின்ன இஞ்சால கனகராயன்குளம், புளியங்குளம் எல்லாம் பார்க்க பெரிய கடக்கரை வெளிப்பாக்கிடக்கு. கடல், பச்சைக் கடலைப்பாத்தமாதிரி. உங்கால மூண்டுமுறிப்பு பனங்காமம் பக்கத்தால சனம் கத்தரிக்காய் சாக்கோட வருது. இவைக்கு இவ்வளவு நாளும் வவுனியாச்சந்தை இப்ப மல்லாவி... அவற்ற மனசில என்ன இருக்கோ... எண்டா?

'ஏழுருவாக்கு சோடா, பதின்மூண்டு ரூவாக்கு லாம்பெண்ணை - ஆனா இரவு வந்தா பயந்தான் எப்பவும் இதால போனா திரும்பும் வரைக்கும் நெஞ்சிடிதான்'

விளாத்திக்குளம் வாசியொராள் சும்மாதான் புதினம் பாக்க வாறார் அவருக்கு வாய்கிடவாதாம்.

'ஆள் நினைச்சும் பாத்திருக்கமாட்டார் உப்பிடி விழுமெண்டு... ஓடின ஓட்டத்தைப் பாக்கோணுமே'

'என்ன செய்யிற உள்ளுக்க அவனோட குடியிருந்ததாலே உங்களுக்கு தெரியுது. எங்களுக்கு என்னத்தைக் கண்டம். இருண்டது விடிஞ்சது தெரியாம நாங்க நிக்கிறம். ஒட்டுசுட்டானெண்டாங்கள். ஓயாத அலை மூண்டெண்டாங்கள். வெட்டி முழிக்கிறதுக்கிடையில வெள்ளாங்குளத்தால போனவை, வட்டக்கண்டல் அடம்பன் ஆண்டாங்குளம் தாண்டிற்றாங்கள். பனங்காமத்தால சிராட்டிக்குளம் மடுவெண்டாங்கள். அடியடா புடியடா எண்டு ஓமந்தைக்கு ஒரு பக்கம் நிக்க மற்றது மண்கிண்டிய வளைச்சிட்டுதாம். ரிவிபல, எடிபல, ஜயசிக்குறு, ரணகோஷ, வாட்டசெட்டு இது எல்லாம்தான் புதிசு. எட மின்னல், பச்சப்பட்டி, எல்லாமெல்லே பிடிச்சாச்சு. இன்னும் தள்ளாடி தள்ளாடுது. மண்கிண்டி மலைச்சுப்போய் நிக்குது. வவுனியாவும் வடக்குவாசலைப் பார்த்துத்தான் நிக்குது'. 'ம்.... இது தான் உலகத்தின்ர எட்டாவது அதிசயம் போல. எது? ஓயாத அலை- மூன்று.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"விடுதலைப் புலிகள்" பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம். [ஐப்பசி, கார்த்திகை 2000]

# தீர்வுக்கான மார்க்கம்

## புலிகளின் குரல்

இலங்கைத்தீவில் நடைபெறும் இனப்போர் இன்று உலகமயப் பட்டு சர்வதேச அரசியலாகிவிட்டது.

வடபுலப்போர் அரங்கில் சிங்களப் படைகளுக்கு எதிராக புலிகள் இயக்கம் பெற்றுவிட்ட இராணுவ மேன்நிலையின் மத்தியிலும் சிங்கள அரசாங்கத்துடன் அரசியல் பேச்சுக்களை நடாத்த தலைவர் பிரபாகரன் கடந்த வருடம் விடுத்த அழைப்பும் அப்பேச்சுவார்த்தைகள் ஆக்க பூர்வமானதாக அமையவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் வெளிநாட்டு மத்தி யத்துவத்தைக் கோரிய அவரின் அரசியல் நிலைப்பாடும் உலக சமூகத்தின் ஆதர வைப் பெற்றுள்ளன.

அமைதிப் பேச்சுக்களில் நம்பிக் கையற்றவர்கள் - அரசியல் தீர்வில் நாட்டமற்றவர்கள் என்றவாறாக புலிகள் இயக்கம் மீது சிங்களஅரசு தொடர்ச்சி யாகச் சுமத்திவந்த அபாண்டமான குற்றச் சாட்டுக்கள் சர்வதேச அளவில் இன்று வீரியமிழந்துவிட்டன.

உலக சமூகத்தின் இக்கருத்துமாற்றம் புலிகள் இயக்கத்திற்குக் கிடைத்த அரசி யல் வெற்றியாகக் கணிக்கப்படுகின்றது.

நோர்வே அரசாங்கம் எடுத்த பேச்சு வார்த்தைக்கான முன்முயற்சிகள் சிங்கள அரசாங்கத்தால் அசண்டை செய்யப்பட் டது. உலக நாடுகளுக்கு ஒரு உண் மையை உணர்த்திவிட்டது.

அரசியல் பேச்சுக்களில் ஆர்வமற் றிருப்பது புலிகள் இயக்கமல்ல, சிங்கள அரசுதான் என்ற பேருண்மை இப்போது அம்பலமாகியுள்ளது.

எனவேதான் புலிகளுடன் பேசி போரை முடிவுக்குக்கொண்டுவந்து - இனப்பிரச் சனைக்கு நிரந்தரத் தீர்வு காண முயலு மாறு சிங்கள அரசாங்கத்திற்கு சர்வதேச அரசுகள் ஆலோசனைகளையும் - அழுத் தங்களையும் கொடுத்து வருகின்றன.

ஆயினும், பேரினவாதக் கருத்து நிலையை தனது அரசியல் சித்தாந்தமாக வரித்துக்கொண்ட சிங்கள அரசு சர்வதேச அபிப்பிராயத்திற்கு செவிசாய்க்க மறுத்து வருகின்றது. பதிலாக போரை விரிவாக்கு வதிலேயே பணத்தையும் - காலத்தையும் செலவிடுகின்றது. இப்போது போரை நடாத்த எதிர்க்கட்சியினதும் ஆதரவைப்பெற்றுள் ளது. ஆயுதப்பெருக்கத்தைச் செய்து பெரு மெடுப்பில் படைக்கு ஆட்திரட்டி தமிழரின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண்பதிலேயே விடாப்பிடியாகவுள்ளது.

இதேவேளை, அரசியல்தீர்வுத்திட்டம் - அதை அமுல்ப்படுத்துவதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றம் என்று வழமைபோலவே உலகை ஏமாற்றும் எண் ணத்துடன் அரசியல் சித்துவிளையாட்டுக் களிலும் சிங்கள அரசு ஈடுபட முயல் கின்றது.

இத்தகைய அதிரடி அறிவிப்புக்களால் சர்வதேச நாடுகள் சில குழப்பமடைந் தாலும், தமிழ் மக்கள் தரப்பில் அத்தகைய குழப்பங்கள் இப்போது ஏற்படுவதில்லை.

வன்னிமண்ணில் வெற்றிகரமாக உரு வாகிவரும் எல்லைப்படை, கிராமியப் படை மற்றும் போர்எழுச்சிக்குழுக்கள் என்றவாறான மக்கள் படைக்கான இரா ணுவக் கட்டுமானத்தில் பொதுமக்கள் காட்டிவரும் தீவிரபங்களிப்புகள் எமது மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சிக்குச் சான்றுகளாக உள்ளன.

இதேபோல, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் நிலங்களில் இடம்பெறும் இரா ணுவ அத்துமீறல்களுக்கு எதிராக அப் பகுதி வாழ் மக்கள் உடனுக்குடன் கண் டனப் போராட்டங்களை நடாத்தி சிங்கள அரசின் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பும் தெரிவித்து தமது தேசிய எழுச்சியை வெளிப்படுத்திவருகின்றனர்.

இன்று வன்னிப் பெருநிலப்பரப்பு முழு வதும் உத்வேகத்துடன் நடைபெற்று வரும் போர் எழுச்சி மாநாடுகளில் மக்கள் காட்டி வரும் செயலார்வம் இந்தத் தேசிய எழுச்சி யின் வரலாற்று வளர்ச்சியைச் சுட்டிக்காட் டும் மைல்கல்லாக அமையப்போகின்றது.

பொ.ஐ.முன்னணியோ அல்லது ஐ.தே.கட்சியோ சிங்களத்தின் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரண்டும் முன்வைக் கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு போர் தான். போரை விரிவாக்கியபடி பொ. ஐ. முன்னணி அரசியல் நடாத்துகின்றது. தாம் பதவியேற்றால் போர்ச்சபை ஒன்றை உரு வாக்கி இராணுவப் புலமை உள்ளோரை ஒருங்குதிரட்டி போரை நடாத்தி வெற்றி பெறப்போவதாக ஐ.தே.கட்சி பிரகடனம் செய்திருந்தது. இப்போது இரண்டு பிர தான கட்சிகளும் கைகோர்த்தபடி தமிழ ருக்கெதிரான போரை நடாத்தவே முயற்சி கள் நடக்கின்றன. சிங்கள தேசத்தின் பத் திரிகைகளும் போர் மூலமே இனப்பிரச் சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று வற்புறுத்துகின்றன. புற்றீசல்போல் கிளம்பியுள்ள பேரினவாத அமைப்புக்களும் ஒட்டுமொத்தப்போரையே வற்புறுத்து கின்றன.

இந்தப்போருக்கு முகம்கொடுத்து யுத் தத்தில் வெற்றிபெறுவதைத்தவிர தமி ழினத்திற்கு மாற்றுவழிகள் ஏதுமில்லை. குடாநாட்டில் அரசாங்கப்படைகள் புதி தாகத் தொடங்கியுள்ள சமர்களில் தமிழர் சேனையான புலிப்படை திறப்படச் செய லாற்றியபடி யுத்தத்தில் வெற்றிகளையே கண்டுவருகின்றது. சிங்களப் படையுட னான போரில் தமிழினம் முழுவெற்றியைக் காணும் நிலை வெகுதூரத்திலில்லை. இந்த வெற்றியை விரைவாக்குவதற்காக தமிழ் மக்கள் அனைவரும் போர்ப்பயிற்சி பெற்று களம்புகவேண்டிய தருணம் இதுவாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# களமுனை போராளிகளின் கவிதைகள்

www.tamilarangam.net

## வேவு

கொதித்தெழுந்த மாரியிடை
உணர்ச்சியற்ற ஜடங்களென
தீமிளாறெமும் போதெல்லாம்
உயிர்த்தெழும் ஃபீனிக்ஸ் களென,
மீண்டுமொரு, மீட்புக்கான
அத்திவாரப் பயணம்.

ஊனுருக்கி உயிர்வதக்கி
உயிர்கலந்த ஊரில்
மீண்டுமொரு தவழல்.

தொப்புள் கொடியுறவை
மிதித்தழுத்தும் பேய் கண்டு
மீறியெழும் உணர்வடக்கி
அற்புத விடியலுக்கான
இடர்மிகு பயணம் தொடர்கிறது.

போராளி நா.குமார்



## சமாதான சாதனையா?

ஏரெடுத்து, போர் செய்து
ஊர் செழிக்கச் செய்த- எங்கள்
பூர்வீகப் புதல்வர்கள்- இன்று
வேருக்கு உரமாகி,
சேற்று நிலப் பிசுபிசுப்பில்
யாருக்கும் சொந்தமற்று
உறங்குகின்றார்கள்.
பாருக்குத் தெரிவதெல்லாம்
கொசோவோ, திமோரா? சொந்த
ஊருக்குச் சென்றவரை
உருக்குலையச் செய்து விட்டு- உப்பு
நீருக்கு உணவளித்த
உத்தமரைப் பார்க்காத பார்- பாரீர்
யாருக்கு வேண்டுமிந்த சமாதானம்!
"போரினால் சமாதானம்"- நல்ல
புத்தியான இனவாதம்
புத்தரின் சந்நிதியில்
பிரித்தோதி நூல் கட்டிய
எத்தர்கள் ஆடிய நர்த்தனங்கள்
அரங்கேறிய பெருவெளிதான்
செம்மணியா? இல்லை
ஐந்தாண்டு "சாதனையின்"
ஆதாரங்களா?...

- போராளி ஆ.சாரங்கள்

## உயிர் வாழும்...

மண்ணின் மகிழ்விற்காய்
மலர்ந்து மடிந்த மலர்களே!
என்றும் நறுமணம் வீசும் மலர்கள் நீங்கள்,
எம்நாடு உங்கள் நாமம்
உரைத்தே உயிர் வாழும்.
உங்கள் ஈகம்தனை என்றும்
எடுத்துரைக்கும்.
ஆறடி நிலத்துள்ளே
உங்கள் உடல் இருக்கு- ஆனால்
உங்கள் உயிரோ
தமிழ் உரைக்கும் இதயமெல்லாம்
வீற்றிருக்கு.
நீங்கள் தேடி நடந்த இலக்கு நோக்கி
உங்கள் தோழர்கள்...

போராளி இசையழகன்.

## வினை அறுத்தல்

இழப்புக்களை சீதனமாக்கி
கண்கசிநீர் வனைந்த
கனிவுகளால் தேரேறிய,
உயிர் தழைக்கும் தாய்மையின் இதயபீடம்
மனிதமற்ற பாலையாகியது.

மரபணு வாயிலான
வாக்குப் பொய்த்த வல்லாட்சி .

மறதியில் கொலுவிருத்தல் நிச்சயமாயின்,
கொடுங்கோன்மை நிலைபேறடைந்து
உலகு திசைதிரும்பியிருக்கும்,
எனவே,
மூலவிதை விளைபயிரே அறுவடை,
இதுவே உண்மையின் வெளிப்படை

போராளி நா.குமார்

## எதிர்பார்ப்பு

ஊர்,
உயிர்ப்பிழந்துபோன உயிரியாய்..
வாழ்க்கை,
முறுக்கறுந்துபோன இயந்திரமாய்...
நிஜம் மறைந்த கோரங்களால்,
சுயம் சிதைந்தழுந்திய மானுடம்.

வேட்டைக் காடாய் எம்மண்ணும்
வேட்டையாளர்களாய் அவர்களும்
என்றாகி,
சகிப்பென்பது இயலுமையின் இறுதியாக
காத்திருப்பில் ஏக்கம் நிறைந்தது.

ஓய்வின்றி தொடரும் அலைகளின்
கனதியால்
சந்தோசம் முகிழ்த்தெழுந்து
எதிர்பார்க்கையினை நிறைவாக்க,
கண்டிவீதியில் விழிவிரிப்பாயிற்று.

- போராளி நா.குமார்

## தொடுவானம் தொடும் வேளையில்...

பாசவலை பின்னிய
ஒரு கூட்டுப் பறவைகளிரண்டு
தம் தேசம் தாண்டிய பனிக்கான பறப்பில்
சிறகொடிக்கப்பட்டன.

இந்தத் தேசப் பறவைகளின்
நீரும் இறக்கைகளின்
விசாலித்த அசைவில்
காற்றைத் திசைதிருப்பும்
வலுவிருந்தது, துணிவும் கூட.

நேரியன், குமரன்
அப்பறைவகளின் இனியநாமங்கள்
இவர்கள்,
வான முகடேறி,
வைய நதியில் ஈழத்தின் மிதிப்பிற்கு
துடுப்பிடும் பணியில்,
தொடுவானம் தொடும் வேளையில்
வீழ்ந்தவர்கள்.

விழுதெறிந்து வானளாவவேண்டிய
இந்த இருபெரும் ஆலமரங்களும்
பராயம் முற்றமுன்னரே வீழ்த்தப்பட்டன.
ஆயினும்,
இவை தண்டிலும் தழைக்கும்.
நெருப்பிலும் சிரிக்கும்.

- போராளி நா.தமிழ்க்குடிமகன்.

## பசித் தீ

குடலமிலம் உறியூறி
உதிரமெரிந்து புகைய ...
வெறும் புகைச்சல் ஊதியூதிப்
பெரும் பசித்தீயாய்க் கனல்கிறது.

நீரிறைத்தும் சாந்தியற்று
ஊழியாய்த் தீக்கங்கு விரிய...
பசித்தழிலிடை சருகுடன் பச்சையும்
வெந்து நொந்து சோர்,
தசையுருகி உருகிக் காந்தும் வயிறுடன்
எழுச்சி எழுகிறது.

- போராளி நா.குமார்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பிரதிப்பாதுகாப்பு அமைச்

# யுத்தம் தீவிரம

# போவதன் அ

மீண்டும் சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக அனுரத்த ரத்வத்தை பதவிப் பிரமாணம் செய்து கொண்டு விட்டார். பொதுத்தேர்தல் நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்ட சுமார் ஏழுவாரங்கள் கழித்து ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு இந் நியமனம் கிடைத்திருக்கிறது.

பொ.ஐ.முன்னணி அரசாங்கம் இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்டு அமைச்சரவையை அமைப்பதற்கு சுமார் ஒருவாரகாலம் எடுத்தது. இந்த அமைச்சரவை இலங்கையின் வரலாற்றில் மிகப் பெரிதாகவும் அமைந்தது. இதற்கு பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு அமைச்சுக்களை பகிர்ந்து கொடுப்பதில் ஏற்பட்ட இழுபறியே காரணமாக அமைந்தது.

அதிலும் முக்கியமாக தேசிய ஐக்கிய முன்னணி விதித்த நிபந்தனைகள் இந்தக் காலதாமதத்திற்குக் காரணமாக அமைந்தன. அதிலும் அக்கட்சி விதித்த நிபந்தனைகளில் ஒன்று ஜெனரல் அனுருத்த ரத்வத்த அமைச்சரவையில் இடம்பெறக்கூடாது என்பதாக இருந்தது.

இதற்குக் காரணம் கண்டி மாவட்டத்தில் அனுருத்த ரத்வத்த நடத்திய தேர்தல் வன்முறைகளாகும். இந்த வன்முறைகள் அம்மாவட்டத்தில் போட்டியிட்ட ரவூப் ஹக்கீமுக்கு மட்டுமல்ல அம் மாவட்டத்தில் போட்டியிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் டி.எம். ஜெயரட்ணவுக்குக்கூட எரிச்சலை ஊட்டியது. பொ.ஐ.மு.வில் அதிகூடிய பெரும்பான்மை வாக்குகளைப் பெற அனுருத்த ரத்வத்த நடத்திய காட்டுத்தர்பார் அவ்வளவு தூரத்திற்கு இருந்தது.

ஜெனரல் அனுருத்த ரத்வத்த இவர்களை மட்டுமல்ல கண்டி மாவட்ட பொலிசாரையும் வெறுப்படையச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆக பொதுத்தேர்தலின் போது அவர் நடந்து கொண்ட முறை ஆகக்கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தந்ததுடன் பலரது வெறுப்பையும் சம்பாதித்துக்கொடுத்திருந்தது.

இவ்வாறான நிலையில் தேர்தல் வன்முறைகளைத் தூண்டுவோருக்கு அமைச்சரவையில் இடமில்லை என ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஜெனரல் அனுருத்த ரத்வத்தவிற்கு அமைச்சர் பதவி வழங்கக்கூடாது என்பது பலரதும் வற்புறுத்தலாக இருந்தது. ஆனால் அமைச்சரவையில் அனுருத்த ரத்வத்தவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் இடம் வழங்கப்பட்டது.

இதன் பின்னர் பிரதி அமைச்சர்கள் நியமனத்தின்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக அனுருத்த ரத்வத்தவை நியமிக்கக்கூடாது என்பதற்கு அரசியல்வாதிகள் மட்டுமல்ல இராணுவத்தரப்பில் சிலரும்கூட அழுத்தம் கொடுத்தனர். இவரது தலைமைத்துவத்தின்போது படையினர் சந்தித்த பாரிய இழப்புக்கள், இவரின் மோசமான இராணுவத்திட்டமிடல்கள், தந்திரோபாயங்களால் படையினருக்கு ஏற்பட்ட படுதோல்விகள், இயற்கைக்கு மாறான வழிநடத்தல்கள், அடையமுடியாத இலக்குகளுக்கு குறுகிய காலக்கெடுக்களை விதித்து தமது அரசியல் குறிக்கோள்களை ஈட்ட முயன்றமை என ஜெனரல் அனுருத்த ரத்வத்த மீது இராணுவத்தரப்பும் குற்றச்சாட்டுக்களை அடுக்கியது. இதனால் இவரைத் தொடர்ந்தும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கக் கூடாது என அழுத்தம் கொடுத்தது.

யுத்தமே பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவி சக்தி வாய்ந்ததொன்றாகும்.

அரசியல் சூதாட்டத்தில் அரசு முக்கிய துருப்பாக வைத்திருக்கும் யுத்தத்தில் வெற்றி பெறுவது எதிர்காலத்தில் ஆட்சியை தக்க வைத்துக்கொள்வதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் அவர்களுக்கு ஐயமில்லை. எனவே இச்சூதாட்டத்தில் முக்கிய பதவியாகிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி முக்கியஸ்தர்களிடையே கடும் போட்டி நிலவியது.

இந்தப்பதவி எதிர்காலத்தில் ஜனாதிபதி வேட்பாளராகும் தகுதியைக்கூட வழங்கக்கூடும் எனும் நிலையில் தனது பழைய 'சாதனைகளை' வெளிப்படுத்தும் முயற்சியில் தேர்தலுக்கு முன்னரே அனுருத்த ரத்வத்த ஈடுபட்டிருந்தார்.

இந்தவகையில்தான் இப்போது இராணுவத் தலைமை அதிகாரியாகப் பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிற்கும் அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கும் இடையில் முரண்பாடுகள் எழுந்தன.

தென்மராட்சியிலிருந்து படையினர்



இந்தியாவால் சிறீலங்கா அரசிற்கு வழங்கப்பட்டுள்ள ஆழ் கடல் ரோந்துக் கப்பல்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ர் ரத்வத்த டையப் ிகுறி



—வேலவன்—

விலகிச்செல்லாதவாறு தாமே பார்த்துக் கொண்டதாக இவ்விருவருமே உரிமை கோரப்போய் இருவரும் முரண்பாடான தகவல்களை வெளியிடவேண்டி ஏற்பட்டது.

ஆனால் இதன் விளைவு இராணுவத் தலைமை அதிகாரி ஜானக பெரேராவையே பாதித்திருப்பது இப்போது புலனாகிறது.

இப்பதவியை ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் இனவாதிகளைத் திருப்திப் படுத்தும் நோக்கில் பேசி வந்த பிரதமருக்கே வழங்க விரும்பியதாகவும் இந்நிலையில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கே இப்பதவி வழங்கப்படலாம் எனவும் ஊகங் கள் தெரிவிக்கப்பட்டன.

ஆனால், ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இல்லாத போதும் அனுருத்த ரத்வத்த அழைக்கப்பட்ட மையானது, அவர் பிரதிப்பாதுகாப்பு அமைச் சராகப் பதவி ஏற்றுவிட்டார் என்ற வதந்தி உருவாகக் காரணமானது. ஆனால் அவர் அன்று பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டாரே தவிர பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படவில்லை.

இந்நிலையில் கடந்த மாதம் வெளிநாட்டு விஜயத்தை பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகிக்கும் சந்திரிகா அம்மையார் மேற் கொண்டபோது, பதில் பாதுகாப்பு அமைச் சராக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பதவிப் பிரமாணம் செய்துகொண்டபோது பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக அனுருத்த ரத்வத்த நியமனமாகமாட்டார். தொடரும் யுத் தத்தை சந்திரிகா அம்மையார் நேரடியாகவே நடத்தப் போகின்றார் என்ற ஊகங்கள் வெளி யிடப்பட்டன.

ஆனால், இவ் ஊகங்களையெல்லாம் பொய்யாக்கி பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் எனும் மகுடத்தை அனுருத்த ரத்வத்தவே சூடிக்கொண்டுவிட்டார்.

பொ.ஐ.முன்னணியிலுள்ள பல அரசியல் தலைவர்கள், இராணுவத்தரப்பினர் என் போரின் அழுத்தங்களின் மத்தியிலும் ஜனாதிபதி சந்திரிகா அனுருத்த ரத்வத்த வையே பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக நிய மனம் செய்துள்ளார்.

ஒருபுறம் சமாதான முயற்சிகளில் சந்தி ரிகா அம்மையார் அதீத அக்கறை காட்டுவது போன்ற ஒரு தோற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ள அதே வேளை யுத்தத்தை நடத்தும் பொறுப்பு ஜெனரல் அனுருத்த ரத்வத்தவிடம் ஒப்படைக் கப்பட்டிருக்கிறது. கடந்த ஆறுவருட காலத் தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தவின் போர் வியூகங்கள் சிங்களப் படையினருக்கு பெரும் அழிவை மட்டுமல்ல பெரும் தோல்வியையே பரிசாக வழங்கின. ஆனாலும் அவர் தனது பதவிக் காலம் முழுவதிலும் இராணுவ நடவடிக்கை யின் தீவிரத்தைக் குறைக்கவில்லை.

இவ்வாறான தீவிர இராணுவ நடவடிக் கையே புலிகளை ஒழிக்க சரியான தந்திரோபாயம் என்பது அவரது முடிந்த முடிவாகும். இதன்போது படையினருக்கோ மக்களுக்கோ ஏற்படக்கூடிய இழப்புக்கள் குறித்து அவர் சிந்திப்பதில்லை.

இவ்வாறான நிலையில் யுத்தத்தை நிறுத்தாது பேச்சுவார்த்தை என சந்திரிகா அரசாங்கம் கூறிவரும் கொள்கைக்கு அமைய யுத்தத்தைத் தீவிரமாக நடத்தக்கூடிய அனு ருத்த ரத்வத்தவே பிரதிப்பாதுகாப்பு அமைச் சராக நியமிக்கப்பட்டுள்ளமை, பேச்சு வார்த்தை குறித்த கதைகளால் சினமுற் றிருக்கும் சிங்களப் பேரினவாதிகளைச் சாந்தப் படுத்த சந்திரிகா குமாரதுங்க எடுத்த நட வடிக்கை என்றே கொள்ளலாம்.

இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது என்னவெனில் யுத்தத்தைத் தீவிரமாக நடத் துவதென அரசாங்கம் தீர்மானித்து விட்ட தென்பதாகும்.

## உரிமைக்குரல்

ஜேர்மனியில் ஆயுதம் ஏந்தும் இராணுவப் பணிகளில் பெண்கள் ஈடுபடுவதை தடைசெய்கிறது, அந் நாட்டின் சட்டம். இதென்ன பைத்தியக்காரத்தனம் என்று தோன்றுகிறதா? டான்ஜா கிரேஸ் என்ற பெண்மணி இராணுவ ஆயுதங்கள் தொடர்பான மின்னியலாளர் பணிக்கு விண்ணப்பம் செய்கிறார். ஆனால் ஜேர்மன் பாதுகாப்பமைச்சகம் மேற்குறிப்பிட்ட சட்டத்தைக் காரணங்காட்டி அவரை நிராகரித்து விடுகின்றது. டன்ஜா விடுகிறவராக இல்லை(டான்ஜா என்றால் பிடிவாதம் என்றேனும் அர்த்தம் உள்ளதா என்று ஜேர்மன் மொழி தெரிந்தவர்களை விசாரிக்க வேண்டும்) பெண்களை அவமானப்படுத்தும் செயல் இதுவென்று நீதிமன்றுக்குச் சென்று சட்டத்தையே கூண்டிலேற்றிவிட்டார்.

ஐரோப்பிய யூனியன் நாடுகளில் சம உரிமைக் கருத்துக்களுக்கு எதிராக இந்தச் சட்டம் உள்ளதென்ற, லக்ஸ்சம்பேர்க் நீதிமன்ற நீதிபதியின் கூற்றைத் தொடர்ந்து டான்ஜாவின் வெற்றிக்கான சந்தர்ப்பம் வலுவடைந்துள்ள அதேவேளை, ஜேர்மன் இராணுவத்தின் மருத்துவ உதவியாளர்களாகவும், இராணுவ இசைக்குழுவின் பான்ட் வாசிப்பவர்களாகவும் பணியாற்றும் 4340 பெண்களும், ஜேர்மனியக் கட்டமைப்பின் பிரதிநிதிகளும் டான்ஜாவிற்கு தமது ஆதரவை வழங்கியுள்ளனர். இவ் ஆதரவுகள் நீதிபதி நல்ல தீர்ப்பை வழங்கி, பெண்களும் இராணுவத்தில் ஆயுதந்தாங்கி போராடும் வாய்ப்பை உருவாக்கித் தருவார் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளன.

அதுசரி இராணுவத்தில் பெண்கள் இனிமேல்தான் சேரப்போகின்றார்கள் என்பதெல்லாம் புதினமான செய்தியா என்ன? எனக் கேட்கிறார்கள் தமிழீழப் பெண்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்தமிழர் விடுதலைப்போராட்டமும் அதன் இலக்கியப் பதிகையும்

-கருணாகரன்-

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இலக்கியப் படைப்புக்கள் மட்டுமல்லாது எமது வரலாற்றில் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் படைப்புக்களை உள்ளடக்கிய தொகுப்பு நூல்களும் தம் பங்களிப்பைச் செய்திருக்கின்றன. தேசியரீதியில் அரச சார்பற்று தமிழர்களின் பிராந்திய வெளியீடுகளாகவும் சுயேச்சையாக வெளிவந்த இவை, போராட்டத்தை வலியுறுத்தி தமிழர் வாழ்வை போராட்ட வாழ்வாக மாற்ற முனைந்திருக்கின்றன. சுதந்திரன் தொடக்கம் இன்றைய ஈழநாதம் வரை இதில் அடங்கும். ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, திசை, உதயன்-சஞ்சீவி, ஈழநாதம் ஆகிய பத்திரிகைகள் இவற்றில் முக்கியமானவை. இதேபோல மறுமலர்ச்சி, சுடர், விவேகி, கலைச்செல்வி, அலை, புதிசு, சமர், சிரித்திரன், மல்லிகை, தாயகம், அமிர்தகங்கை, உள்ளம், முனைப்பு, வியூகம், களம், வெளிச்சம், கவிதை இவற்றில் குறிப்பிடக்கூடியன. தொகுப்பு நூல்களாக - இந்த மண்ணும் எங்கள் நாட்களும், மரணத்துள் வாழ்வோம், கல்லறை மேலான காற்று, சொல்லாத சேதிகள், காலம் எழுதிய வரிகள், வெளிச்சம் கவிதைகள், வானம் எம் வசம், செம்மணி ஆகிய கவிதைத் தொகுதிகளும், 'வெளிச்சம் சிறுகதைகள்' சிறுகதைத் தொகுதியும் முகில்களின் மீது நெருப்பு எனும் ஓவிய நூலும், காலமும் கோலமும் என்ற கேலிச் சித்திரத் தொகுதியும் இடம் பெற்றுள்ளன.

இக்காலகட்டத்தில் இலக்கியம் தவிர்ந்த களச் செயற்பாட்டில் ஓவியம் முக்கிய இடத்தை வகித்தது. கண்காட்சிகளிலும் வெளியீடுகளிலும், சுவரொட்டிகளிலும் ஓவியம் நமது போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது. அரங்கச் செயற்பாட்டிலும் ஓவியம் இடம்பெறத் தொடங்கியது இக்காலப்பகுதியில்தான்.

போராட்ட உணர்வை மக்களிடையே அதிகம் பரவச் செய்த கலை ஊடகங்களில் நாடகம் முதன்மை பெறுகின்றது. எண்பதுகளில் புது வேகம் கொண்ட நாடகம்(அரங்கு) வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் புதுமையிலும் வளர்ச்சி கண்டதும் இச்சந்தர்ப்பத்தில்தான். புதிய களம், புதிய சிந்தனை, புதிய சொல்லாடல், புதிய முகங்கள், புதிய இசை, புதிய உள்ளடக்கம், புதிய வெளிப்பாடு என்று புதுப்பரிமாணத்தை நோக்கி நாடகம் பயணித்தது. எண்பதுகளின் நடுப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட 'மண் சுமந்த மேனியர்' மிக முக்கியமான ஒரு அரங்க வெளிப்பாடு.

நாடகத்தில் புதிய எழுச்சியைத் தந்து போராட்டத்திற்கு வலிமை சேர்த்த கலைஞர்களில் குழந்தை ம.சண்முகலிங்கம், தாசீசியஸ், நா.சுந்தரலிங்கம், முருகையன், க.சிதம்பரநாதன், மௌனகுரு, ஜெயசங்கர், புதுவைஅன்பன், பாலாமாஸ்ரர், நா.யோகேந்திரநாதன், ரதிதரன், விஜயசேகரன், ரகு, விந்தன், அ.இரவி எனப்பலர் முக்கிய பங்காற்றியிருக்கின்றார்கள்.

ஈழத்துத் தமிழ்நாடக அரங்கை தமிழகத்தில்கூட ஒரு வியப்புக்கலந்த பார்வையுடன் நோக்குமளவுக்கு எண்பதுகளின் பின்னான எமது நாடகங்கள் சிறப்புற்றன. அரசியல் விழிப்புணர்வையும் பிரக்ஞையையும் ஏற்படுத்தும் வலுவான கலைவடிவமாகவும், ஊடகமாகவும் நாடகம் பரிணமித்தது. நவீன நாடகம் மக்களிடையே அறிமுகமாகவும் மக்களுடன் நாடகம் இணைந்து பரிணமிக்கவும் இந்த நாடகங்கள் நிகழ்த்திய முறைமையில், எடுத்துச் சென்ற வகையில் மிகப்பொருத்தமான வழிமுறையை நாடகவியலாளர்கள் கையாண்டார்கள். நாடகம் எமது சூழலில் பெற்ற இடம், இவற்றின் மூலம் மேலும் தாக்கவலுவானது. இதன் தொடர்ச்சியாக தெருவெளி அரங்கு புதிது புதிதான கட்டமைவுடனும், உள்ளமைவுடனும் விரிவடையத் தொடங்கியது. இன்று தெருவெளி அரங்கு நமது சூழலில் பெற்றிருக்கும் இடத்துக்கு அன்றைய செயற்பாடுகளே அடிப்படையாகின.

நாடகத்துடன் ஓவியமும் எமது போராட்ட வரலாற்றில் பிரதானமான முகத்தை அடையாளப்படுத்துகின்றது. போராட்டப்புலத்தைச் சித்தரிக்கும் ஓவியம் புதிதான வெளிப்பாட்டில் மேற்கிளம்பியது எண்பதுகளில். ஓவியம் பற்றிய விழிப்புணர்வும், அறிமுகமும், அறிதலும், தேடலும் இக்காலத்துடன்தான் பரந்த அளவில் ஈழத்தமிழ்ச் சூழலில் ஏற்பட்டது எனலாம். சிறைச்சாலைப் படுகொலைகள், இராணுவத்தால் ஏற்படும் கைதுகள், சித்திரவதைகள், படுகொலைகள், தீவைப்புக்கள், மக்கள் எழுச்சிகள், போராளிகளின் செயற்பாடுகள் என இவ்வாறு பல முறைகளில் ஓவியம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. ஓவியக் கண்காட்சிகள், சுவரொட்டிகள், சுவரோவியங்கள், நூல்கள்- சஞ்சிகைகளிலான ஓவியங்கள் என சகல முறைகளிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்தினார்கள் நமது ஓவியர்கள். அ.மாற்கு, கோ.கைலாசநாதன், ரமணி, சூரி, நிலாந்தன், தயா, அருந்ததி, வாசுகி, ராஜன், இராசையா, கோபாலி, லங்கா, ஞானகுரு, ரவி, எனப்பலர் பல்வேறு வகையான முறைகளில் ஓவியத்தை அரசியல் பிரக்ஞையுடன் பயன்படுத்தியிருக்கின்றார்கள்.

ஈழத்தின் போராட்ட அநுபவங்களை உள்வாங்கியும் இனப்பிரச்சினைகளில் கொடூரத்தை உணர்த்தியும் தமிழகத்தின் ஓவியர்கள்கூட மிக முக்கியமான படைப்புக்களை வெளியிட்டிருக்கின்றார்கள். வீரசந்தானத்தின் பல ஓவியங்கள் தமிழகத்தின் பல இடங்களில் ஈழப் போராட்டத்துக்கு ஆதரவாக கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. இவரது ஈழப் புலச் சித்தரிப்பு ஓவியங்களடங்கிய ஓவிய நூல் முகில்களின் மீது நெருப்பு என வெளியாகியிருக்கிறது. இது தவிர, பல நூல்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் மற்றும் தனியாகவும் வீரசந்தானம், மருது, மாரிமுத்து, மாரீஸ், இளவேனில், புகழேந்தி ஆகியோர் தமது தூரிகையின் மூலம் ஈழத்தைச் சித்திரிக்கின்றனர். ஒரு காலத்தில் சுவரொட்டிகளில் கூட கலையழகுடனும் கவித்துவத்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டனும் எங்கள் தேசமெங்கும் நம் வாழ்வைப் பேசின.

போர்க்கால ஓவியங்கள் உலகெங்கும் மிக முக்கியமானவையாகப் பேசப்படுகின்றன. இந்த நூற்றாண்டின் மிகப் புகழ் பெற்ற போர் ஓவியம் பிக்காஸோவின் குவார்ணிக்கா. இரண்டாம் உலகப் போரின் அனுபவத்தால் ஏற்பட்ட பிரதிபலிப்பாகவே அது இருக்கின்றது. தமிழ்ச் சூழலில் போரோவியங்கள் இருந்ததாக அறிய முடியவில்லை. அறியப்பட்ட இரண்டு ஓவியங்கள் குருசேத்திரக்காட்சியும் ஜடாயுவதையுமே. இவை இரண்டும் இதிகாசக் காட்சிகளைச் சித்தரிப்பன. தமிழில் போர் இலக்கியம் இடம்பெற்றிருக்கும் அளவுக்கு ஓவியத்தின் அடையாளம் இல்லை.

ஆனால், ஈழப்போராட்டம்தான் தமிழில் போர் ஓவிய மரபை முதலில் துவக்கியது எனலாம். போர் ஓவிய அநுபவம் தமிழில் சிந்தித்தது எண்பதுகளின் பின்பு தான்.

மரபிலும் நவீனத்திலும் இந்த வெளிப்பாடு அமைந்தது. இது ஓவியக் கண்காட்சிகள், சுவரொட்டிகள், பிற அச்சு வெளியீடுகள் என்பவற்றுக்கு அப்பால் நாடகத்திலும் இணைந்து இயங்கியது. நவீன நாடகத்தில் புதிய ஒப்பனைக்கும் அரங்கமைப்புக்கும் மேலும் வலுவாக இது தொழிற்பட்டது. நவீன ஓவியப்பரவலாக்கத்தில் இவை முக்கிய இடம் வகித்தன.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நாட்களில் போராட்ட ஓவியமாக இயக்கம்கொண்ட இது, பின்னர் போராட்டம், போராக மாற்றம் கண்ட போது போராட்ட ஓவியத்துடன் போர் ஓவியமும் வெப்பாடடையத் தொடங்கியது. இன்று இந்த இரண்டு பண்பிலும் ஓவியம் இயங்குகின்றது.

ஓவியம் பயில்தல்கூட இந்தக் காலத்துடன்தான் அதிகமாகத் தொடங்கியது. நவீன நாடகப்பிரக்ஞை எவ்வாறு சமூகத்தின் சகல பிரிவினரையும் எல்லாப்பிரதேசங்களிலும் சுவறத்தொடங்கியதோ அவ்வாறு ஓவியப் பிரக்ஞையும் பரவலடைந்தது. நாடகம் பயில்தல் போல ஓவியப்பயில்தலும் நிகழத் தொடங்கியது.

எமது சூழலில் ஓவிய ஈடுபாடு இருந்த அளவுக்கு ஓவியப்பயிலுதலுக்கான களம் அமையவில்லை. ஓவியம் பயிற்றுவிக்கும் நிறுவனங்களோ அமைப்புக்களோ அல்லது ஓவியர்களின் தொடர்ந்த செயற்பாடோ இருக்கவில்லை. இது மிகவும் வருந்தத்தக்க நிலையாகவே தொடருகின்றது. அ.மாற்கு ஓரளவு ஓவியப் பயிலுதலுக்கு ஊக்கமளித்துச் செயற்பட்டார். சில கண்காட்சிகளும் இதனால் நிகழ்த்தப்பட்டன. ஆனால் இந்தப் பயிலுதலும் தொடர்ந்து நிகழ முடியாமல் போய்விட்டது.

இதே வேளையில் நாடகம் புதிய திசையில் புதிய பரிமாணங்களுடனும் புதிய களத்தில் நகரத் தொடங்கியது. நாடகப் பட்டறைகளும் அரங்கச் செயற்பாடுகளும் பரவலாக நிகழத்தொடங்கின. யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளிலும் வன்னியிலும் நாடகப்பட்டறைகள் பல தரப்பினராலும் நடத்தப்பட்டன. நாடகம் தொடர்பான புரிதலுக்கும் நாடகத்தை அரசியல், சமூக தளத்தில் இயக்க முறை வைப்பதற்கான வழிமுறைகளுக்கும் இந்தப்பட்டறைகள் அதிகமும் வாய்ப்பளித்தன. இதன் விளைவாக நாடகம் சமகால நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய முறையில் வடி



வீதியில் புதியமாற்றத்திற்கு உட்பட்டது. தெருவெளி அரங்கத் தன்மையுடன் அதிலிருந்து சற்று வேறுபட்டு அரங்கத் தன்மையை நெருங்கியதாகவும் கொண்ட ஒரு புதிய வடிவம் உருவாகியது. இது நாடகத்தை விட தமிழீழத்தின் பெரும் பகுதிகளிலும் தீவிர அசைவியக்கமாக நிகழ்த்த உதவியது.

இடப்பெயர்வுகள், பொருளாதார நெருக்கடி, மின்சார வசதியின்மை போன்ற பல காரணங்களை மனங்கொண்ட எமது நாடகவியலாளர்கள் காலத்துக்கும் சூழலுக்கும் பொருத்தமான அரங்க வடிவத்தைத் தேடினார்கள். அதன் விளைவாக ஊர்கள் தோறும் ஒரே நாளில் பல நிகழ்வுகளை நிகழ்த்தக்கூடிய முறையில் நாடக வடிவத்தையும் நாடகங்களுக்கான நிகழ்த்து பொருட்களையும்(சாதனங்களையும்) உருவமைத்துக் கொண்டனர்.

இந்த நாடகங்களின் கருப்பொருள்களாக அனேகமான தருணங்களில் தமிழர் உரிமைப் போராட்ட வரலாறு, தமிழின ஒடுக்குமுறை வரலாறு என்பன பேசப்பட்டன. வரலாற்று நிகழ்வுகளை நினைவூட்டுவதனூடாகவும் எடுத்துரைப்பதனூடாகவும் நிகழ்கால மனங்களிடையே எமது இனத்தின் நிலை பற்றிய யதார்த்தத்தையும் போராட்ட அவசியத்தையும் உணர்த்துவதில் முன்னின்றன.

இந்த நாடகங்கள் எழுச்சியையும் போராட்டப்பங்கேற்பையும் ஏற்படுத்தும் விதத்தில் இந்த நாடகங்கள் மேலும் உருவாகியிருந்தன. உணர்வெழுச்சியும் அரசியல் பிரக்ஞையும் மிக்க பல நாடகங்களை உருவாக்கும் வேட்கை பல தரப்பினரிடையேயும் ஏற்பட்டது. தொடர்ந்த நாடகப்பயிலுதலும் விவாதங்களும் நிகழ்ந்திருக்குமாயின் இந்த நாடகங்களும் நாடகவியலாளரும் மேலும் உயர்ச்சிபெற வாய்த்திருக்கும். காலச்சூழ்நிலையின் இடர்பாடுகள் இதற்கான சாத்தியப்பாடுகளை வழங்காத காரணத்தினால் இந்தப் பயில்தல் விரிவடையாது போய்விட்டது. எனினும் நாடக அறிக்கைகள் ஓரளவுக்கு நிகழ்ந்தன. போராட்ட வாழ்வின் பல நிகழ்வுகளை உள்ளடக்கிய பல நாடகங்கள் மக்கள் மனதில் மேலும் அரசியல் விழிப்புணர்வைத் தூண்ட ஏதுவாகின. போராளிகளின் தியாகங்கள், போராளிகளின் வாழ்க்கை, போராட்ட நிகழ்வுகள் போர் வாழ்வில் மக்கள் நிலைமைகள் எனப் பலவும் நாடகத்தில் இடம்பெற்றன. எமது கல்வியும், எமது வாழ்க்கை முறைமையும் எமது விடுதலைப் போராட்டத்துக்கு எந்த வகையில் சாதகங்களையும் பாதகங்களையும் அளிக்கின்றன என்பதையும் இந்தக் காலகட்ட நாடகங்கள் தீவிரமாகப் பேச முயன்றன. 1985ற்குப் பின்னர் தொடக்கம் இன்று வரையான நாடகங்களில் எமது கல்வியும் பொருளாதாரக் கட்டமைப்புக்களும் வாழ்க்கை அமைப்பும் விவாதிக்கப்பட்டே வருகின்றது. போராட்டத்தை முன்னிலைப்படுத்தி விவாதிக்கப்படும் இந்த முறைமை அடுத்த கட்டத்துக்கு நகராதது பெருங்குறையாகவே இருக்கின்றது. எனினும் சிறையிருத்தலிலிருந்து எமது இனம் மீள வேண்டிய அவசியத்தையும் மீள்வதற்கு இடைஞ்சலாய் இருக்கும் தடைகளையும் இவை பேசின என்பது கவனங்கொள்ள வேண்டியது.

நாடகம் அரசியல் பரிமாணங்களை உள்ளடக்கிய சமூக அரங்காக பரிணமிப்பதற்கு இதுவரையான அரங்கச் செயற்பாடுகள் நிறைந்த அனுபவத்தை நமக்கு வழங்கியுள்ளன.

தொடரும்...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேற்றைத் துயர் தொலை
# நிகழ்காலம் எம்பக்



கண்ணெதிரே கலைந்துபோகிறது கனவு.
மண்ணெனவே உதிர்ந்துபோகிறது மனம்.
நெஞ்சுக்குள்ளே கோடுகளால் வரைந்த உருவம்கூட
ஒப்பேறமுன்னரே உருகிப்போகிறது.
நம்பிக்கைமட்டும் நமக்கற்றுப் போயிருந்தால்
வெம்பிப்போய் என்றோ விழுந்திருப்போம்.
நாளை நமக்கெனும் நம்பிக்கையிற்தானே
வாழ்வு வசப்படுமென வரலாறே நகர்கிறது.
ஒருநாள் மட்டுமே உயிர்வாழுகின்ற
ஈசல்களுக்கேன் இறக்கை முளைக்கிறது?
நீண்டநாள் பறப்பேனென அதற்கு நினைப்பு
அதனால் முளைக்கிறது.
மாலையில் கருகும் மலர்களெல்லாம்
காலையில் என்னவாய் கண்சிமிட்டுகின்றன.
நாட்கள் பலவாக வாழ்வோமெனும் நம்பிக்கை
பூக்களுக்கிருப்பதாற்தானே அவை புன்னகைக்கின்றன.
எவரெஸ்ட் சிகரத்தை டென்சிங் தொட்டான்
அதற்குமுன்
எத்தனைமுறை ஏறியிறங்கினான்.
என்றோ ஒருநாள் தொடுவேனென்ற நம்பிக்கை
அவனுக்கிருந்தது அதனாலே வென்றான்.
நடக்கவேண்டுமா எழுந்து பார்.
கடக்கவேண்டுமா பாய்ந்து பார்.
எப்படிச் சாத்தியமாகுமென இடிந்து போனால்
இப்படியே கிடக்கவேண்டியதுதான்.
துரையப்பாவை தலைவர் சுட்டபோது
ஏன்சுட்டதென்று எவரும் கேட்கவில்லை.
எவர் சுட்டதென்றுதானே கேட்டார்கள்.
பின்னர் பிரபாகரனென்ற பெயரை
பிரமிப்புடன் உச்சரித்துக் கொண்டனர்.
பொன்னாலைப்பாலத்தில் புதைத்தகுண்டு வெடிக்காதபோது
என்னாலினி முடியாதென தலைவர் நினைத்திருந்தால்
ஆனையிறவைவெல்ல அவரால் முடிந்திருக்குமா?
எத்தனைபேர் அவருடன் நின்றார்கள்
பின்னர் சென்றார்கள்.
எத்தனைபேர் அவருடன் வந்தார்கள்
பின்னர் போனார்கள்.
கூட இருந்தவர்கள் அகன்றபோதும்
ஆடவில்லையே அந்த ஆலமரம்.
வெல்வேனென்ற வீரியமும்
செல்வேனென்ற நம்பிக்கையும்
வல்வைமைந்தனுக்கு வாய்த்திருக்காவிடில்
ஈழத்தமிழருக்கு எப்போதோ
ஆண்டுத்திவசம் முடிந்திருக்கும்.
நம்பிக்கையே பலம் பொருந்திய தும்பிக்கை.
தளராதிருக்க வேண்டும் தமிழரே.
வன்னிக்கு வரும்போது வாழ்வே முடிந்ததென
எண்ணியிருந்தோமானால்
இதுவரைக்குள் எல்லாமும் தொலைத்திருப்போம்.
உன்னியெழுந்தோம்
ஊர்புகுவோம் என்றுரைத்தோம்.
இன்று செம்மணியில் நின்று சிரிக்கின்றோம்.
நம்பிக்கைதானே நாற்றங்கால்.
ஒருநாளும் தளராதிருப்பவனே பெருவாழ்வுபெறுவான்.
முடியுமாயிதுவென மலைத்துப் போறவன்
பிடிமானமேதுமின்றிப் பொசுங்கிப்போய் விடுவான்.
ஊர்போக வேண்டுமா?
போவேனென நம்பு.
உயிர்வாழ வேண்டுமா?
சாகேனென நம்பு.
நம்பிக்கைதானே நாட்களை நகர்த்துகின்றது.
பிரபாகரனென்ற பெயர்
ஒரு மனிதனின் பெயர் மட்டுமல்ல
நம்பிக்கைக்கு இன்னொரு நாமம்.
வாழ்வு வசப்படுமென யார் நம்பினாலும்
அவனுக்கு வாசல் திறந்து கொள்ளும்.
ஈழத்தமிழரின் சோதனைக் காலம் முடிந்துவிட்டது.
இனிச்சாதனைக் காலம்.
இருள்வாழ்வு எமக்கினி எப்போதுமில்லை
வெற்றியின் முகமே எமக்கினி விளங்கும்.
எங்கள் மூச்சுக் கலந்த காற்றுக்கு முன்பாக
நிற்கும் பலம் உலகத்தில் எவருக்கும் இல்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லய

# கம்



லக்களம்

-வியாசன்-

நாங்கள் வேர்படர்ந்த அறுகம்புல்
கொத்திப் புரட்டினாலும் முளைப்போம்.
கொழுத்தி எரித்தாலும் துளிர்ப்போம்.
நிமிர்ந்த வாழ்வுவருமென நினை.
வருந்தி உழை.
தமிழீழம் வருமென நம்பு.
தளராது போரிடு.
உன்னை யாரழித்தல் கூடும்?
உமித்துகளல்ல உன்னை யாரும் ஊதித்தள்ள
கைவிலங்கற்று வீசும்காற்றை அவாவுவோம்
வாசலில் வரவேற்கும் பூக்களை விரும்புவோம்.
சிறகடித்துப் பறக்கிறதே பறவை
அதன் சங்கீதத்துக்கு தாளமிடுவோம்.
விட்டு விடுதலையாகும் விடுதலை வேண்டும்
கட்டுக்களற்று
எந்தக்காயங்களுமற்று
தொட்டுமகிழ எமக்குச் சுதந்திரம் வேண்டும்
முன்னரெமக்கொரு நிலமிருந்தது
அந்தநிலத்திலொரு வாழ்விருந்தது
அந்த வாழ்விலொரு வாசமிருந்தது.
வாசத்தைத் தொலைத்து எத்தனை வருடங்கள்?
போரிடுவோம்
தொடர்ந்து போராடுவோம்.
பிரபாகரமென்ற நம்பிக்கையுடனும்,
புலிகளென்ற தும்பிக்கையுடனும்,
போராடுவதுதான் பெருமைதரும்.
காடுகளையும், மலைகளையும் கடப்போம்.
மேடுகளிலும் பள்ளங்களிலும் நடப்போம்.
கால்கள் வலிக்குதெனக் களைப்பாறும் போதுதான்
பகைவனின் குதிரைகள் பக்கத்தில் வந்துவிடுகின்றன
அதனால்
நடக்கத்தொடங்கினால் இளைப்பாறல் கூடாது.
தொடர்ந்து நடப்போம்
சூரியன் கைக்கெட்டும் தூரத்தில்தான் சுடர்கிறது.
தமிழீழம்
அது எங்கள் உயிர்க்கோளம்.
உருவாகிவிட்டது சிசு
கருவாய் திறப்பதற்காகவே காத்திருக்கின்றோம்.
நடுகல்வரிசையை நாளும் தரிசித்து
விடுதலைக்கான வேகத்தை விரைவுபடுத்துவோம்.
ஆவிநிகர்த்த எம் "அன்னைநிலத்தேவி"
தன் அளகபாரம் நீவிமுடித்தாள்.
முத்துப்பரல்களைக் கொட்டிச்சிரித்தாள்.
பகைமுழுதும் தீயும் திசையுரைத்தாள்.
வரமளித்து வல்லமை நல்கினாள்.
உரம் கொண்டெழுந்தது ஓயாத அலை
இனி ஊர் முழுதும் எமதாக்கியே ஓயும்.
தாயின் துயரழித்தே தணியும்.
பகைவரை மட்டுமல்ல
துரோகிகளையும் அள்ளிவந்து
எம் காலடி ஏற்றும்.
காற்று எம்பக்கம்
கடலும் எம்பக்கம்
நேற்றைத் துயர் தொலைய
நிழ்காலம் எம்பக்கம்
தாழ்வுற்று எம்தலைகுனிந்தது போதும்
வாழ்வு சமைப்போம் வாருங்கள்.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவிப்பு

-கருணை ரவி-



அந்த அறிவிப்பைக் கேட்டதும் அவள் அதிர்ந்து போனாள். அந்த அறிவிப்பு அந்த ஊரில் எப்போதாவது நடக்கும். அந்த அறிவிப்பு எழுந்தால் சந்தோஷங்கள் தொலைந்து போய்விடும். பயம் முளைத்துச் சிறகுகளை விரிக்கும். தூக்குக் கயிற்றில் தொங்கும் வேதனையில் மனங்கள் உயிர்பற்றிய ஆசையில் தவித்தழுங்கள்.

அந்த அறிவிப்பைக் கிளப்பியவர்கள் வீதிகளை நிறைத்து வந்தனர். அவர்களுக்கு நீதி, நியாயங்கள் பழி, பாவங்கள் ஏதும் தெரியாது உயிர் குடித்தலில் ஊறிப்போனவர்கள். ஆள் பிடித்தலே அவர்களின் அன்றாட தொழில்.

அவர்கள் எவரையும் பிடித்தால் பிடித்தவர்கள் வீடுதிரும்பமாட்டார்கள். பிடித்தவர்களை நீண்ட நாட்களுக்கு தங்களுடன் வைத்திருக்கவும் மாட்டார்கள். எங்கேனும் ஒரு வெளியினில் அல்லது பற்றைகளுக்குள் கழுத்துகளை முறித்துவிட்டு மூடிவிடுவார்கள்.

அப்படி ஒரு நிறைவேற்று நிகழ்வுக்காகவே அந்த அதிகாலை வேளையில் அந்த ஒலிபெருக்கி அனைவரையும் விழுந்தாலடிப் பிள்ளையார் கோயிலினில் கூடும்படியாய் அலறியது.

அவர்களின் அழைப்பை ஏற்காமல்வீடுகளில் இருப்பவர்களை ஒளித்தோடுபவர்கள் என நினைத்து வாழ்வை ஒப்பாரிகளாக்கி விடுவார்கள். அந்த ஒப்பாரிகளை விருப்பாது அவள் மகளை அழைத்துக் கொண்டு அந்தப் பிள்ளையார் கோயிலுக்கு ஓடினாள்.

அந்தக் கோயில் முற்றத்தில் சனங்கள் நிரம்பி வழிந்தன. ஒவ்வொரு முகங்களிலும் பயங்கள் பொங்கிச் சரித்தன. கடும் வெய்யில் வரும்வரையும் எந்த விசாரிப்புகளும் நடக்கவில்லை. வேர்த்தொழுகியது. தேகங்கள் சீலைகளால், சால்வைகளால் சிலர் தலைகளை மூடியிருந்தனர். பசியால்சுருண்டனர் குழந்தைகள். முதியவர்கள் சுடுமணலில் சுருண்டு படுத்துக்கொண்டு நெளிந்தனர் மண்புழுவைப்போல.

அவர்கள் மரநிழல்களில் நின்றனர். பாடல்கள் பாடி ஆடிக்கொண்டிருந்தனர். அந்தப் பாடல்கள் பெண்களை கேலி செய்வதாக அவர்களின் மொழி புரிந்தவர்க்கள் எரிந்துகொண்டிருந்தனர். பெண்கள் அவர்களைப் பார்க்கவில்லை குமைந்து கொண்டிருந்தனர்; தலைகளை கவிழ்த்தபடி.

கிழக்குப் பக்கமாக ஒரு வாகனம் இன்னும்சிலரை நிரப்பிக்கொண்டு வந்து அந்த ஆலமரத்துக்கு கீழே நின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிலிருந்து அனைவரும் குதித்தார்கள். குதித்தவர்களில் சிலர் முகங்களை கறுத்தத் துணிகளால் மூடியிருந்தனர். சிலர் மூடாமலும் விழிகளை அகட்டிக்கொண்டிருந்தனர்.

அந்தக் கறுத்தத் துணிகாரர்களைக் கண்டால் கர்ப்பம் கரையும் பீதி அவளுள் முளைக்கும். மகளை கையால் பற்றியபடி இருந்தாள்.

அந்தத் துணிகாரரின் உதவிகளோடும், உதவிகள் அற்றும்தான் முன்பு அவர்கள் ஊர்களுக்குள் நுழைந்தார்கள். சிலரை அள்ளிக்கொண்டும் சென்றார்கள். அள்ளியவர்கள் இன்னும் வீடுகள் திரும்பவில்லை. அவர்களின் கதைகள் நீள்கின்றன... சிறகுகள் முளைத்துப் பறக்கின்றன... அந்தச் சிறகுகளை ஒடிப்பதுக்காய் ஒரு பெருவெளியையே விழுங்கி விட்டார்கள்.

இன்றும் எந்தப் பெருவெளியை நிரப்பவோ... எவரெவரை அள்ளவோ... குரங்காய் அவளின் நினைவுகள் மரங்களெங்கும் தாவியது.

அந்தக் கறுப்புச்சட்டைக்காரர்களோடு அவர்களும் அந்தச் சுடுமணலில் இறங்கினார்கள். அவர்களின் கால்களுக்கு சூடு தெரியாது வேதனைகள் தெரியாது.

அவர்கள் பார்க்கும்போது விழிகளைப் பிதுக்குபவர்கள், உடல்களில் நடுக்கங்கள் எடுப்பவர்கள் எல்லாம் அவர்களின் எதிராளிகள், அழைத்துச் சென்று சப்பியும்விடுவார்கள்.

சிரித்து முகங்களை சாந்தமாய் வைத்திருப்பர்களை அவர்களுக்குப் பிடிக்கும் பிடித்துச் செல்லமாட்டார்கள். அவளும், மகளும் சிறுபுன்னகைகளை நறுக்கினார்கள். அவர்கள் கடந்தனர். அவளினதும் மகளினதும் மூச்சுக்கள் இப்போதுதான் இதமாகியது.

அவர்கள் நிறையப்பேரை அள்ளி விட்டார்கள். முகங்களில் சிரிப்புக்கள் ஒப்பனைகளோடு ஆடைகட்டி அலங்கரித்தது. அனைவரையும் வீட்டுக்குச் செல்லும்படி பணித்தார்கள். அவளும் மகளும் வீட்டுக்கு நடந்தனர், சிலர் சேர்ந்து போனவர்கள் இல்லாது தவித்துக் கொண்டிருந்தனர். தவிப்பவர்களை அவர்கள் விரட்டிக் கொண்டிருந்தனர்.

'அம்மா'

வழியில் ஒருவன் அவளையும், மகளையும் மறித்தான். அவள் நன்றாகவே அவனைப் பார்த்தாள். அவனின் முகம் காய்ந்திருந்தது. தெத்தாலயிருக்கும் குட்டிப் பற்களைக் காட்டிச் சிரித்தான். அவளுக்கு ஞாபகங்கள் கிழறின. சுவறியிருந்த தலைமயிர்களை விரல்களால் கோதி,

"என்னம்மா பாக்கிறியள்? நான்தான் றிங்கோத்தம்பி"

அதிர்ந்தாள். உள்ளிழுத்த மூச்சு வெளியில் வர தாமதித்தது. விழிகள் உருண்டன. எஜமான் முன்னிலையில் அகப்பட்ட ஒரு திருடனைப் போல.

"போயிடு தம்பி, எங்களோட கதைக்காதை" வாயைப் பொத்தினாள். வெடிக்கும் விம்மல்களை அடக்கிக் கொண்டு மகளின் கையை இறுகப்பற்றினாள். வேகமாய் நடந்தாள்.

அவளால் வேகமாய் நடக்க முடியவில்லை உடல் உருகி, ரத்தமாய் விழிகளால் வடிவதாயிருந்தது. வெங்கடாந்தி போல் சுற்றிய அவனின் நினைவிலிருந்து அவளால் விடுபடமுடியவில்லை.

றிங்கோத்தம்பி அவளின் பிள்ளையாய் எந்நேரமும் அவளின் வீட்டில் சுற்றிச் சுழன்றவன். அவனை இரு கண்களாய் நேசித்தாள். சாப்பாடுகள் கொடுத்து அவனை தூங்க வைத்து தாலாட்டும் பாடி இருக்கின்றாள்.

போராளிகளில் றிங்கோத்தம்பியை அவளுக்கு அதிகமாய் பிடிக்கக் காரணம் அவனுக்குத் தாய் தகப்பன் எவருமில்லை ஒரு நில அள்ளுகையில் அந்தத் துப்பாக்கிப் பேய்கள் இரவிரவாய் ஊருக்குள் புகுந்து நரபலி எடுத்ததில்தான்

சிறுகதை

அவன் தாய் தந்தையரை இழந்தான். அவனுக்குத் தாய் தானென்றுதான் அவனுடனான உறவைப் பெருக்கினாள்.

அப்படிப்பட்ட உறவை உதறிவிட்டதை நினைத்துத் துடித்தாள். அந்த உயிர் குடிக்கும் பேய்களுக்குப் பயந்துதான் அவள் வெடிகுண்டாய் அந்த வார்த்தைகளை அவனுக்கு விசிறினாள். அப்படி அந்தத் தெய்வங்களை அணைத்தவர்களில் சிலர் அவர்களின் கண்களில் பட்டு செம்மணிக் கதைகளாய் நீள்கின்றனர். அப்படியாய் தங்களுக்கும் ஆகக்கூடாது என்றுதான் அவள் அப்படி அவனுக்குக் கூறினாள். ஆனால் அவளின் மனமோ அவனின் வாடிவறண்ட முகத்திலும், மெலிந்த உடலிலும் பதிந்து இமைகளை நனைத்துக் கொண்டிருந்தன. நடையை நிறுத்தி அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் ஒரு ஒற்றையடிப் பனங்கூடலால் போய்க் கொண்டிருந்தான்.

அவனை யார் கவனிப்பார்கள்? அச்சம் கவனிப்பவர்களை தடுக்காமலாவிடும்? சாப்பாடுகள் நேரத்துக்கு நேரமில்லாமல் பற்றைகளுக்குள்ளும் செடிகளுக்குள்ளும் மழையிலும், வெய்யிலிலும், பனியிலும் எங்கெங்கு உறங்குகிறார்களோ....

அவனின் நினைவைச் சுமந்தபடி ஓடிப்போய் திண்ணையில் விழுந்தாள். அவன் வந்து அவளின் கண்களைத் துடைத்து நொந்த கால்களுக்கு ஒத்தணமிடுவதாய் அவளுக்கு இருந்தது. இனி அவன் நிழலாய் அவளுள் ஊசலாடுவான். அந்த ஊசலாட்டத்தால் அவள் வெந்து வெந்து தன்னை உருக்கிக் கொண்டாள்.

நாட்கள் நகர்ந்தன...

ஒரு நாள் காலை அதே ஒலிபெருக்கி மீண்டும் ஒரு அறிவிப்பை ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த அறிவிப்பு வழமைக்கு மாறாய் இருந்தது. அவளின் இதயத்தைக் கிளிப்பதுவாய் ... உடல்களை கருக்குவதாய் இருந்தது.

இரண்டு மணித்தியாலத்துக்குள் அனைவரையும் ஊரைவிட்டு வெளிக்கிடும் படியாய் ஈன இரக்கமின்றி அந்த அறிவிப்பு இருந்தது.

காலகாலமாய், தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்த நிலத்தை மாற்றானுக்குவிட்டுப் போவதென்றால்....

இப்படி ஒரு கொடிய அறிவிப்பை கேட்டதிலிருந்து அவள் வெந்து இத்துப் போனாள். உணர்வற்றவளாய் அப்படியே திண்ணையில் சரிந்தாள். வீட்டைவிட்டு விரட்டுவது அவர்களுக்கு சர்வசாதாரணம். அவளுக்கோ தாங்கமுடியாத வலியாய் இருந்தது.

மனம் இறுகி வேதனைச் சிலுவை நெஞ்சை அழுத்த மூட்டை முடிச்சுடன் வீட்டைவிட்டு வெளியேறினாள். வெய்யில் தொப்பளங்களாய் ஆத்திரங்கள் அவளில் விரவின.

கால்களுக்குத் தெரியவில்லை எங்கே நடப்பதென்று உறவுகள் என்று எவருமில்லை. அவர்கள் நீரேரிக்கப்பால் நிம்மதியாய் தூங்கி எங்கும் அச்சமின்றித் திரிவார்கள். வா...போ..., இரு... எழும்பு.... எந்த ஏவல்களுமில்லாத ஒரு சுதந்திர வாழ்க்கை. அந்த வாழ்க்கையோடு தங்கள் வாழ்க்கையை நினைக்க அவளுக்கு அழுகை பீறிட்டது.

அவள், அந்த நீரேரிக்கப்பாலான வாழ்க்கை தங்களுக்கு எப்போது கிடைக்குமெனத் தவித்தாள். அந்த கறுத்த மொட்டாக்கிட்ட உருவங்களையும், அந்தத் துப்பாக்கிப் பேய்களையும் சப்பித் துப்பிவிட்டு- எவருக்கும் அச்சமின்றி உறவுகள், சுற்றமென இழந்த சௌந்தர்யங்களை மீண்டும் அதே மண்ணில் பெறவேணும் போலவிருந்தது, அவளுக்கு.

அப்படியான ஒரு காலத்தின் பிரசவிப்புக்காய் மனம் தவித்தது. றிங்கோத்தம்பியை தேடியபடி கால்களை எறிந்து நடந்தாள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# AK-47 படையியல் தொழில்நுட்பத்துறை வரலாற்றின் வழித்தடத்தில் முத்திரை பதித்தவர்.

சர்வதேசப் பிரபல்யம் வாய்ந்த ஏ.கே 47 ரக இலகு தன்னியக்க சுடுகலனை வடிவமைத்தவரான மிகைல் ரிமோவிச் கலாஸ் நிகோவ் ( Mikhail Timofeyevich Kalashnikov) கடந்த நவம்பர் மாத முற்பகுதியில் ரஸ்சியாவின் அதியுயர் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். 81 வயது பூர்த்தியாகும் கலாஸ்நிகோவ் 1919 நவம்பர் 10ஆம் திகதி பிறந்தார். ரஸ்சியாவின் அல்ராய் பிராந்தியத்தில் உள்ள குரியா கிராமமே கலாஸ்நிகோவின் பிறந்தகமாகும். குரியா(Kurya) கிராமத்தின் இடைநிலைப் பாடசாலையில் 9ஆம் வகுப்பு வரை கலாஸ்நிகோவ் கல்வி பயின்றார். அதன் பின்னர் சைபீரிய துருக்கிஸ்தான் புகையிரத நிறுவனத்தின் மத்தாய் தொழிலகத்தில் தொழில்நுட்ப உதவியாளராக தனது அறிவியல் சார் பயணத்தை ஆரம்பித்தார்.

1938இல் கலாஸ்நிகோவ் செஞ்சேனையில் இணைந்து கொண்டார். கீவ் பகுதியிலுள்ள விசேட இராணுவப் பிராந்தியத்தில் சோவியத் தேசத்தைப் பாதுகாப்பதற்கான பணியில் அமர்த்தப்பட்டார். கீவிலிருந்த யுத்ததாங்கி தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கை நெறியையும் முடித்துக் கொண்டார். இங்கு பணியில் அமர்ந்த காலத்திலேதான் இவர் முதன் முதலாக கனரக யுத்ததாங்கியின் தொடர் சூட்டுக் கணிப்பியில் மாற்றத்தை ஏற்படுத்தினார். இதற்கென TT சுடுகலனிற்காக விசேட உபகரணத்தை வடிவமைத்தார். இதன் மூலம் யுத்ததாங்கியின் சுடுவலு உச்ச அளவை எட்டத்தக்கதாக்கப்பட்டது. பீரங்கி தாங்கி சுழலத்தக்கதாக மாற்றப்பட்டது.

1941 ஆனிமாதம் தளபதி ஜெனரல் ஜி.கே. சுக்கோ அவர்களின் வழிநடத்தலில் லெனின் கிராட் முனையில் பணியாற்றச் சென்றார். அங்கு அவர் யுத்ததாங்கியொன்றின் செலுத்துனராக கடமையாற்றினார். பிறையன்ஸ் பகுதியில் ஏற்பட்ட ஜேர்மனியர்களுடனான சமரின்போது கலாஸ்நிகோவ் செலுத்திய யுத்ததாங்கியும் சேதமடைந்தது, அவரும் காயமடைந்தார். விழுப்புண்ணடைந்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியிலேயே கலாஸ்நிகோவ் இலகு தன்னியக்கத் துப்பாக்கிகள் சம்மந்தமான ஆய்வில் ஈடுபட்டார். காயம் காரணமாகக் கிடைத்த 6மாத ஓய்வில் (இப்போது சுமார் 55 நாடுகளில் பாவனையில் இருக்கும் இலகு தன்னியக்கச் சுடுகலனை வடிவமைத்தார்) இருந்த அவர் வடிவமைத்த முதல் மாதிரி போரில் பயன்படுத்தப்படவில்லை. இவரது கண்டுபிடிப்பான AK-47 ரக சுரி குழல் துப்பாக்கியானது திரு. சிமோனோ அவர்களினால் வடிவமைக்கப்பட்டு இரண்டாம் உலக யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட SKS -45 ரக துப்பாக்கி மாற்றீடாகவும், அதனிலும் முன்னேற்றகரமானதாகவும் இருந்தது.

1942இல் சோவியத்தின் சிறிய ரக ஆயுதங்களுக்கான மத்திய ஆய்வகத்தில் பணியிலமர்த்தப்பட்டார். 1944இல் கலாஸ்நிகோவ் மேலும் சீரமைக்கப்பட்ட தன்னியக்க காபைன் சுடுகலனை வடிவமைத்தார். M43 ரக தோட்டா பயன்படுத்தக் கூடியதாக இந்தத் தன்னியக்க சுடுகலன் வடிவமைக்கப்பட்டது. தொடர்ச்சியான பரிசோதனைகளிலும் ஆய்வுகளிலும் ஈடுபட்டதன் விளைவாக வழுக்கள் மிகவும் குறைந்த தன்னியக்க இலகு சுடுகலன் 1946இல் வடிவமைக்கப்பட்டது. 1949இல் கலாஸ்நிகோவினால் வடிவமைக்கப்பட்ட மாதிரியான AK-47( Avtomat Kalashnikova Obrazets 1947) ரகம் 1949இல் சோவியத் தரைப்படையின் பாவனைக்கு வழங்கப்பட்டது. சார்ஜண்ட் தரத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த கலாஸ்நிகோவ் ஸ்டாலின் முதற்தர விருது கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

1949இலிருந்து கலாஸ்நிகோவ் சுரிகுழல் தன்னியக்க சுடுகலன்களுக்காக தேர்ந்த வடிவமைப்பாளராகச் செயற்பட்டு சோவியத் இராணுவத்திற்கு பல்வேறு சிறிய இடைத்தர தன்னியக்கத் துப்பாக்கிகளின் மாதிரிகளை வடிவமைத்தார். கலாஸ்நிகோவின் சேவையை நன்குணர்ந்த அன்றைய சோவியத் அரசு அவரைப் பல தடவைகள் கௌரவித்தது. அவர் இரு தடவைகள் சிறந்த சோசலிசத் தொழிலாளி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்(1958, 1976). இதேபோல ஸ்டாலின் விருது(1959), லெனின் விருது (1964) ஆகிய விருதுகளும் கலாஸ்நிகோவை அணி செய்தன.

1969இல் கலாஸ்நிகோவ் கேணல் தரத்திற்கு உயர்த்தப்பட்டார். 1971இல் இராணுவப் பொறியியலுக்கான கலாநிதிப் பட்டம் இவருக்கு மொஸ்கோ பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டது. இவற்றைவிட கலாஸ்நிகோவ் பல விருதுகளையும் பதக்கங்களையும் பெற்றார்.

1987இல் 75வது வயதைப் பூர்த்தி செய்த கலாஸ்நிகோவ், அவரது தன்னிகரில்லா AK-47 தன்னியக்க சுடுகலனின் வடிவமைப்பிற்காகவும், சிறிய ரக ஆயுதங்களை வடிவமைப்பதில் இவர் ஆற்றிய பங்களிப்பிற்காகவும் அப்போதைய ருஸ்சிய குடியரசின் ஜனாதிபதியாக இருந்த B.N.Elstinஇனினால் கௌரவிக்கப்பட்டார். தாயகத்திற்கு ஆற்றிய செயற்கரிய செயற்பாடுகளுக்காக மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்த்தப்பட்டார்.

இன்று உலகிலே அகல விரவி பலநாடுகளிலும் பாவனையிலிருக்கும் AK-47 ரக துப்பாக்கியானது சில நாடுகளில் அந்நாடுகளின் இலச்சினையோடு தயாரிக்கப்படுகின்றது. 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மாத்திரம் 70மில்லியன் AK குடும்ப பல்வேறு மாதிரிகள் ரஸ்சியாவிலிருந்து விற்பனையாகி இருக்கின்றது. இராணுவத்தில் பணியாற்றி, விலகிய பின்னர் ஆயுத உற்பத்தி தொழிற்சாலையில் பணியாற்றி இற்றைவரைக்கும் AK-105 வரையான தொடர் துப்பாக்கி மாதிரிகளை வடிவமைத்துள்ளார். இராணுவத் தொழில் நுட்பத் துறையில் சாதனைபடைத்த கலாஸ்நிகோவ் தமது 81வது வயதிலும் ரஸ்சிய அரசினால் கௌரவிக்கப்பட்டமையானது அவர் படைத்த சாதனையின் முக்கியத்துவத்தினை விளங்கப் போதுமானதாகும்.

தொகுப்பு – **அனித்தா**



மிகைல் ரிமோவிச் கலாஸ்நிகோவ்


## AK-47 இலகு தன்னியக்கத் துப்பாக்கி

AK-47 இலகு தன்னியக்கத் துப்பாக்கியின் சுடுகுழலானது 16 அங்குலம் நீளமானதாகும். தன்னியக்கமாகவும்,(தனி இயக்கமாகவும்) கைப்பாவனையூடாகவும் சூடுகளை வழங்கக் கூடியதாகவும் இருக்கும். எடை 4300g ஆகும். இதன் ஆகக் கூடிய சுடுதூரம் 1500 மீற்றர். இதன் தாக்குதல் தூரம் (killing range) 400-500மீற்றர் ஆகும். பெரும்பாலும் இது துருப்பு எதிர்ப்பு ஆயுதமாகப் பாவிக்கப்படுகின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுமி மொலி நாஸ் தனது சகோதரன் அடமைத் தாங்கியவாறு, பெற்றோருடன்.

# சகோதரிக்காக பிரசவிக்கப்பட்ட சகோதரன்

***மரபணுவியலின் வெற்றியின் காரணமாக மீள உயிர்வாழ்வையும், சகோதரனையும் பெற்ற சிறுமி.***

கூடுவிட்டுக் கூடு பாய்ந்த திருமூலரின் சைவமெய்யியல் சாதனையானது இன்று அறிவியல் சாதனையாக்கப் பட்டுள்ளதா? எனக்கருதத்தக்கதான சாதனையொன்று கடந்த 18.10.2000 அன்று அமெரிக்க மினிசொட்டா பல்கலைக்கழக மரபியல் வல்லுனர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது.

ஆறுவயது நிரம்பிய அமெரிக்கச் சிறுமியான மொலி நாஸ்(Molly Nash) அவரது 5 வாரமே நிரம்பிய சகோதரன் அடமினால் (Adam) காப்பாற்றப்பட்டுள்ளார். மொலி நாஸ் உலகிலேயே மிக அரிதாகவே காணப் படுகின்ற மரபணு நோயான பங்கொனி அனிமியாவினால் (Fanconi Anemia) பாதிக்கப்பட்டிருந்தார். தொடர் மரபியல் பரிசோதனைகளுக்கு ஆட்பட்ட நிலையில் உருவாக்கப்பட்ட அவருடைய சகோதரனில் இருந்து கலமாற்று சத்திரசிகிச்சை மூலம் அவருடைய வியாதிக்கு தீர்வு காணப் பட்டுள்ளது.

மொலி நாசின் பெற்றோர்களான ஜக்கும் லிசா நாஸ்சும் பரிசோதனைக்குழாய் கருக்கட்டல் வழியாக அடமை உருவாக்கினார்கள். அடம், மொலி நாஸின் பங்கொனி அனிமியாவிற்கும் விடுதலையளிக்கக்கூடிய மரபணுக் கூறுகளோடு வருமாறு கண்காணிக்கப்பட்டு உருவாக்கப்பட்டான். சாவின் விளிம்பிலிருந்த மொலி நாஸ் (நிர்ப்பீடனம்) இல்லாது செய்யக்கூடியதான பங்கொனி அனிமியா அற்ற, எலும்பு மச்சைக் கலங்களை உருவாக்கக்கூடிய குழந்தையை உருவாக்குவதற்கு மரபணுப் பரிசோதனை உதவியுள்ளது. அது மாத்திரமின்றி பிறக்கின்ற குழந்தையானது ஏற்கனவே உயிர்வாழ்க்கைக்காகப் போராடுகின்ற சகோதரியின் நுண்கலப் பொருத்தத்திற் கேற்பவும் இக்குழந்தை பிரசவிக்கப்பட்டது.

"இங்கே குறிப்பிடத்தக்கது என்னவெனில் தொப்புள்கொடி இரத்தம் வாழ்வையே முடிக்கும் நோய்க்கு பிணி தீர்க்கும் சுயமாக எலும்பு மச்சையை உருவாக்கக் கூடிய நிலையை அடைய வைக்கப்பட்டாள்.

மினிசொட்டா பல்கலைக்கழக மருத்துவ வல்லுனர்கள் அடமின் தொப்புள் கொடி இரத்தத்திலிருந்த பரம்பரை அலகுகள் (Stem cells) சிறுமியின் இரத்த ஓட்ட சுற்றுக்குள் பதிய வைக்கப்பட்டன. அது கழிந்து ஒருவாரத்தில் சிறுமி மொலி நாஸின் இரத்தம் புதிய எலும்பு மச்சைக் கலங்களை உருவாக்கத் தொடங்கியுள்ளது.

முதல் தடவையாக பெற்றோர்கள் மரபணு பரிசோதனையை குழந்தைப் பேற்றிற்காகப் பயன்படுத்தியுள்ளனர். மரபணுவிலிருந்து வருகின்ற நோய் எதிர்ப்பு சக்தியை மருந்தாகப் பயன் படுத்தப்பட்டது மாத்திரமல்ல, கலமாற்று அறுவைச் சிகிச்சைக்கு ஏற்ற வகையில் பொறிமுறை திட்டமிடப்பட்டு அதற்கேற்ப குழந்தையும் கருத்தரிக்க வைக்கப்பட்டதும்தான் சிறப்பு மிக்கது." என்று சொன்னார் மினிசொட்டா பல் கலைக்கழகத்தைச் சேர்ந்தவரும் தொப்புள் கொடி இரத்த மாற்று நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியவருமான கலாநிதி ஜோன் வாக்னர்.



கலாநிதி ஜோன் வாக்னர்

சோதனைக்குழாய்க் கருக்கட்டலின் கீழ் கருக்கள் ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்டன. மூன்று நாட்கள் கழிந்து அனைத்துக் கருக்களும் மரபணுவியலின் ஊடாகப் பரிசீலிக்கப்பட்டன. அதில் ஒன்று பங்கொனி அனிமியா இல்லாதது எனக் கண்டறியப்பட்டு மொலி நாஸிற்கு பொருத்த மானதாகத் தெரிவு செய்யப் பட்டது. இதுவே பின்னர் சிறுமியின் தாயா ரான லிசா நாஸின் கருவறையில் பதிய வைக்கப்பட்டது. 29.08.2000 அன்று மினிசொட்டா பல்கலைக்கழக வைத்தியசாலையில் வைத்து அடம் பிறந்தார்.

அடம் இங்கு விசேட தெரிவாக பிறப்பிக்கப்பட்டான். அதாவது இன்னொருவரின் இலாபத்திற்கான வழங்கியாகப் பிறப்பிக்கப்பட்டான். அவரது சகோதரிக்காகப் பிரசவிக்கப்பட்டான் என்பதே சர்ச்சையை ஏற்படுத்தியது. "இது எங்களுக்காக நாங்கள் செய்து கொண்ட ஏற்பாடு. சிலர் இந்த ஏற்பாட்டை எதிர்க்கிறார்கள். அவர்களுக்கு வேண்டுமானால் இது பொருத்தப்பாடற்ற நிகழ்வாக இருக்கலாம். ஆனால் என்னுடைய மனச்சாட்சிக்கு இது சரியானதே" என்று சொல்கிறார் சிறுமியின் தாயாரான லிசா நாஸ்.

தொகுப்பு – **அனித்தா**

# வீட்டுவேலைகளை இலகுவாக்க அசிமோ




15 வருட ஆய்வுகளின் பின்னர் யப்பானிய கொண்டா (HONDA) நிறுவனம் மனிதர்களைப் போல இரு கால்களினால் நடக்கவும் பழகவும் வல்ல இயந்திர மனிதன் ஒருவனை வடிவமைத்துள்ளது. இதற்கு கொண்டா நிறுவனம் அசிமோ எனப் பெயர் சூட்டியுள்ளது. இவ் இயந்திர மனிதன் கீழேயும் மேலேயும் நடக்க வல்லது. தற்சமயம் கொண்டா நிறுவனத்திற்கு இதனை சந்தைப்படுத்தும் நோக்கம் இல்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் வீட்டு அன்றாடவேலைகளுக்கு உற்ற தோழனாக அசிமோ விளங்குவான் என்று நம்புகிறார்கள். அசிமோவின் உயரம் 1.2 மீற்றர் மட்டுமே. நிறை 44 கிலோவாகும்.


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டுரை

தமிழ் மாணவர்களின் கல்வியை சீரழிப்பதில் சிறீலங்காவில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களப் பெரும் பான்மை அரசுகள் தம்மாலான பங்களிப்பை செய்து வந்துள்ளன, செய்து வருகின்றன. இந்தவகையில் தற்போது ஆட்சியில் உள்ள சந்திரிகா அரசும் தமிழர் கல்விச் சீரழிப்பில் தனது பங்கை மிகவும் அவ தானமாகவும் நீண்டகால நோக்கிலான தாகவும் செய்து வருகின்றது. மற்றைய சிங்கள ஆட்சியாளரைவிட இந்த அரசு தனது கைவண்ணத்தை பாடநூல்களி லேயே திட்டமிட்டுக் காட்டி வருகின்றது.

இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதி யாகவும் தமிழர் விடுதலைப் போராட் டத்தை சிதைக்கமுடியாது திண்டாடும் சிங் களப் பெரும்பான்மை அரசு தமிழ் மாண வர்களின் கல்விமுறை மூலம் தமிழர் களின் போராட்டத்தை மழுங்கடிக்க முயற்சி செய்து வருகின்றது. மாணவர்கள் மத்தியில் தமிழர், சிங்களவர் தொடர்பான பிழையான வரலாறுகளைத் திணிப்பதும், அதன் மூலம் சிங்கள இனமே இலங் கையின் தேசிய இனம் எனவும் தமிழர்கள் உட்பட அனைத்து இனங்களும் வந்தேறு குடிகள் எனவும் பாடப்பரப்புக்கள் மூலம் காட்ட முற்படுகின்றது. இவ்வாறு தமிழ் மாணவர்களின் மனதில் தமிழர் தொடர் பான பிழையான வரலாற்றுத் தகவல் களைத் திணிப்பதன் மூலம் மாணவர் மத்தியில் விடுதலைப் போராட்டமானது வேண்டப்படாத ஒன்று என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடலாம் என எண்ணுகின்றது.

இந்த வகையில் சிங்கள அரசானது தமிழ் மாணவர்கள் மத்தியில் பாடநூல் கள் தொடர்பாக இரண்டு முறையினை கைக்கொண்டு தனது இலக்கை அடைய முயற்சிக்கின்றது. முதலாவதாக பாடநூல் களில் முக்கியமாக வரலாறும், சமூகக் கல்வியும் என்ற பாடம் மூலமும், தமிழ் மொழிப்பாடம் மூலமும் அதிதீவிரமாக வரலாறு, தமிழ்மொழி சம்பந்தமான திரி பானதும் பிழையானதுமான கல்வியை மாணவரிடையே போதிக்க முயல்கின்றது. அடுத்ததாக இவ்வாறு பிழையான விடயங் களை அச்சிட்ட பாடநூல்களையே உரிய காலத்தில் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்காமல் காலந்தாழ்த்தி அனுப்பிவைப் பதன் மூலம் மாணவர்களை தமது கல் வியாண்டில் முழுப்பாடவிதானத்தையும் சரிவர கற்க முடியாத நிலைக்கு தள்ளு வதன் மூலம் அவர்களது எதிர்காலத்தை சீரழிக்க முயல்கிறது.

பாடநூல்களில் வரும் விடயங்களை எடுத்து நோக்குவோமாயின் 'சுற்றாடற் கல்வி தரம் 6' எனும் நூலில் சிங்களவர், தமிழர், முஸ்லிம், மலாயர் ஆகிய இனக் குழுக்கள் இலங்கையில் வாழும் மக்கள் என்று காட்டும் அதேவேளை இதில் சிங் களவர்களே முதல் வந்தவர்கள் என்றும் ஏனையவர்கள் இதற்கு பிற்பட்டேவந்த வர்கள் என்றும், இலங்கையின் முதலா வது மன்னன் விஜயன் என்றும் கூறுகின் றது. இதன்படி இலங்கையின் பூர்வீக குடிகள் பற்றிய செய்திகள் மழுங்கடிக்கப் பட்டுள்ளன. இதே நூலில் இந்தியாவின் காஞ்சியில் விஜயனது இலங்கை வருகை பற்றிய சிற்பம் இன்று இருப்பதாகவும் அதில் சிங்கம் போன்ற உருவத்தினையு டைய கொடி ஒன்று காணப்படுவதாகவும் அது புராதன சிங்களவரின் குலச் சின் னமாக இருந்திருக்கலாம் எனவும் இதுவே இன்றைய சிறீலங்காவின் தேசியக் கொடி யின் சின்னமாக கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் கூறுகின்றது. இந்த விடயத்தின் மூலம் சிங்கள அரசு பாடப்பரப்பின் மூலம் 'புதிய கதைகள்' கூறி 'புதிய ஊகங்களை' வகுத்து மாணவரிடையே போதிக்க முயல் கின்றது.

இதேபோன்று 'சமூகக்கல்வியும் வர லாறும் ஆண்டு 9' என்ற பாடநூலின் மூலம் யாழ்ப்பாண அரசு பற்றிய பாடத் தில் யாழ்ப்பாண அரசு பற்றிய போதிய தகவல்கள் இருந்தும் அவை அதில் சேர்க் கப்படாது தமிழரது வரலாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதே நூலில் தென் னிந்தியாவில் இருந்து இடம்பெற்ற தமிழர் படையெடுப்புக்கள் பற்றி கூறும்போது சந் தர்ப்பவாதிகள், கூலிப்படைகள், ஆக்கிரமிப் பாளர்கள், சூறையாடினர், துன்புறுத்தினர் என்ற சொற்பிரயோகங்கள் இடம்பெற்றுள் ளன. இதன் மூலம் சிங்கள மாணவர்கள் மத்தியில் தமிழர்களை கொச்சைப்படுத்தி தமிழர் தொடர்பான வரலாற்று ரீதியான விடயங்களை கீழ்த்தரமாகக் கூற முற்படு கின்றது. இதேவேளை ஐரோப்பியரது இலங்கை வருகை தொடர்பான பாடத்தில் இவ்வாறான கீழ்த்தரமான சொற்கள் கையாளப்படவில்லை. எனவே இந்த சொற்பிரயோகமானது திட்டமிட்ட ரீதியி லேயே புகுத்தப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது.

'வரலாறு ஆண்டு 8' என்ற நூலில் முதலாம் பராக்கிரமபாகு அமைத்த தமிழ் மகாசாய பற்றிக் குறிப்பிடுகையில், "தமிழ்க் கைதிகளைக் கொண்டு கட்டுவிக்கப்பட்ட தெமழ மகாசாய என்பதே இம்மன்னனால் கட்டப்பட்ட மிகப்பெரிய தூபி" என குறிப் பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று 'சமூகக்கல்வியும் வர லாறும் தரம் 7' என்ற நூலில் ஒவ்வொரு பக்கத்திலும் சராசரி ஆகக் குறைந்தது 15 பிழைகள் காணப்படுகின்றன. வரிவடிவம் பிழையாக அச்சடிக்கப்பட்டுள்ளது. சொற் பிழைகள் காணப்படுகின்றன. வசனப் பிழைகள் காணப்படுகின்றன. இலக்கண வழு காணப்படுகின்றன. தவறான எண் ணக் கருக்கள் உருவாக்கப்படுகிறன. கருத்து மயக்கம், கருத்து முரண்பாடு, கருத்து மறைப்புக்கள், கருத்து திரிபுகள் காணப்படுகின்றன. தமிழ் மக்களின் மனங் களை புண்படுத்தும் திணிப்புக்கள் காணப் படுகின்றன. 72 பக்கங்கள் கொண்ட இந்த நூலில் 27 பக்கங்கள் சிங்கள பௌத்த வரலாற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எரு மையின் படம், எருதின் படம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய கல்விச் சீர்திருத் தத்துக்கு அமைவாக தேசிய கல்வி நிறு வனத்தால் தயாரிக்கப்பட்டு கல்வி வெளி யீட்டு திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தரம் 7, தரம் 10 வகுப்புக்களுக்கான தமிழ் மொழிப் பாட நூலில் முன்பக்க பின்பக்க அட்டைகளில் மட்டுமே 33 சதவீத எழுத் துப் பிழைகள் காணப்படுகின்றன. நூலின் உள்ளடக்கங்களில் உள்ள பிழைகள்

# பாடநூ
# தமிழர் வ
# நஞ்சூட்

பற்றிப் பேசவே தேவையில்லை.

'தமிழ்மொழி தரம் 3' பாடநூலில் உலக நீதியே பிழையாக அச்சிடப்பட்டுள் ளது. அதாவது மாணவர்களை நல்வழிப் படுத்துவதற்காக என பாட நூலில் சேர்க் கப்பட்டுள்ள உலக நீதிகூட சிறீலங்கா அரசின் இனப்பாகுபாட்டுக்கு ஆட்பட்டு நிற்கின்றது. இதன் மூலம் புதிய உலக நீதியாக தரம் மூன்று மாணவர்களுக்கு 'நெஞ்சாரப் பொய்தனைச் சொல்ல வேண் டும்' என்றும் 'மனம்போன போக்கெல் லாம் போகவேண்டும்' என்றும் கூறுகின் றது. அதேபோன்று 'தருமத்தை ஒரு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

நாளும் மறக்கவேண்டாம்' என்பதற்கு விளக்கமாக 'தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டும்' என்று கூறுகின்றது. இவ்வாறு உலக நீதியையே தமிழ் மாணவர்களுக்கு பிழையாக போதிக்க வேண்டும் என்பதில் சிங்கள அரசு தீவிர அக்கறையாக உள்ளது.

இவ்வாறாக திட்டமிட்டு செய்யப்பட்டு வரும் பிழையான தகவல்களுக்கு அச்சுப் பிழையை காரணம் கூறமுடியாது. ஏனெனில் அச்சகங்களில் ஏற்படுகின்ற பிழை என்பது வரலாற்றையோ, உலக நீதியையோ பிழையாக அச்சாக்கும் அளவுக்கு முழுமையாக ஏற்படும் என்று கூற முடியாது. அச்சகங்களில் ஓரிரு பிழைகள் ஏற்படுவது சாதாரணமே. ஆனால் இவை பாடப் புத்தகங்களில் ஏற்படுவது என்பது திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே என துணிந்து கூறிவிடலாம்.

ஏனெனில், இவ்வாறு தமிழ்ப் பாட நூல்களில் பிழைகள் என்பது புதிய விடயமல்ல. அது ஒவ்வொரு புதிய பதிப்பின்போதும் ஏற்படுகின்ற சாதாரண விடயமாகவே இருந்து வந்துள்ளது. அதிலும் சந்திரிகா அரசானது இந்த விடயத்தில் தீவிர அக்கறையுடனேயே செயற்பட்டு வருகின்றது. இதற்கு ஆதரவாக சில பாடங்களுக்கான பாடநூல் குழுவில் ஒரு தமிழர்கூட இடம்பெறுவதில்லை. இதனால் பிழைகளுக்கும் குறைவே இல்லை.

இதேவேளை, இவ்வாறாக கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட பாடநூல்களில் வரலாறு சம்பந்தமான நூல் மாணவர்களுக்கு போதிக்கப்பட முடியாதது எனவும் அதேபோன்று எழுத்துப் பிழைகளுடனும் வெளியான நூல்கள் தொடர்பாக கல்வி அமைச்சுக்கு தமிழ் மாணவர்களின்




# ால்கள்:
# ரலாற்றுக்கு
# டும் சிங்கள இனவாதம்

- ஜெயக்குமார் -

கல்வியில் அக்கறை உடையோரால் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் இவ்வாறான தவறுகள் ஏற்படாது பார்த்துக் கொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டது. இதற்கு இவ்வாறான தவறுகள் இனிமேல் விடப்படமாட்டாது என இவர்களுக்கு கல்வி அமைச்சரினால் உறுதி அளிக்கப்பட்டது.

ஆனால் இவ்வருடமும் அதே பல்லவியே தொடர்கின்றது. இவ்வருடம் வெளியிடப்பட்டுள்ள நூல்களிலே இன்னும் மிகையாக பிழைகளும், வரலாற்று திரிபுகளும் இடம்பெற்றுள்ளன. தமிழ் மாணவர் கல்வியில் அக்கறையுடையோரும் இவ்வருடமும் தமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் கல்வி அமைச்சுக்கும் சிறீலங்கா ஜனாதிபதிக்கும் அறிவித்திருந்தது டன் தரம் 7ற்கான வரலாறும் சமூகக் கல்வியும் என்ற நூல் தடை செய்யப்பட வேண்டும் எனவும் கோரி இருக்கின்றனர்.

ஆனால், இவர்களது கோரிக்கை எந்தளவுக்கு அரசின் செவிகளில் ஏறும் என்பது கேள்விக்குறியே. இதன் மூலம் இந்த நூல் தடை செய்யப்படுமா என்பதும் கேள்விக்குறியே. ஏனெனில் அரசு தானே திட்டமிட்டு தவறானது எனத்தெரிந்தும் தமிழ் மாணவர் மத்தியில் புகுத்த விரும்பும் விடயத்தை கைவிடும் என எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறு பாடநூல்களில் தமிழ் மொழியையும் தமிழர் வரலாற்றையும் திரிபுபடுத்த முயலும் அரசாங்கமானது இத்தகைய பாடநூல்களை பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதிலும் அச்சுப் பதிவு செய்வதிலும் தனது நயவஞ்சகத் தனத்தையே காட்டி நிற்கின்றது. இவ்வாண்டு விநியோகிக்கப்பட வேண்டிய பல பாடநூல்கள் இன்றும் அச்சு வாகனம் ஏறவில்லை. அச்சாக்கம் பெற்ற பாட நூல்கள் வடகிழக்கிலுள்ள தமிழ்ப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடசாலைகளுக்கு இவ்வாரமே அனுப்பி வைக்கப்பட்டன. இவ்வாண்டுக்கான பாடசாலைக் காலம் ஆரம்பித்து இரண்டு மாதங்கள் பூர்த்தியாகும் நிலையிலேயே பாடநூல்கள் மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கென அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அச்சு வாகனத்தில் உள்ள பாடநூல்கள் எப்போது பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று கூறவே தேவையில்லை. இந்த பாடநூல்கள் இவ்வாண்டு விநியோகத்துக்கு அனுப்பப்படும் என்பது கேள்விக்குறியே.

தமிழர் பிரதேசமான அரசின் கட்டுப்பாட்டில் தற்போது உள்ள யாழ். குடாநாட்டுக்கும் இந்த ஆண்டின் பாடசாலைக் காலம் ஆரம்பித்து ஒரு மாதத்தின் பின்பே பாடநூல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அரசு பாடநூல்களை உரிய காலத்தில் அச்சாக்குவதிலும் அதன் விநியோகத்தில் காட்டும் அக்கறையின்மையானதும் தமிழ் மாணவர்கள் தமது கல்வியைத் தொடரக்கூடாது என்ற நோக்கத்துடனேயே மேற்கொண்டுள்ளது.

சிறீலங்கா அரசின் இந்த திட்டமிட்ட நடவடிக்கை மூலம் எதிர்காலத்தில் தமிழ் மொழியினை சீரழிப்பது என்பதே முக்கிய குறிக்கோளாக இருக்கின்றது. இந்த மொழிச் சீரழிப்பின் மூலம் வளர்ந்து வரும் தமிழ்ச் சமூகம் தமது அடிப்படைக் கல்வியிலேயே சீரழியும் நிலையினை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் தமிழரது மொழி பற்றியும் அவர்களது பாரம்பரியம் பற்றியும் பிழையான கருத்தினை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திவிடுவதன் மூலம் தமிழரின் போராட்டத்திற்கு எதிராக மாணவர் சமூகத்தை கொண்டு வந்து விடலாம் என இந்த அரசு கனவுகண்டு கொண்டிருக்கின்றது. ஆனால் இதேநிலை தொடருமானால் அரசின் கனவு நனவாகக்கூடிய நிலையே ஏற்படும். இந்த நிலையில் இவ்வாறான நூல்களை தடைசெய்வதற்கும் பிழையான பாடப்பரப்புகளை மாற்றுவதற்கும் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் ஓரளவு எமது மாணவர் சமூகத்தை பாதுகாக்க முடியும். இவ்வாறான நடவடிக்கைகள் எடுத்தும் இதேநிலை தொடருமானால் தமிழ்க் கல்விச் சமூகமே இந்த நூல்களை கைவிட்டு சரியான அறிவு போதனையை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

ஆயினும் அரசினால் வெளியிடப்பட்ட பாடப் பரப்பிற்கேற்பவே பொதுக் கல்வித் தேர்வுக்கான வினாக்கள் தயாரிக்கப்படும். இந்த நிலையில் மாணவரின் நிலை என்பது மிக மோசமான கட்டத்தை எட்டி நிற்கும். ஏனெனில் சரியான முறையில் கல்வியை கற்றாலும் அரசினால் நடத்தப்படும் பரீட்சைகளுக்கு மாறுபட்ட பதிலை அழிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவர். இதன் மூலம் சரியான பதிலை அழிக்கும் மாணவர் தனது பரீட்சையிலும் முழுமையான சித்தியை அடைய முடியாத நிலைக்கு தள்ளப்படுவார். இதன்படி சரியான வரலாற்றைக் கற்ற மாணவர் தமது உயர் கல்விக்கு தடைதாண்டி செல்வது என்பது எட்டாக்கனியாகிவிடும்.

இத்தகைய தமிழ் மாணவர்களது கல்வியைச் சீரழிப்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள நீண்டகால நோக்கம் கொண்ட நடவடிக்கைகளை முறியடிக்க தமிழ் மாணவர் சமூகமும், கல்விச் சமூகமும் முன்வருதல் அவசியமானதாகும். அவ்வாறு இல்லாதுவிடின் சிங்களப் பேரினவாதம் இலங்கையில் தமிழர்களின் வரலாற்றையே கேள்விக்குரியதாக்கிவிடும்.



இடிந்து போனவை கட்டிடங்கள் மட்டுமே, இடம்பெயர் வாழ்வினிலும் கல்விப் பயணம் தொடரும். மங்கல் ஒளியினுள்ளும் கல்வித் தேடல் நடந்தே தீரும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# திறந்தவெளிச் சிறைக்கூடத்தில் யாழ்ப்பாண மக்கள்

www.tamilarangam.net

-யாழ். நீதிபதி மு. திருநாவுக்கரசு

**சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் 10.12.2000 அன்று யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடத்திய மனித உரிமைகள் தொடர்பான பயிலரங்குப் பயிற்சிப்பட்டறையில் நீதிபதி அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆற்றிய உரையிலிருந்து.**

இருள் சூழ்ந்த நிலையில் குடியுரிமை, சிவிலுரிமை தடுக்கப்பட்ட, மறுக்கப்பட்ட நிலையில் கைதிகளாகத் திறந்தவெளிச் சிறைக் கூடத்தில் யாழ்ப்பாண மக்கள் இன்று வாழ்ந்து கொண்டிருகின்றனர். முற்றிலும் இருட்டான ஒரு அறையில் இருக்கின்றோம். மீள்வதற்கு வழியேதுமில்லை. தூரத்தில் சிறு விளக்குப் போல மனித உரிமை அமைப்புகள் தெரிகின்றன. இது எந்தளவுக்குப் பயன்படுமோ தெரியாது.

இங்கு மனித உரிமைகள் என பலரும் பீற்றிக் கொண்டிருகின்றார்கள். கூட்டங்கள் கூடுவதில் நாட்டங்கொண்டு கூடிக்கொண்டாடுவதைவிடப் பயனேதுமில்லை. தற்போது யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற எத்தனையோ செயற்பாடுகளை பார்க்கும்போது மனித உரிமையென்றால் என்ன என்பது தெரியவில்லை. இதைப்பல சம்பவங்களுக்கு ஊடாக நான் விளக்குகின்றேன்.

கடந்த வாரம் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவமொன்றைப் பார்க்கும் போது சொந்த ஊரில் தமிழர்கள் குடியிருக்கும் உரிமையே மறுக்கப்பட்டுள்ளது. அதனைத் தட்டிக்கேட்க மேன்முறையீடு செய்வதற்கு உரிமையில்லை. இதுதானா மனித உரிமை, ஜனநாயகம்.

அல்லாரைப் பகுதியில் பொதுமக்களை இடம்பெயர்ந்து செல்லுமாறு படையினர் வற்புறுத்தி வந்துள்ளனர். பொதுமக்கள் சொந்த இடத்தைவிட்டு வெளியேறவில்லை. இந்த நிலையில் அங்கிருந்த படையினரால் 18 குடிசைகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டு மக்கள் சொந்த இடத்தைவிட்டு விரட்டியடிக்கப்பட்டனர். இதையடுத்து பாதிக்கப்பட்ட பொதுமக்கள் ஆங்கிலத் தட்டெழுத்தாளரின் உதவியுடன் சம்பவம் பற்றிக் கடிதமொன்றை தட்டெழுத்துச் செய்து ஐ.சி.ஆர்.சி, யூ.என்.எச்.சி.ஆர் போன்ற சர்வதேச அமைப்புகளுக்கும் உள்ளூர் அதிகாரிகளுக்கும் மேன்முறையீடு செய்தனர். இதை அறிந்த படையினர் 18 குடிசைக்காரர்களையும் தேடித் திரிகின்றனர். அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதால் அல்லாரைக் கிராமசேவையாளரைக் கைதுசெய்து பொதுமக்கள் தொடர்பான விபரங்களைத் தருமாறு கேட்டுள்ளனர். கிராமசேவையாளரும் அவர்கள் தொடர்பான விபரங்களை வெளியிடவில்லை. பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

குடாநாட்டில் இடம்பெற்றுவரும் மோதல் சம்பவங்களில் இறந்த புலிகளின் சடலங்கள் எனக்கூறி பத்துப்பத்தாகப் பல தடவைகள் படையினர் சடலங்களை வைத்தியசாலைக்குக் கொண்டு வருகின்றனர். பின்னர் தாங்கள் நினைத்த நேரத்தில் திருப்பிக் கொண்டு போகின்றார்கள். கேட்கக் கேள்வியின்றி வெட்டிப் புதைக்கின்றார்கள்.

படையினரால் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படுகின்ற சடலங்களில் பெண்களுடையதும் இருக்கின்றன. இது மானபங்கப்படுத்தப்பட்டுள்ளதா அல்லது பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதா என்பதுடன் மரணத்திற்கான காரணமென்ன துப்பாக்கிச்சூடு பட்டுத்தான் இறந்தார்களா என்பது யாருக்குத்தான் தெரியும். இவர்களை அடித்துக்கொன்றிருந்தால் யார் காண்பது?



என்றெல்லாம் கேள்வி எழுப்பப்பட்டது. மரணம் அடைந்த ஒருவரை நீதிவான் ஒருவருக்கும் காட்டாமல் ஏன் வைத்தியசாலை ஊழியருக்கும் காட்டாமல் வைத்தியசாலையில் போட்டுவிட்டு நினைத்தநேரம் அள்ளி ஏற்றிக் கொண்டு சென்று பின்னர் கைகால் தெரிய புதைத்துவிட்டுப் போய்விடுவார்கள். இச்சடலங்களை நாயும் பேயும் இழுத்தும் திரியும். இவ்வாறான நிலை சிங்களவருக்கு நேருமா? தமிழர்கள் என்பதால்தானே இந்த நிலை.

தமிழன் ஒருவன் கைதுசெய்யப்பட்டால் எதுவித விசாரணையும் செய்யாமல் தடுத்து வைக்க முடியும். ஒருவர் கைதுசெய்யப்பட்டால் எதற்காகக் கைதுசெய்யப்பட்டார் என்பது கைதானவருக்கோ கைதானவரை மறியலில் வைக்கும் நீதிவானுக்கோ தெரியாது, படை அதிகாரிக்கு மட்டுமே தெரியும். கைதானவரை நீதிமன்றில் நிறுத்தும்போது ஏன்? எதற்காக? என்று சொல்வதில்லை. அவரை மூன்று மாதமோ ஆறு மாதமோ தடுத்து வைக்க உத்தரவிடுமாறு கேட்பார்கள். சிங்களத்தில் சொல்வது எவருக்குமே விளங்காது. எங்கே கையெழுத்துப்போட எனக்கேட்டுவிட்டு தடுத்துவைத்தல் பத்திரத்தில் கையெழுத்துப்போட வேண்டியதுதான்.

யாழ். மக்களை யார் வேண்டுமானாலும் கைதுசெய்யலாம். யார் வேண்டுமானாலும் கொல்லலாம். வாகனத்தைக் கொண்டு மோதலாம். இது அண்மையில் நடைபெற்றது. கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறைச் சந்தியில் வைத்துப் பல்கலைக்கழக மாணவி ஒருத்தி படையினர் வாகனத்தால் அடிக்கப்பட்டார். படுகாயமடைந்த மாணவி வாழ்க்கையுடன் போராடிக்கொண்டிருக்கக் காலையில் நடந்த சம்பவத்திற்கு மாலையில் நீதிமன்றம் பூட்டிய பின்னர் என்னிடம் வருகின்றார்கள். வந்தவரிடம் உம்மிடம் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளதா எனக் கேட்டேன்? அதற்கு நான் இராணுவச் சாரதி என்றார். வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இராணுவம் என்றால் என்னவும் செய்யலாம் செய்துவிட்டுத் தப்பியும்விடலாம்.

யாழ்ப்பாணத்தில் மருத்துவ வசதியை எடுத்துக் கொள்ளுங்கள். நாலாயிரம் பேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் சத்திரசிகிச்சை நிபுணர் இருக்க வேண்டும். ஆனால் இங்கு சுமார் நாலு இலட்சம் மக்களுக்கு நாற்பது பேர் இருக்க வேண்டிய இடத்தில் ஒருவர் மட்டுமே கடமையாற்றுகின்றார். வன்னியில் சுமார் மூன்றரை இலட்சம் பேருக்கு ஒருவர் கூட இல்லை. அவசர சத்திரசிகிச்சைக்காக ஒரு சிறுமியைக் கொழும்புக்கு அனுப்ப வேண்டுமாயின் யாழ்ப்பாணத்தில் அவரைப் பிடித்து இவரைப்பிடித்தெனக் காசு கட்டி ஒருவாறு பிள்ளையைக் கொண்டுபோவதற்குள் பிள்ளை இறந்துவிடும். வன்னியில் பிள்ளையைக் கொண்டு போகாமலே இறந்துவிடும். வெளிநாட்டவர்களின் மனித உரிமை தொடர்பான கையேடொன்று இங்கு வழங்கப்பட்டுள்ளது. அது இங்கு ஐந்து சதத்திற்கும் பிரயோசனமில்லை. இங்கு மக்களுக்கு ஒரு வேளைச்சாப்பாடு கிடைப்பதே கஸ்டமாகவுள்ளது ஆனால் அவர்கள் பாலும் பழமும் பற்றிக் கையேட்டில் குறிப்பிடுகின்றார்கள்.

யாழ். மாவட்டத்திலுள்ள 51 கிராம சேவையாளர் பிரிவுகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு சுமார் 65 ஆயிரம் பேர் தமது சொந்த இடங்களில் குடியிருக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக 2 இலட்சத்தி 40 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இது யாழ். மாவட்டத்திலுள்ள மொத்தச் சனத்தொகையில் அரைவாசியாகும். இது தவிர மே மாதத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்தி 40 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். எனவே யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் பற்றிய செயற்பாடுகள் போதாது. தற்போது யாழ்ப்பாணத்தில் செயற்படும் மனித உரிமை அமைப்புகள் தற்போது நடைபெறும் சம்பவங்களையும் துணிவுடன் வெளிப்படுத்த வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்கள் அங்கீகாரம்

மாவீரர் நாள் மிக எழுச்சி பூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும் வடக்கு- கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும், வெளிநாடுகளில் ஈழத்தமிழர்கள் வாழும் நாடுகளிலும் அனுட்டிக்கப்பட்டுள்ளது. இது தமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தம்முயிரை ஈகம் செய்த மாவீரர்களுக்கு மக்கள் செய்யும் கௌரவம் மட்டுமல்ல தமிழர் தேசியம், விடுதலைக்கான போர், அதற்காகப் போராடும் அமைப்பு என்பவற்றிற்கு வழங்கும் அங்கீகாரமும்கூட.

மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழ் மக்களின் பூரண ஒத்துழைப்புடன் ஆதரவுடன் சிறப்பாக அனுட்டிக்கப்பட்டிருந்தமைக்கு வன்னிப்பிரதேசம் இந்நிகழ்விற்காகக் கொண்டிருந்த எழுச்சியே தக்கதொரு குறிகாட்டியாகும். இந்நிகழ்வில் மக்கள் காட்டிய ஈடுபாடும் பூரண ஒத்துழைப்பும் இவ் எழுச்சிக்குக் காரணமாகும்.

மாவீரர் நாள் எழுச்சியானது மக்களுக்காக தம்முயிரை ஈகம் செய்த போராளிகளின் நினைவாக அனுட்டிக்கப்படுவதாக இருப்பினும்- இதில் மக்கள் காட்டும் உணர்வெழுச்சி, ஒருமைப்பாடு என்பன தமிழர் தேசியம், விடுதலை, விடுதலைப் போராட்டத்தை நடத்தும் அமைப்பு என்பனவற்றின் மீது மக்கள் கொண்டுள்ள பற்றுதல், நம்பிக்கை என்பனவற்றின் வெளிப்பாடு என்றுகூடக் கூறலாம்.

மாவீரர் நாளில் போராட்டத்தில் தம்முயிரை ஈகம் செய்த மாவீரர்களுக்கு அவர்களின் பெற்றோர், உற்றார், உறவினர் மற்றும் போராளிகள் மட்டும் அஞ்சலி செலுத்துவதில்லை, தமிழ் மக்கள் அனைவருமே அணிசேர்ந்து அஞ்சலி செய்கின்றனர். எந்தவொரு மாவீரரையும் வேறொருவரின் பிள்ளையாக தமிழ் மக்கள் கருதுவதில்லை. அவர்களைத் தமது பிள்ளைகளாகவும், தமது உறவினர்களாகவுமே கொள்கின்றனர்.

இந்தவகையில் தமிழ்மக்கள் உணர்வெழுச்சி பெறுவதற்கு அவர்களின் தேசிய உணர்வே காரணமாகும். வடக்கு- கிழக்கில் நிகழும் ஆயுதப்போராட்டம் மக்களின் ஒத்துழைப்பின்றியோ அன்றி பயங்கரவாத நடவடிக்கைகளாகவோ இருப்பின் இதுவரையில் அது அழிந்து போயிருக்கும் அல்லது அழிக்கப்பட்டிருக்கும். இவ்வாறான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் சாத்தியமானதாக இருந்திருக்க முடியாது.

அதாவது சிறிலங்கா அரசாங்கம் பிரச்சாரப்படுத்துமாப் போல்- பயங்கரவாதம் என்றாலோ அன்றி மக்கள் ஆதரிக்கவில்லை என்றாலோ மாவீரர் நாள் நினைவு நிகழ்ச்சிகளில் உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டிலும் உள்ள தமிழ் மக்கள் இவ்வாறு எழுச்சியுடன் கலந்து கொண்டிருக்க மாட்டார்கள்.


மேலும், தமிழ்மக்கள் இம்மாவீரர்களுக்கு அஞ்சலி செய்யத் திரண்டமையும், அவர்களின் பெற்றோருக்கு வழங்கியுள்ள கௌரவமும் இவர் கைக்கொண்ட போராட்ட வழிமுறைக்கு வழங்கிய அங்கீகாரமே ஆகும், அதாவது தமிழரின் பிரச்சனைக்கு ஆயுதப்போராட்டம் மூலமே தீர்வு காண முடியும் என அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடு ஆகும்.

அதாவது விடுதலைப் புலிகள் இயக்கமே ஆயுதப் போராட்டத்தை நடத்துவதில் தீவிரமாகவுள்ளது. தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை நடத்துவதில் விருப்பம் கொண்டிருக்கவில்லை என அரசாங்கம் கூறுவது ஏற்புடைய வாதம் அல்ல. தமிழ் மக்கள் அமைதியையும், சமாதானத்தையும் விரும்புகின்றனர் என்பது உண்மைதான். ஆனால் அது அவர்களின் உரிமைகளைப் பறிப்பதாக இருக்கக்கூடாது என்பதிலும் அக்கறை கொண்டவர்களாக உள்ளனர். இதனால் ஆயுதப்போராட்டத்தை தமது உரிமைகளை உறுதி செய்யும் வழிமுறைகளாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அடுத்ததாக மக்கள் விடுதலைப் புலிகளின் பக்கமே உள்ளனர் என்பதை நிரூபிப்பதற்கும் இம்மாவீரர்நாள் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. புலிகளின் பாசறையிலிருந்து புறப்பட்டவர்களே இம்மாவீரர்கள் ஆகையினால்- இம் மாவீரர்கள் மக்கள் மனதில் பிடித்துள்ள இடம் விடுதலைப் புலிகளுக்கான அங்கீகாரமே ஆகும்.

அதாவது தமிழ் மக்கள் மத்தியில் விடுதலையின் பெயரில் பல குழுக்கள், அமைப்புக்கள், கட்சிகள் எனப்பல தோற்றம் பெற்றிருந்தன. ஆனால் கால ஓட்டத்தில் ஏற்பட்ட சவால்களை எதிர்த்து நின்று அவற்றால் விடுதலைப் போராட்டத்தை நடத்த முடியவில்லை. வேறுவிதமாகக் கூறினால் அவர்களால் நிலைத்து நின்று நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியவில்லை. இதனால் விடுதலைப் போராட்டத்தையும் தலைமை தாங்கி நடத்த முடியவில்லை காட்டிக் கொடுக்கவும் தப்பிஓடவுமே முடிந்தது.

இந்த வகையில் மாவீரர் நாளில் மக்கள் வெளிப்படுத்தும் எழுச்சி என்பது மாவீரர்களுக்குச் செய்யும் கௌரவம் என்பது மட்டுமல்ல, மாவீரர்கள் நடத்திய போராட்டங்களுக்கான அங்கீகாரமும், விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமைதாங்கும் விடுதலைப் புலிகளின் போராட்ட வழிமுறைக்கான அங்கீகாரமுமாகும். இதனைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள், இனப்பிரச்சனையின் தார்ப்பரியத்தையும் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவே இருக்க முடியும்.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசிரியர் தலையங்கம்

# வழிகள் திறந்துள்ளன

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனைகள் விதித்து வருகின்றதென்பது சிறீலங்கா அரசின் நீண்டகாலக் குற்றச்சாட்டாகும். ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்போ கடந்த பல வருடங்களாக பேச்சுவார்த்தை தொடர்பாக தமது தெளிவான நிலைப்பாட்டை வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலைப்பாட்டினை கடந்த 27.11.2000 மாவீரர் நாள் உரையிலும் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். "சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நாம் நிபந்தனைகளை விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ணப் புறநிலையும், இயல்பு நிலையும் உருவாக்கப்பட வேண்டும் என்ற அவசியத்தையே கோருகின்றோம்" என தனது உரையில் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அத்தோடு "இயல்பு நிலை என்னும் பொழுது தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரச் சுமைகள், தடைகள் நீங்கி எமது மக்களின் வாழ்க்கை நிலை இயல்பான இருப்பிற்குத் திரும்ப வேண்டும் என்பதையே நாம் கருதுகின்றோம்" என இயல்பு நிலை என்பதற்கான தமது அர்த்தத்தினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து அபிப்பிராயங்களை வெளியிடும் போதெல்லாம், இவ்வாறானதொரு இயல்பு நிலை பற்றி வலியுறுத்தி வருகின்றமை அனைவரும் அறிந்ததே. அதேசமயம், விடுதலைப் புலிகளின் இந்நிலைப்பாட்டினை சிறீலங்கா அரசதரப்போ இராணுவ ரீதியில் பலவீனப்பட்டுப் போய்விட்ட விடுதலைப் புலிகள் தம்மைச் சுதாகரித்துக் கொள்வதற்கும், தம்மை மீண்டும் அணிதிரட்டிக் கொள்வதற்குமாகவே இதனைக் கோருகின்றார்கள் என்றும் இது பேச்சுவார்த்தைகளுக்கான முன்நிபந்தனை எனவும் கூறி நிராகரித்து வந்துள்ளது.

இந்நிராகரிப்புக்களுக்கு அடிப்படையாக விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தைக் கோருவதாகவும், இராணுவம் முகாம்களுக்குள் முடங்க வேண்டும் என வலியுறுத்துவதாகவும் தமது நிலைப்பாட்டிற்கு வலுச் சேர்க்க முயன்றனர்.


ஆனால் இம்முறை மாவீரர்தின உரையானது சிறீலங்கா இராணுவத்தரப்போ அன்றி அரசதரப்போ புலிகளின் இயல்பு நிலைக்கான கோரிக்கையின் அடிப்படை நோக்கம் எனக்கூறிய குற்றச்சாட்டை தவிர்த்துக் கொண்டுள்ளது. அதாவது இராணுவ ரீதியிலான காரணிக்குத் தலைவர் பிரபாகரன் முதன்மை கொடுக்கவில்லை.

இவ்வாறு தலைவர் பிரபாகரன் தவிர்த்துக் கொண்டமைக்கு சிறீலங்கா அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு தடையாகவுள்ளதெனக் கூறும் அம்சத்தில் தளர்வை மேற்கொள்ளும் நோக்கத்தைக் கொண்டதாக இருக்கலாம். அதற்கும் மேலாக இன்றைய நிலையில் அது ஒரு வற்புறுத்த வேண்டிய அம்சமாக இல்லை எனவும் அவர் கருதி இருக்கலாம்.

ஏனெனில் ஓயாத அலைகள்-3 நடவடிக்கையானது சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடமுடியாது என்பதைத் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளதொன்றாகும். இந்நிலையில் அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தைக்கு இராணுவ ரீதியிலான காரணி ஒன்றைக் கூறி அரசு தட்டிக்கழிப்பதற்கான சந்தர்ப்பத்தை தலைவர் பிரபாகரன் நீக்கிவிட்டுள்ளார் எனக் கருத இடமுண்டு.

இதைத்தவிர இயல்பு நிலை என்ற ரீதியில் பொருளாதாரத் தடைகள் நீக்கம் என்ற அம்சமே முதன்மைப் படுத்துவதாக உள்ளது. இது பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு நிபந்தனை என்பது அபத்தமானதொன்று எனக் கருதக்கூடியதே. ஏனெனில் இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் தமது ஆள்புலத்திற்குள் வருவதாகக் கூறும் சிறீலங்கா அரசு சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப அம்மக்களுக்கான அத்தியாவசியத் தேவைகளை வழங்குவதற்கு கடப்பாடுடையது. இதனையே வழங்காது, அதனை ஒரு நிபந்தனை என்ற ரீதியில் அரசு பரிசீலிக்க முற்படுமாயின் அது அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டை போடவிரும்புகிறது, சமாதானத் தீர்வில் நாட்டம் இல்லாது உள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாக இருக்கும்.

வேறுவிதமாகக் கூறுவதானால் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் அமைதிப் பேச்சுவார்த்தைக்கான வழிகளைத் தன்னால் இயன்றளவில் திறந்தே விட்டுள்ளார். இனி அதில் முன்னேறிச் செல்ல வேண்டியது அரசின் பொறுப்பு ஆகும். அரசு காரணம் எதையும் கூறி தட்டிக்கழிக்குமாயின் அரசியல் தீர்விற்கு அது தயாராக இல்லை என்பதை உலகம் புரிந்து கொள்ள வேண்டும்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர்நா

## பிரித்தானியா - பிரான்ஸ் - நோர்வே - நெதர்





25.11.00 அன்று நோர்வே- ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற மாவீரர்நாள் நிகழ்வில் 1500இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். நோர்வேயின் ஏனைய நகரங்களான Stavanger, Tronoheim, Floro, Vardo ஆகிய இடங்களிலும் மாவீரர்நாள் நிகழ்வுகளில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.






26.11.00 அன்று அமெரிக்க நியூயோர்க் மாநிலத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் அமெரிக்க, தமிழீழ தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு அமெரிக்க - கனேடிய உலகத் தமிழர் கலைபண்பாட்டுக் கழகங்களினாலும் முன்னாள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களின் பேத்தி செல்வி. அனிதா சிவராமன் அவர்களின் எழுச்சி நடனங்கள், எழுச்சிக் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பெருந்திரளான மக்கள் இதில் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு தங்கள் உணர்வுபூர்வமான வணகத்தை செலுத்தினர்.






02.12.2000 அன்று நெதர்லாந்தின் மத்திய பகுதியான உத்ரக்கில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் 1500ற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். சிறப்புரையை கவிஞர் அறிவுமதி ஆற்றியிருந்தார். தமிழகத்திலிருந்து வருகை தந்த கலைமாமணி ரி.கே. கலைவாணர் அவர்களின் எழுச்சி இசை நிகழ்ச்சி என்பனவற்றோடு மிகவும் எழுச்சிகரமாகவும் சிறப்பாகவும் நடந்தேறியது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ள் 2000

## ாந்து - இத்தாலி - ருஷ்யா - அமெரிக்கா






02.12.2000 அன்று லண்டன் மாநகரில் அரீனா மண்டபத்தில் நடந்த மாவீரர் நாள் நிகழ்வில் 8000ற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். மாவீரர்களுக்கான அகவணக்கத்துடன் ஆரம்பித்து பல கலை நிகழ்வுகளுடன், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் சிறப்புரையுடன் நிகழ்வுகள் சிறப்புற நடந்தேறியது.






03.12.2000 அன்று பாரிஸ் புறநகர்ப் பகுதியான Rungis நகரில் எழுச்சிகரமாகவும் உணர்வுபூர்வமாகவும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றன. 4000ற்கும் அதிகமான பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். தமிழின உணர்வாளரான தமிழகக் கவிஞர் அறிவுமதி அவர்களின் சிறப்புரை, கலைமாமணி கலைவாணர் அவர்களின் இசைநிகழ்ச்சி, மற்றும்பல கலைநிகழ்வுகளுடன் நடந்தேறியது.




03.12..2000 அன்று இத்தாலி - பொலோனியோ மாவீரர் நாள் நிகழ்வு நடந்தேறியது. இந்நிகழ்வில் இத்தாலி வாழ் தமிழீழ மக்களோடு நூற்றுக்கணக்கான இத்தாலியர்களும் கலந்து கொண்டனர்



27.11.2000 ருஷ்யாவில் உயர்கல்வி கற்று வரும் தமிழீழ மாணவர்களினால் மாவீரர் நாள் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக அநுட்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஈழத் தமிழரின் இனப்பிரச்சனையில் மிக முக்கியமானது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாகும். இனப்பிரச்சனைத் தீர்வுக்கென நடாத்தப் பட்ட சகல பேச்சுவார்த்தைகளிலும், ஒப்பந்தங்களிலும் இந்தக் குடியேற்ற விவகாரம் பேசப்பட்டுள்ளது. சிங்களக் குடியேற்றங்களால் தமிழர் நிலம் பறிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் விரட்டப்பட்டுள்ளார்கள். இன்று அந்தப் பிரதேசங்கள் சிங்களப் பிரதேசங்களாகக் காட்டப்படுகின்றன. இந்தப் பகைப் புலத்தைச் சித்தரிக்கின்றது. "அந்நியமான உண்மைகள்"**

# அந்நியமான உண்மைகள்

"இங்கேயிருந்து யாழ்ப்பாணத்துக்குப் போற முதல் பஸ் எத்தினை மணிக்கு காலமையிலை?" சைக்கிளைக் கையிற் பிடித்தபடி தகரக் கூரையின் கீழ்க்குனிந்து, உள்ளே எதையோ எழுதிக்கொண்டிருந்த ஆளிடங் கேட்டான் சிவம்.

அந்த ஆள் -ரைம் கீப்பரோ, யாரோ - இவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு, வேலையில் மீண்டும் மும்முரமாய் ஈடுபட்டது போலக் குனிந்து எழுதலானான். அந்தக் கொட்டகைக்குள், அது வெறும் கொட்டகை மட்டுமில்லை, திருகோணமலை பஸ்நிலையக் காரியாலயம், ரைம் கீப்பர் அலுவலகம், புக்கிங் கந்தோர் எல்லாம் அதுதான் வேறு யாருமில்லை. எட்டடிக்கு எட்டடி சதுரமான தகரக் கொட்டகையின் கூரை விளிம்பு நிழலில் மட்டும் ஐந்தாறு பேர் ஒண்டிக் கொண்டு இந்தப் பதைபதைக்கிற வெய்யிலிலிருந்து தப்புகிறதாக எண்ணிக் கொண்டிருந்தார்கள்.



வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிற ஆளைக் குழப்பி விசாரிக்க வேண்டிய அவசரம் சிவத்திற்கில்லை.

சைக்கிளை மெல்லத் தள்ளிச் சாத்திவிட்டு வந்து, வலைக் கம்பிக்கருகில் ஆறுதலாக நின்றபடி, உள்ளே எழுதிக் கொண்டிருந்தவன் வேலையை முடிக்குமட்டும் பார்த்திருந்தான்.

நின்ற இடத்திலேயே தலையைத் திருப்பிப் பின்னால் தெரிந்த சந்தைக் கடைகளைப் பார்த்தபோது, கூரைகளுக்கு மேலே வலு உயரமாய்த் தெரிந்த மணிக்கூட்டுக் கோபுரத்தில் பதினொரு மணியாக்கிக் கொண்டிருந்தது.

கைகளைச் சொடுக்கும் ஓசைகேட்டு சிவம் திரும்பினான். உள்ளே இருந்தவன் பேனாவை மூடி மேசையில் வைத்துவிட்டு இவனைப் பார்த்தான்.

"காலமையிலை, யாழ்ப்பாணத்துக்குப் போகிற முதல் பஸ் எத்தினை மணிக்கு?"

அந்த ஆள் சொன்ன பதில் இவனுக்குப் புரியாததால் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிய அந்த ஒரு கணத்திலேயே அவனுள் ஓர் சினமும் கிளர்ந்தது.

மச்சான்காரனின் வீட்டில் வந்து நின்று, திருகோணமலையைப் பார்க்க அவன் செலவிட்ட இந்த மூன்று கிழமையிலும் அவன் அவதானிக்க நேர்ந்தவற்றிற்கு ஒரு உச்சம் போல இந்த நிகழ்ச்சி அமைவதாக அவன் உணர்ந்தான். அதுவே இந்தச்சினத்தின் பிறப்புக்குக் காலாகவுமிருந்தது. அதை அடக்கிக் கொண்டு மீண்டும் சொன்னான். "விடிய யாழ்ப்பாணத்துக்குப் போற முதல் பஸ்ஸிலை ஒரு சீற் புக் பண்ணவேணும்"

இவன் சொன்னது புரியாததாக அவன் முகத்திற் கோலங்காட்டினான்.

"உங்களுக்கு தமிழ் தெரியாதா?"

'தெரியாது' என்பது போலத் தலையாடியது. தெரியாமலிருக்கிறதே என்பதற்காக எந்தவித விநயமும் தென்படாததற்குப் பதில் ஓர் அலட்சியமே அங்கு மிதந்து நின்றது.

ஆத்திரமும் அவதியுமாய்ச் சைக்கிளை எடுத்தான் சிவம்.

◆ ◆ ◆

"என்ன புக் பண்ணீற்று வந்திட்டியா?"

"என்னத்தைப் பண்ணுறது? அங்கை பஸ் ஸ்ராண்டிலை இருக்கிறவனுக்கு நான் சொல்லுறது விளங்கேல்லை. அவன் சொல்லுறது எனக்கு விளங்கேல்லை. என்னத்தையெண்டு பண்ணிறது?"



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சரி, போகட்டும். நான் பின்னேரம் வரேக்கை புக் பண்ணிக் கொண்டு வாறன்."

மச்சான் போய்விட்டார்.

'இருபது வயதுக்கு மேலாகியும் இன்னமுந் திருகோணமலை தெரியாமலிருக்கிறேனே' என்பது வெட்கப்பட வேண்டிய சங்கதியாக சிவத்தை அடிக்கடி உறுத்திக் கொண்டிருந்தது. அதுவும் அவனுடைய சொந்த மச்சான் அங்கேயே வேலை பார்த்துக் கொண்டிருக்கும்போது- போய் நிற்கத் தங்க எல்லா வசதியுமிருந்தும்- தான் ஒருதரம் அந்த ஊரைப் பார்த்துவிட்டு வராதது முட்டாள்தனம் என்று நினைத்தான் சிவம். அநேகமாக இலங்கையின் மற்றப் பாகங்களுக்குப் போகவேண்டி நேர்கையில் தன்னுள் எழுகிற ஒரு கூச்சமும், ஆற்றாமை உணர்வும் இந்தப் பயணத்தில் நேராது என அவன் நம்பினான். தனக்குத் தமிழைவிட வேறுமொழி சரியாகத் தெரியாததும்தான் 'லோங்ஸ்' போடாத ஒரு பிரகிருதி என்பதும் தன்னுள் இந்தத் தாழ்வுச் சிக்கல் வளர்ந்திருந்ததை ஆய்ந்தறியக்கூடிய அளவிற்குச் சிவம் படித்திருந்தாலும், இவையெல்லாம் தன்னைத் தானே குறைத்து மதிப்பிட ஏற்ற காரணிகளே அல்ல என அவன் நன்றாக உணர்ந்திருந்தாலும், அதை மீற அவனால் முடிந்ததில்லை.

யாழ்ப்பாணத்தில் பிரயாணம் பண்ணுகிற மாதிரியே திருகோணமலைக்கும் போய் வந்துவிடலாம் என்று நம்பினான்.

'உங்கே, நவராத்திரிக் கடைசி நாளன்று 'மானம்பூ' என்று நடக்கிறதைக் காட்டிலும் விசேடமாக இங்கு இருக்கும். ஆனபடியால் இந்த முறை கும்பபூசையை அண்டி இங்கே வந்து நிற்க முடியுமானால் தெண்டித்து வரப்பார்' என்று போன மாதம் மச்சான் எழுதியது சிவத்திற்கு தோதாய் வாய்த்தது.

இங்கே பார்ப்பதற்கு எத்தனையோ இடங்களிருந்தன. 'இவ்வளவு நாளும் ஒரு முறையாவது இங்கு வராமலிருந்தது என்ன முட்டாள் தனம்' என்று தோன்றியது. கோணேஸ்வரம், கன்னியா எங்கும் போனான். துறைமுகம் பார்த்தான் இடையில் ஒரு ஞாயிற்றுக் கிழமை அவனும் மச்சானும் சைக்கிளை எடுத்துக் கொண்டு சீனன்குடாவிற்கும் போய் வந்தார்கள். நாரி முறிகிற அந்த ஏற்றங்களில் சைக்கிள் உழக்கியதுகூட சந்தோசமாயிருந்தது.

ஆனால் எங்கும் அவன் ஏமாற்றத்தைச் சந்தித்துக் கொண்டிருக்க வேண்டியே நேர்ந்தது. அவன் நினைத்து வந்தது போல- திருகோணமலை, யாழ்ப்பாணம் இல்லை என்பதுதான் அது.

அவன் படித்திருந்தது, கேள்விப்பட்டிருந்தது, இவற்றால் திருகோணமலையைப் பற்றி அவனுள் எந்த ஒரு படம் பதிந்திருந்ததோ அது கொஞ்சம்கூடப் பொருந்தாமால் இருந்ததை இங்கு வந்தபின் அவனால் அவதானிக்க முடிந்தது. போன இடங்களிலெல்லாம் அவன் அதை உணர்ந்தான். அதைப்பற்றி மச்சானிடம் கேட்டபோது-

"உண்மைதான் ஒரு பத்துப் பன்னிரண்டு வருடத்திற்கு முந்தி வந்திருந்தால், நீ நினைச்சது போலத் தானிருந்திருக்கும். இப்ப இல்லை " என்றார்.

"என்னெண்டு அப்படி மாறிச்சுது?"

"உது பேசினால் அரசியலாய்ப் போகும், பேசாம வா" என்றார் மச்சான். "அரசாங்கமே திட்டமிட்டுக் குடியேற்றுது - பிறகென்ன?"

இன்றைக்கு பஸ் ஸ்ராண்டில் தவித்தது போல, நேற்றைக்கு சந்தையிலும் தவித்துப் போய்விட்டான் அவன். சந்தையிலிருந்து கடைத்தெருவைச் சுற்றிப் பார்த்தபடி நடந்தபோதும், அந்நியமாகிற ஒரு சூழலைக் கடைத்தெரு தந்தது. அங்கேயிருந்த சில பெயர்ப்பலகைகள், கடைக்காரரின் திமிர்த்தனத்தை உணர்த்தின. கன்னியாவிலிருந்து வருகிறபோதும், சீனன் குடாவிற்குப் போகிறபோதும்கூட அந்தத் தெருக்களின் இரண்டு பக்கங்களும் மாறுதலின் நிச்சய சாட்சியங்களாய் விளங்கின. அங்கே எழுந்திருந்த வீடுகளெல்லாம் புதுக்கருக்கு அழியாதவை.

தான் நினைந்திருந்தது, தன் மனதில் விழுந்திருந்த படம் எல்லாம் நிதர்சனத்தில் இப்படி மாறி அல்லது மாற்றப்பட்டு இருந்ததே பெரிய கொடுமையாக அவனுள் பட்டது.

◆ ◆ ◆

காலை ஐந்தே முக்கால் பஸ் ஆறரைக்குத்தான் புறப்பட்டது. நேற்று இவன் போனபோது கொட்டகைக்குள்ளிருந்தவன்தான் இன்று 'புக்' பண்ணியவர்களைச் சரி பார்த்தான். பஸ் ஒரு முழு வட்டமடித்துத் திரும்பியபோது தூரத்தில் கோணேசர் கோவில் தெரிந்தது. அதனருகே மேலே இரவெல்லாம் செம்புள்ளியாகத் தெரிகிற தொலைத்தொடர்புக் கோபுர விளக்கு அணைந்து போய்க் கம்பிக் கூண்டு மட்டுமே தெரிந்தது.

நகரின் ஒடுங்கிய தெருவில் எதிரே வந்த கார் ஒன்றிற்கு இந்த பஸ் ஒதுங்கி நின்று வழிவிட்டபோது தெருக்கரைச் சுவரொன்றில் பெரிதாக எழுதப்பட்டிருந்த வாக்கியம் சிவத்தின் கண்ணிற்பட்டது.

'இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களே அரபுப்பிரதேசங்களைவிட்டு வெளியேறுங்கள்'

**-சாந்தன்**

# ஈழம் எமக்கே!



*ஈழம் எமக்கே*
*என்ற தாயக வெறியுடன்,*
*கையில் ஆயுதமும் ஏந்தி*
*ஒரு பிடி மண்ணையும் எதிரிக்கு*
*தர மாட்டேன் என்ற இலக்குடன்,*
*இரவில் கண்விழித்து பகலில்*
*வானில் வருகின்றதா சிங்கள வானூர்தி*
*என் கண்கள் தேடும் போது*
*காதில் வந்து கேட்டதடா*
*எங்கள் தமிழீழத் தேசம்*
*விடிந்தது என்று!*
*தாயகத்தின் விடுதலைக்கு வித்திட்ட*
*தங்கத் தலைவா!*
*நீ என்றென்றும் வாழ்க!*

பூங்குன்றன் வீரன்
பேராக்(மலேசியா)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தத்திற்கு அரசு தயாராகிவரும் நிலையில் சமாதான முயற்சிகள் பயன்தருமா ?

தமிழ் மக்களைப் பொறுத்தவரை சமாதானம் என்பது சிங்கள அரசின் மிக மோசமான பொய்யின் முழுவடிவமும், தமிழர்களை ஏமாற்றிப் பயன்படுத்தும் மிக மலிவான வார்த்தையும் ஆகும். தமிழர்களை அரசியல் தெரியாத மனிதர்களாக, ஏமாளிகளாக எண்ணி சந்திரிகா முன்வைக்கும் ஓர் அரசியல் பதமே 'சமாதானம்' ஆகும். இன்று சந்திரிகா நினைப்பது போல் தமிழர்கள் இல்லை. இன்றைய எமது சமூகம் மிகவும் வீரமும் விவேகமும் நிறைந்ததாக மாறியுள்ளது. சமாதானத்தை அவர்கள் உண்மையின் நேர்மையின் பிறப்பிடமாகவும் போர் சாதனைகளின் பெறுபேறாகவும் பலத்தின் விளைவாகவுமே பார்க்கின்றனர். இன்றைய இந்தச் சூழ்நிலையில் அமைதி ஏற்படுமா? என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் பலமாக எழுகின்றது. இவற்றுக்கு தலைவர் தனது மாவீரர் தின உரையில் மிகத் தெளிவாகக் கூறுகின்றார்.

'தமிழீழப் போரானது ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் விடுதலைப் போர் என்ற யதார்த்த அரசியல் உண்மையை சிங்கள அதிகாரவர்க்கம் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. இந்த மறுதலிப்புத்தான் தமிழரின் இனப்பிரச்சனையை சிக்கலாக்கி வருகின்றது. இதுதான் போரைத் தீவிரப்படுத்தி வருவதற்கும் காரணமாக இருக்கின்றது. இதுதான் இனப்பிரச்சனைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் இருந்து வருகின்றது.' இந்த முட்டுக்கட்டையை சிங்கள அரசு நீக்குமா? இவற்றை ஏற்றுக்கொள்ளும் மனநிலை மாற்றம் ஏற்படாதவரை சமாதானம் என்பது வெறும் வாய்ப்பேச்சாகவே இருக்கும்.

சந்திரிகா கடந்த ஆறு வருடங்களாக சமாதானம் பற்றியும் தீர்வுப்பொதி பற்றியும் பேசுகின்றார். அமைதி வழியிலே தமிழ் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியும் என்றார். மறுநாளே யுத்தம் மூலமே அமைதியைக் காணமுடியுமென்றார். இவ்வாறு முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவார். அதனைத் திட்டமிட்டு உலகத்தையும், தமிழ் மக்களையும் ஏமாற்றும் அரசியல் சாணாக்கியமாகக் கருதுகின்றார்.

உண்மையில் சந்திரிகாவின் நோக்கம் யுத்தம் மூலம் தமிழர் போராட்டத்தை அழித்து தமிழர் தேசத்தையும் தமிழரையும் ஆக்கிரமிப்பதுதான். இன்று சமாதானத்தைப் பற்றி பேசிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் முழு அளவில் பெரும் இராணுவ நடவடிக்கைக்கு தயார்ப்படுத்தல் செய்துகொண்டு இருக்கின்றார். அதற்கு சர்வதேச உதவிகளையும் ஆதரவையும் பெறுவதற்கு சமாதான விரும்பிபோல நடிக்கின்றார். அரசால் ஏற்படுத்தப்படும் சமாதானத்திற்கு விடுதலைப் புலிகள்தான் முட்டுக்கட்டையாக உள்ளனர் என்ற ஒரு தோற்றப்பாட்டை உலகம் நம்பும் வரை இந்த சமாதான நாடகம் தொடரும்.

இன்று இங்கு உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமானால்.

1. சிங்களத்தலைமை சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து உறுதியான தீர்மானம் எடுக்கும் தலைமையாக இருக்க வேண்டும்.

2. உலக நாடுகள் சிங்கள அரசுக்குக் கொடுக்கும் இராணுவ, பண உதவிகளை நிறுத்த வேண்டும்

3. தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தினை மிகப்பலப்படுத்த வேண்டும்.

இவற்றில் முதலாவது விடயத்தை நாம் பார்த்தால் சிங்களத் தலைமையானது சிறுபான்மையினரை மதித்து அவர்களின் உரிமையைக் கொடுக்க வேண்டும் என்ற உறுதியான தீர்மானம் எடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும். தான் வளர்த்த பேரினவாதப் பூதத்தை தானே தூக்கி எறிந்துவிட்டு விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் நின்று பிரச்சனையைத் தீர்க்க முற்பட வேண்டும். பெரும்பான்மை மக்களைப் போல் சிறுபான்மை இன மக்களையும் சமமாக மதிக்கும் உயரிய குணாம்சம் வேண்டும். இதற்கு மேல் இவற்றை நடைமுறைப்படுத்தும் நம்பிக்கையும் துணிவும், உறுதியும் வேண்டும். அப்போதுதான் உண்மையான சமாதானம் ஏற்படும்.

இரண்டாவது உலகநாடுகள் ஓர் இனவாத அரசிற்கு ஆயுதம் தொடக்கம் பொருளாதார உதவிகள் வரை இனாமாகவும் கடனாகவும் கொடுத்துக் கொண்டு மறுபுறத்தில் சமாதானம் ஏற்பட வேண்டும் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்று கேட்பது தமிழர்கள் மனதில் மிகவும் துன்பத்தையும் வேதனையையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்துகின்ற ஒரு செயலாகும். இன்று உலக நாடுகளில் நடப்பவற்றை பார்க்கின்றபோது உலக நாடுகள் வெறும் வார்த்தைகளில் சமாதானத்தைப் பேசிக்கொண்டு மறுபுறத்தில் அரசியல், இராணுவப் பொருளாதார நலனை கருத்தில் கொண்டே செயற்பட்டு வருகின்றன. இவர்கள் இதயசுத்தியோடு தமிழர்பிரச்சனையை விளங்கி இன்றைய உண்மை நிலைமை புரிந்து செயற்பட்டால்தான் சமாதானம் ஏற்படும்.

மூன்றாவதாக தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் போரை மேலும் பலப்படுத்த வேண்டும். பலந்தான் இன்றைய உலக ஒழுங்கை தீர்மானிக்கின்றது. பலந்தான் உண்மையான விரைவான சமாதானத்தை ஏற்படுத்தும். பலமுள்ளவர்கள் வாழ்கின்றார்கள். பலவீனமானவர்கள் அழிகின்றார்கள். இதுதான் இன்றைய வரலாறு, யாழ்ப்பாணத்தையும் கிளிநொச்சி நகரத்தையும் வவுனியாவிலிருந்து மாங்குளம் வரையிலான பகுதியையும் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்தபோது ஆயிரக்கணக்கான உயிர்கள் அழிக்கப்பட்டன. பல கோடிச் சொத்துக்கள் இழந்து தமிழ் மக்கள் வாழவழியின்றி அகதிகளாக அழிந்தபோது உலகம் எம்மைக் கண்டு கொள்ளவில்லை. உலக மனச்சாட்சி எம்மக்கள் பக்கம் திரும்பவில்லை. சிங்கள அரசின் இராணுவ அரசியல் பொருளாதார நெருக்கடிகளை தேசியத் தலைவர் அவர்கள் தனியொருவராக நின்று நம்பிக்கையோடும் துணிவோடும் உறுதியோடும் செயற்பட்டு அவற்றை முறியடித்து அதில் பெரும் வெற்றிகளையும் சாதனைகளையும் படைத்தார். அதன் மூலம் உலக நாடுகளின் பார்வை தமிழர் போராட்டப் பக்கம் திரும்பின. ஓயாத அலைகள் -3 படையணிகள் வெற்றிகளை குவித்தபடி யாழ்ப்பாணத்தின் வாசல்வரை சென்றன. சென்றபோதுதான் உலகநாடுகள் விடுதலைப் புலிகளுடன் சமாதானம் பற்றிப் பேசத் தொடங்கின. அமெரிக்காவைச் சேர்ந்த பெஞ்சமின் கில்மன் (அமெரிக்க காங்கிரஸ் சபையின் அனைத்துலக உறவுகள் தொடர்பான குழுவின் தலைவர்) அமெரிக்க வெளியுறவுச் செயலர் திருமதி. மெடலின் அல்பிரைட்டிற்கு எழுதிய கடிதத்தில் "இனப்பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் தமிழர்கள் பிரிந்து செல்லும் உரிமையை விவாதிக்க அமெரிக்கா ஆதரவு அளிக்க வேண்டும்" என்றார்.

அமெரிக்கச் சட்டத்தரணி கரன் பாக்கர் "சிறீலங்காவில் நடைபெறும் யுத்தம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான யுத்தம்" என்றார். இது போன்று பல நாடுகளிலும் இருந்து தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சம்மந்தமான ஓர் உயர்ந்த எண்ணப்பாட்டைத் தோற்றுவித்தது ஓயாத அலைகள்-3இன் வெற்றிகள்தான். இதன் ஓர் வெளிப்பாடே நோர்வே சமாதானக்குழு தேசியத் தலைவரை சந்தித்துச் சென்ற நிகழ்வாகும். இவற்றில் இருந்து நாம் புரிந்து கொள்ள முடிந்தது என்னவெனில் நாம் பலமாக இருந்து சொல்கின்றபோதுதான் எமது நியாயங்கள் கருத்தில் எடுக்கப்படுமென்பது தெளிவாகின்றது. தமிழ் மக்களினது அளப்பரிய தியாகத்தால் கட்டியெழுப்பப்பட்ட இன்றைய உயர்ந்த நிலை மேலும் வளர வேண்டும். அதற்காக நாம் எல்லோரும் ஒன்றுபட்டு விடுதலைப் போராட்டத்தை பலப்படுத்துவதன் மூலம் உண்மையானதும் நிரந்தரமானதுமான சமாதானத்தை ஏற்படுத்தலாம்.

**-பாலன் ஈழநாதம்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திறந்தவெளிச் சிறைச்சாலை மனச்சாட்சியின் குரல்

பி.பி.சி வானொலியின் தமிழ்-சிங்கள சேவைகளின் குடாநாட்டுச் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் 10.10.2000 அன்று ஆக்கிரமிப்பாளர்களின் அடிவருடிகளால் அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

பத்துவருடகாலமாக பத்திரிகைத்துறையில் பணியாற்றி சிறந்ததொரு செய்தியாளராகப் பரிணமித்த அவர் தனது பணியில் காட்டிய கடமையுணர்விற்கும் நேர்மைப் பண்பிற்கும் வெகுமதியாக, கொலைஞர்கள் அவருக்கு மரணத்தைப் பரிசளித்துள்ளனர்.



பத்திரிகையாளர் நிமலராஜன் கொல்லப்பட்ட செய்தி தமிழ்மக்களுக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த மனவேதனையையும் அளித்துவிட்டது.

கடந்த ஐந்து வருடங்களாக சிங்கள இராணுவத்தின் கிடுக்கிப்பிடிக்குள் சிக்கி அவலவாழ்வை அனுபவித்துவரும் யாழ்ப்பாண மக்களது துன்ப-துயரங்களையும் இந்த இராணுவ ஆட்சியை மூடிமறைக்க சிங்கள அரசு எடுக்கும் கண்துடைப்பு அரசியல் நடவடிக்கைகளையும் வெளிஉலகிற்கு அம்பலப்படுத்துகின்ற அரியபணியை நிமலராஜன் ஆற்றிவந்தார்.

தமிழ்-சிங்கள மொழிகளில் நல்ல தேர்ச்சிபெற்றிருந்த அவர் பி.பி.சியின் தமிழோசை மற்றும் அதன் சிங்கள மொழி ஒலிபரப்பான சந்தேசிய உட்பட பல வெளிநாட்டுத் தமிழ்வானொலிகளின் யாழ்ப்பாணச் செய்தியாளராகத் திறம்படப் பணியாற்றி மக்களின் அபிமானத்தையும் பெற்றிருந்தார்.

கணீரென்ற வெண்கலக்குரலில் குடாநாட்டு நிலவரங்களை செய்தியாகத் தொகுத்து நிமலராஜன் வழங்கும் விதம் அலாதியானது.

அவர் வழங்கும் செய்திகள் தகவல் தெளிவுடன் இருக்கும். எந்தவிதமான பூடகத் தன்மைகளும் இல்லாது வெளிப்படையாக செய்திகளைக் கொடுப்பது அவர் கடைப்பிடிக்கும் தனித்துவமான பாணி. அவர் வழங்கும் செய்திக் கண்ணோட்டங்களில் நேர்மையான விமர்சனம் இருக்கும். குடாநாட்டு மக்கள் சந்திக்கும் அவல வாழ்வை அம்பலப்படுத்தும்போது அவரது குரலில் தார்மீகக் கோபம் கொப்பளிக்கும். அதுமட்டுமல்ல அவரது செய்திகளிலும்-அரசியல் கண்ணோட்டங்களிலும் அம்பலப்படுத்தல்களிலும் தமிழ்த்தேசிய உணர்வு மையசக்தியாகத் திகழும். மக்களின் துன்பதுயரங்களை எடுத்துக்கூறி, அவற்றிக்குக் காரணமானவர்களை சுட்டுவிரல் நீட்டி பகிரங்கமாகவே குற்றம் சுமத்தும்போது அவரது கருத்துக்கள் மௌனமாக உள்ள குடாநாட்டு மக்களது மனச்சாட்சியின் குரலாக ஓங்கி ஒலிக்கும். இவை காரணமாக நிமலராஜனுக்கு தமிழ் மக்கள் மத்தியில் பேரபிமானமும் சந்தேசியவின் சிங்கள நேயர்கள் மத்தியில் பிரபலமும், படையினர் மற்றும் அடிவருடிகள் மத்தியில் வெறுப்புணர்வும் இருந்து வந்தது.

சர்வதேச வானொலிகளின் யாழ்ப்பாணச் செய்தியாளராக நிமலராஜன் பணி செய்யத் தொடங்கும்வரை குடாநாட்டு மக்களின் துயரவாழ்க்கை வெளி உலகிற்குச் சரியாகத் தெரியவரவில்லை. யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட்சிக்குப் பதிலாக சிவில் நிர்வாகம் அமைக்கப்பட்டு மக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்குத் திரும்பிவிட்டது என்றும் தமிழ்க் கட்சிகள் அங்கே ஜனநாயகமுறையில் அரசியல் வேலைத் திட்டங்களைத் தொடங்கிவிட்டன என்றும் குடாநாடு புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றது என்றும் சிங்கள அரசு வெளியிட்ட செய்திகள் மட்டுமே வெளிவந்து கொண்டிருந்தன.

ஆனால், நிமலராஜனூடாக யாழ்ப்பாணத்தின் உண்மை நிலவரங்கள் படிப்படியாக வெளிவரத்தொடங்கின. படையினரின் அட்டூழியங்கள் அம்பலத்துக்கு வந்தன. தமிழ்க்குழுக்களின் அராஜகங்கள் வெளிக்கொணரப்பட்டன. சிங்கள அரசின் கண்துடைப்பு அரசியல் தோலுரித்துக்காட்டப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்வியல் அவலங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

ஆனையிறவுத்தள அழிப்புடன் தென்மராட்சிப் பகுதிகளுக்குள் சண்டை பரவியபோது அங்கிருந்த மக்களின் உயிர்ப்பாதுகாப்பிற்காக இடம்பெயர்ந்து செல்லுமாறு புலிகள் இயக்கம் வேண்டுகோள்விடுத்தது. ஆனால் படையினர் தமது பாதுகாப்பிற்காக அம்மக்களை வெளியேறவிடாது தடுத்து அவர்களுக்கு ஒரு பேரழிவை உண்டுபண்ண முயன்றபோது அம்மக்களின் நிலையை உலகறியச் செய்விப்பதற்காக உயிராபத்தையும் பொருட்படுத்தாது நிமலராஜன் நேரடியாகவே அப்பகுதிகளுக்குச் சென்றார். அந்த மக்களுடன் உரையாடி அங்கிருந்து நிலைமைகளை வானலைகளில் பரப்பி இராணுவத் தலைமைப்பீடத்தை நெளியவைத்து சிங்கள அரசைச் சிக்கலுக்குள்ளாக்கினார்.

இவரது செய்திகளால் உத்வேகமடைந்த உலக மனிதஉரிமை அமைப்புக்கள் சிங்கள அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்து மக்களின் சுதந்திரமான இடப்பெயர்வுக்கு வழிசமைத்தன.

யாழ்ப்பாணத்தில் சாதாரண இளைஞர்களைச் சுட்டுக்கொன்றுவிட்டு, கொல்லப்பட்டவர் புலி உறுப்பினர் என படையினர் விளக்கம் சொல்லி செய்தி வெளியிடுவது வழமை. ஆனால், இராணுவத்தின் அந்தச் செய்தியையும் வானலைகளில் பரப்பி கொல்லப்பட்டவர் ஒரு மிலேச்சத்தனமான படுகொலை என உலகிற்கு நிமலராஜன் ஒப்புவிக்கும் விதம் அவரது செய்தி வழங்கும் பாணி தனிரகமானது.

இவை காரணமாக படையினரின் எச்சரிக்கைகளுக்கும் பயமுறுத்தல்களுக்கும் நிமலராஜன் உள்ளாகியிருந்தார்.

படையினரின் இரும்புப்பிடிக்குள் நடைபெறும் யாழ்ப்பாணத்தின் “ஜனநாயக அரசியலையும்” அதை நடாத்தும் தமிழ்க் குழுக்களின் அடாவடித்தனங்களையும் மிகத் தெளிவாகவே அவர் உலகிற்கு எடுத்துக்கூறினார். அண்மையில் நடந்து முடிந்த தேர்தல் கூத்தில் தமிழ்க்கட்சிகள் குறிப்பாக ஈ.பி.டி.பியினர் தீவகத்தை ஒரு அடிமைத்தீவாக வைத்திருக்கின்றனர். அங்குள்ள மக்களை அடிமைகள் போல தம்விருப்பப்படி ஆட்டுவிக்கின்றனர் என விமர்சனம் செய்தார். படையினரின் பாதுகாப்பில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தத் துரோகிகள் நடாத்தும்கேலிக்கூத் தான அரசியலை எள்ளிநகையாடி நிமல ராஜன் செய்திகளை வெளியிட்டார்.

இதனால் தமிழ்க்குழுக்களின் குறிப் பாக ஈ.பி.டி.பியினரின் கொலை மிரட்டல் களுக்கு இவர் உள்ளானார்.

எனினும், இந்தவகை மிரட்டல்களைக் கண்டு நிமலராஜன் தனது பணியில் தடுமாறவில்லை. தனி ஒருவனைக்கொண்ட படைபோல நிமலராஜன் தனித்துநின்று குடாநாட்டு நிலரங்களை அம்பலப்படுத்தி ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்துவந்தார்.

யுத்தக்களத்திற்கு நேரடியாகச்சென்று போர்ச்செய்திகளைத் திரட்டும் பத்திரிகை யாளர்கள் ஒருவகை. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்குள் வசித்தபடி ஆக்கிரமிக்கப்பட்ட மக்களுள் ஒருவராக இருந்துகொண்டே அரசியல் இராணுவ நிலவரங்களை அம் பலப்படுத்தும் பத்திரிகையாளர்கள் வேறொ ருவகையினர்.

முதல்வகைச் செய்தியாளர்களுக்குச் சாவு ஒரு தடவைதான் வரும். ஆனால் அடுத்தவகைச் செய்தியாளர்கள் சாவை சதா சந்தித்தபடியே வாழ்க்கையை ஓட்டு வார்கள். நிமலராஜன் இந்தவகைச் செய்தி யாளராகவே பணியாற்றினார். பலமுனை களிலிருந்தும் சாவை சதா சந்தித்தபடியே சாவுக்குப் பயப்படாது அவர் துணிச்சலுடன் பணியாற்றினார்.

ஒரு செய்தியாளன் என்ற நிலைக்கும் அப்பால் குடாநாட்டு மக்களின் அவலவழ்க் கையை துணிச்சலுடன் உலகிற்கு எடுத்துக் கூறும் ஒரு மக்கள் பிரதிநிதி போலவே நிமலராஜனின் செயற்பாட்டை தமிழ்மக்கள் கருதினர்.

அதனாலேயே கொலைஞர்களின் குண் டுக்கு அவர் பலியானபோது குடாநாட்டு மக்கள் மட்டுமல்ல, தமிழீழ மக்கள் அனை வருமே தங்களது குரலை இழந்துவிட்டது போலத் துயரப்பட்டனர். அவரது சாவுக்கு அஞ்சலி செலுத்தி இரங்கல் கூட்டங்களை நடாத்தினர். அவரின் உயிரைப்பறித்த கொலைஞர்களைக் கண்டனம்செய்து தமது கோபத்தை வெளிப்டையாகக் காட்டினர்.

குடாநாட்டுச் செய்தியாளராக நிமல ராஜன் பணியாற்றிய காலம் தமிழ்மக் களால் என்றும் நினைவுகூரப்படும். நிமல ராஜன் என்ற செய்தியாளனும் தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் நிலை யான இடத்தைப் பெறுவார்.

"விடுதலைப் புலிகள்"
[ஐப்பசி, கார்த்திகை 2000]

# சிறீலங்கா அரசு நிராகரித்தாலும் போர்நிறுத்தம் தொடரும்

25.12.2000 அன்று வன்னியலுள்ள விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் போர் நிறுத்தம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை.

அடுத்த ஆண்டு ஜனவரி 24ஆம் திகதியுடன் முடிவடையும் கொண்டாட்ட காலத்தில் நாம் வலிந்து தாக்குதல்களிலோ மற்றும், போர் நடவடிக்கைகளிலோ ஈடுபடப்போவதில்லை. ஆயினும், ஆயுத ரீதியாக எம்மைப் பாதுகாக்கும் உரி மையை நிலைநாட்டத் தவறமாட்டோம். எமது நிலைகளின் மீது எதிரி தாக்குதலை நடத்தினால், நாம் தற்காப்புப் போரில் ஈடுபடுவோம்.

சமாதான வழிமுறைகளை ஊக்கப்படுத்தும் நல்லெண்ண நோக்கத்துடன், ஒரு மாத காலத்திற்கு ஒருதலைப்பட்சமாக நாம் அறிவித்த போர்நிறுத்தத்தை சிறீலங்கா அரசு நிராகரித்துள்ளது. இது எமக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் தருகின்றது. எமக்கு சமாதானத்திலுள்ள உண்மையான அக்கறையின் எடுத்துக்காட்டாகவே போர்நிறுத்தப் பிரகடனத்தைக் கருத வேண்டுமென நாம் விளக்கியிருந்தோம். சமாதானப் பேச்சுக்களுக்கான ஒரு உகந்த புறநிலையை உருவாக்கும் நல்லெண்ண முயற்சியாகவே எமது அறிவிப்பு அமைந்தது. ஆனால் சிறீலங்கா அரசானது எமது போர்நிறுத்த யோசனையை நிராகரித்ததுடன், நல்லெண்ண முயற்சிகள் இப்போது அவசியமில்லை என்று அறிவித்திருக்கின்றது. சிறீலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் மத்தியில் ஆழமான நம்பிக்கையீனமும், சந்தேகமும், பகைமையும் நிலவுவதால் சமாதானப் பேச்சுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு நல்லெண்ண முயற்சிகள் அவசியமும் தேவையுமாகும். எமது போர் நிறுத்த யோசனையை அரசாங்கம் நிராகரித்த நடவடிக்கையானது எம்மீது அரசாங்கம் கொண்டிருக்கும் நம்பிக்கையீனத்தையும் பகைமையையுமே எடுத்துக் காட்டுகின்றது.

நடைபெற முடியாத காரியத்தில் அபத்தமான தர்க்கீகத்தில் சிறீலங்கா அரசு நம் பிக்கை கொண்டிருப்பது போல் தெரிகிறது. அதனால்தான் போரும் சமாதானமும் ஒத்திசைவாகச் செல்லமுடியும் என நம்புவதுடன், போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு சமாதானப் பேச்சுக்களையும் ஒரே சமயத்தில் நிகழ்த்தலாமென அரசு நினைக்கின்றது. இந்த முரணான நிலைப்பாட்டை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. போரும், வன்முறையும், இரத்தக் களரியும் நிலவும் பகைமை நிறைந்த சூழலில் உண்மையான நேர்மையான பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாது. இருபது ஆண்டு காலத்திற்கு மேலான கொடிய யுத்தம் காரணமாக இருதரப்பினர் மத்தியிலும் ஆழமான வேற்றுமை புரையோடிப்போய்க் கிடக்கின்றது. இந்த வரலாற்றுப் பகைமை காரணமாகவேதான் போர் நெருக்கடியைத் தணிக்க வேண்டு மென்றும், பரஸ்பர நல்லெண்ணம் நிலவும் சமாதானச் சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்றும் நாம் வலியுறுத்தி வருகின்றோம். சிறீலங்கா அரசு தனது கடும் போக்கை கைவிட்டு, ஆக்கபூர்வமான எமது யோசனையை பரிசீலனை செய்ய வேண்டும்.

கிறிஸ்தவர்களுக்கும், இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் புனித காலமாகத் திகழும் இம் மாதத்தில், நாம் தொடர்ந்து போர்நிறுத்தத்தைப் பேண முடிவு செய்திருக்கின்றோம். விட்டுக்கொடாத போக்கை அரசாங்கம் கடைப்பிடித்தபோதும், சமாதான முயற்சிக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க நாம் தீர்மானித் திருக்கிறோம். சிறீலங்கா அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்து, போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து, நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்க முன்வருமென நாம் எதிர்பார்க்கிறோம்.

சிறீலங்கா அரசு தனது இராணுவவாதக் கடும்போக்கைக் கைவிட்டு சமாதான வழிமுறையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்குமாறு சர்வதேச உலகம், குறிப்பாக அமெரிக்க, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள், இந்தியா போன்றன தமது செல்வாக்கைப் பிரயோகித்து அழுத்தம் போட வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சந்திரிகா படையின் மனித வெறியாட்டம்

## மிகக்கொடூரமான முறையில் 8 தமிழர்கள் படுகொலை

19.12.2000 அன்று தென்மராட்சியின் மிருசுவில் வடக்குப் பகுதிக்கு தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற ஒன்பது தமிழர்களில் எட்டு பேர் சிங்கள இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டு அடித்தும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 25.12.2000 அன்று இவர்கள் 4அடி அகலமும் 8அடி ஆழமும் கொண்ட புதைகுழியிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இச்சம்பத்தில் சிங்களத்தால் படுகொலை செய்யப்பட்டவர்களில் ஐந்து வயதுச் சிறுவனும் அடங்குகின்றார். சிங்கள இராணுவத்தால் கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு.

எஸ்.வில்வராஜா, அவரது மகன்களான வில்வராஜா பிரதீபன், வில்வராஜா பிரசாந்த்(ஐந்து வயதுச் சிறுவன், இவரது வலது கால் முறிக்கப்பட்டிருந்தது) செல்லத்துரை தேவகுலசிங்கம், ஞானபாஸ்கரன் பாஸ்கரன், நடேசு ஜெயச்சந்திரன், கதிரன் ஞானச்சந்திரன், அவரது மகனான ஞானச்சந்திரன் சாந்தன் ஆகியோரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டோராவர். இவர்களுடன் சென்று இராணுவத்தின் கொலைவெறித் தாக்குதலுக்கு உட்பட்டு மயிரிழையில் உயிர்தப்பிய பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவரின் சாட்சியத்திலேயே இப் படுகொலைச் சம்பவம் அம்பலமாகியிருக்கிறது.

## சிங்கள இனவெறிக்கு அஞ்சி தமிழகத்தில் புகலிடம் தேடிய தமிழ்ச்சிறுமி கொடுமையான முறையில் படுகொலை

சிறீலங்கா இராணுவத்தின் கொடுமைகளுக்கு அஞ்சி தனது குடும்பத்தினரோடு தமிழ்நாட்டில் தஞ்சமடைந்திருந்த ஒரு சிறுமி பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட கொடூரம் கடந்த 12.12.2000 அன்று நிகழ்ந்துள்ளது. தமிழ்நாடு முள்ளிக்காடு முகாமில் வசிக்கும் 13 வயதான ரவீந்திரன் குவேனி எனும் சிறுமியே இவ்வாறு கோரமானமுறையில் சிதைக்கப்பட்டவராவார். பள்ளி சென்று திரும்பிய இவர் விறகு சேகரிக்கவெனச் சென்ற இடத்தில் காணாமல் போயிருந்தார். மறுநாள் செவ்வாய்க்கிழமை அவரது உயிரற்ற, காயங்கள் நிறைந்த உடலம் உறவினர்களால் கண்டெடுக்கப்பட்டது.

## திருகோணமலையில் 40,000 சிறுவர்களுக்கு போலியோ மருந்து வழங்கப்பட்டது.

கடந்த டிசம்பர் மாதம் 1, 2ஆம் திகதிகளில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின், சிறுவர்களுக்கான போலியோ தடுப்பு மருந்து வழங்கும் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், விடுதலைப் புலிகளும் சிறீலங்கா இராணுவமும் போர் ஓய்வைச் செய்திருந்தனர். இதன்போது திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் 40,000 குழந்தைகள் பயனடைந்தனர். "விடுதலைப் புலிகள் இந்நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினர்" என யூனிசெவ் நிறுவனத்தின் திருகோணமலைக்கான பிரதிநிதி திரு. கொலின் கிளினி தெரிவித்தார்.

ஆனால் சிறீலங்காப் படைத்தரப்பு தான் கடைப்பிடிப்பதாக ஒப்புக்கொண்ட போர் ஓய்வை முறியடிக்கும் விதத்தில் நடந்து கொண்டுள்ளது. 2.12.2000 அன்று மட்டக்களப்பு களவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறீலங்கா ஆயுதப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 80 வயது முதியவர் உட்பட இரண்டு பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர் மேலும் சிலர் காயமடைந்தனர்.

## திருமலை மாவட்டத்தில் சிங்களக் கடற்படையின் வெறித்தனத்திற்கு தமிழர்கள் பலி

திருமலை நகரிற்கு வந்துவிட்டு தமது கிராமமான கோபாலபுரத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு தமிழர்கள் சிறிலங்காக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவம் கடந்த 13.12.2000 அன்று மாலை 5.00 மணிக்கு நிலாவெளிக்கு அருகேயுள்ள இக்பால் நகரில் இடம்பெற்றுள்ளது. சண்முகராஜா சுவர்ணகாசன், மகாலிங்கம் தர்மிரன் ஆகியோரே சிங்களக் கடற்படையால் ஈனத்தனமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு மாதகாலத்திற்கு யுத்தநிறுத்தம் அறிவிப்பு.

நோர்வே அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக, ஒரு மாதகால ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். 21.12.2000 அன்று வன்னியில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமைச்செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அதிகாரபூர்வ அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையின் சாரம் வருமாறு. "தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரும், பிரதம இராணுவத் தளபதியுமான திரு.வே.பிரபாகரன் அவர்கள், தமிழர் விடுதலை இராணுவத்தின் சகல படையணிகளுக்கும் விடுத்துள்ள உத்தரவில், 24.12.2000 நள்ளிரவிலிருந்து வருகிற 24.01.2001 நள்ளிரவு வரைக்குமான ஒரு மாதகால இடைவெளியில் சிறீலங்காப் படைகளுக்கு எதிராக எந்தவிதமான போர் நடவடிக்கைகளும் எடுக்கக் கூடாதென கட்டளையிட்டுள்ளார். இவ் யுத்தநிறுத்தமானது ஒரு நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகவும், சமாதானத்திலும் சமாதான வழியிலான தீர்விலும் எமக்குள்ள ஆர்வத்தின் வெளிப்பாடாகவும், போர் நெருக்கடியைக் குறைத்து இயல்புநிலையையும் சமாதானச் சூழ்நிலையையும் உருவாக்கும் நோக்குடனேயே இந்த சமாதான இடைவெளியைத் திறந்திருக்கின்றோம்" என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீள்பார்வை 2000

## நவம்பர்

**03.11.00**

நோர்வே அரசின் சமாதான முயற்சிகளைக் கண்டித்து கொழும்பு நுகேகொடப் பகுதியில் பேரினவாதக் கட்சியான சிகல உறுமய கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

**05.11.00**

வவுனியாவில்வைத்து கிளிநொச்சி பத்தாம் வாய்க்காலைச் சேர்ந்த துரைச்சாமி என்ற வயோதிபர் சிறீலங்காப் படையுடன் சேர்ந் தியங்கும் கூலிக்குழு ஒன்றினால் கோரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

**07.11.00**

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான நிமலன் சவுந்தரநாயகம் வாழைச்சேனை வீதியில் கிரான் என்ற இடத்தில் வைத்து சிறீலங்காப்படையுடன் சேர்ந்தியங்கும் கூலிக்குழு வினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**12.11.00**

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் ஒரு இராணுவத்தினன் கொல்லப்பட்டு, மேலும் ஒரு படையினன் காயமடைந்தான்.

**15.11.00**

தென்மராட்சி வறணிப் பகுதியில் சிறீலங்காப் படை மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**18.11.00**

ஓமந்தை விளக்குவைத்தகுளம் பகுதியூடாக முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஏழு சிங்களப் படையினர் கொல்லப்பட்டு பலர் காயமடைந்தனர். நான்கு படையினரின் உடல்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஒரு இராணுவ அதிகாரி உட்பட 7 படையினர் காணாமல் போயிருப்பதாக சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது.

**19.11.00**

சிறீலங்கா ஆயுதப் படையினர் சாவகச்சேரி மட்டுவில் பகுதிகளுக் கூடாக கினிகீர-4 (சூரியக் கதிர்) எனும் பெயரில் பெருமெடுப் பிலான தரைநகர்வு நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டனர். இதனை எதிர்த்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வழிமறிப்புத் தாக்குதலின்போது 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டு, 27 படையினர் காயமடைந்தனர்.

**20.11.00**

மன்னார் கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும் சிங்களக் கடற்படை யினருக்கும் இடையில் கடற்சமரொன்று இடம்பெற்றுள்ளது. நாற்பத் தைந்து நிமிடங்களுக்கு மேல் இடம்பெற்ற கடற்சமரில் இரண்டு படகுகள் சேதமாக்கப்பட்டன.

**01.11.00**



தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கட்கும் திரு. எறிக் சுல்கைம் தலைமையிலான நோர்வே தூதுக் குழுவினருக்கு மிடையிலான சந்திப்பு இடம் பெற்றது. இச்சந்திப்பின் போது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப் புக்கள் பற்றியும் புறநிலைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

**16.11.00**



நோர்வேயின் சமாதான முயற்சியை எதிர்த்து சிகல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலக் கருணாரத்னா தலைமையிலான 700 பிக்குமார் நோர்வே தூதரகம் நோக்கி ஊர்வலம் நடத் தியதுடன், நோர்வே தூதுக்குழுவின் தலைவர் திரு. எறிக் சுல்கைமின் உருவத்தையும் எரியூட்டினர்.

**20.11.00**



யாழ் செய்தியாளர் நிமலராஜன் படுகொலையைக் கண்டித்தும், பண்டாரவளைப் படுகொலைகளைக் கண்டித்தும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர். இதன்போது மாணவர்களால் டக்ளஸ் தேவானந்தாவினதும், சந்திரிகாவினதும் உருவப் படங்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

**21.11.00**



மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் பெய்து வரும் கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிப் படைந்துள்ளன. பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

**20.11.00**

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக் கடற்படையினர் சுட்டு நான்கு பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் இரு சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்

**27.11.00**

தமிழீழ மாவீரர் நாள் 2000 தமிழீழத்தில் உணர்வுபூர்வமாகவும், எழுச்சிகரமாகவும் தமிழீழ மக்களாலும் போராளிகளாலும் அனுட் டிக்கப்பட்டது. மாலை 6.07 மணிக்கு பல கடற்கரும்புலிகள் வீரகாவியமான கடற்கரையில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட நினைவாலயத்திலே தமிழீழத் தேசியத் தலைவர் 158 தரை, கடற் கரும்புலிகளுடன் தேசியச் சுடரேற்றி அகவணக்கம் செலுத் தினார். அதனைத் தொடர்ந்து மாவீரர் துயிலுமில்லங்கள், மக்களின் இல்லங்கள், ஆலயங்கள் பொதுவிடங்கள் எங்கும் மாவீரர் நினைவாக ஈகைச்சுடரேற்றப்பட்டன. தமிழீழ மக்கள் வாழும் உலகப் பரப்பெங்கும் மாவீரர் நாள் சிறப்புற அனுட்டிக்கப்பட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணையாத தீபம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும் முதனிலைத் தாக்குதலணித் தளபதிகளில் ஒருவருமான மேஜர் அல்பேட் 1982இல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தான்.

6அடி 2 அங்குலம் உயர கம்பீரமான தோற்றம். போர்வீரனுக்குரிய வீரமும், மதிநுட்பமும் ஒருங்கே சேர்ந்து காணப்படும் ஒரு தூய போராளிதான் மேஜர் அல்பேட். மாவீரன் கப்டன். பண்டிதர் அமைப்பின் ஆயுதக்களஞ்சியங்களுக்கு பொறுப்பாக இருந்த காலத்தில் அவருக்கு அடுத்த படியாக இருந்து வேலை செய்தவன். விடுதலைப் போரிற்கென விடுதலைப் புலிகளை பொருளாதார ரீதியாகவும், ஆயுத தளறபாட வகையாகவும் வளப்படுத்த அயராது உழைத்தவன். கப்டன்.பண்டிதரால் "கந்தையா" என்று செல்லமாக அழைக்கப்பட்டவன்.

அச்சுவேலியில் நடைபெற்ற எம் தளம் மீதான இராணுவ முற்றுகையில் தன்னுடைய துப்பாக்கியில் இருந்த குண்டுகள் தீரும்வரை போராடி வெற்றிகரமாக வெளியேறியவன். பண்டிதரை நாங்கள் இழந்த அந்த நெருக்கடி மிகுந்த எதிரியின் முற்றுகையில் இருந்து வெளியேறியதே அவரது போராற்றலுக்கும் வியூகத் திட்டமிடலுக்கும் சான்று.

பண்டிதரின் இழப்பிற்குப் பின் அவரது பணிகளைப் பொறுப்பேற்று திறம்படச் செய்து பண்டிதரின் வீரச்சாவிற்கு ஈடு செய்தவன்.

அல்பேட்டைக் காணும் யாரும் போரிடுவதில் அனுபவம் மிக்கவன் என்பதை தவறின்றி ஊகிக்க முடியும். அல்பேட் கோபித்ததை, கோபப்பட்டதை நாம் காணவில்லை என்றே கூறலாம். ஏனோ தெரியவில்லை அவனுக்குக் கோபம் வருவதில்லை. நாம் சில வேளைகளில் வேண்டுமென்றே சீண்டுவோம். அப்போது கூட அவன் அமைதியாக இருப்பான். அன்பினால் வழிநடத்தி, அரவணைப்பால் பாதுகாத்து, அவன் வளர்த்த அவனுடைய வீரர்கள் இன்று அல்பேட்டைப் போலவே உருவாகி கள முனைகளில் தளபதிகளாக நின்று விடுதலைப் போரில் முன்னிலை வகிப்பதைக் காணலாம்.



குழந்தைகள் என்றால் அல்பேட்டிற்கு அலாதிப்பிரியம். குழந்தைகளோடு பழகும்போது அவனும் ஒரு குழந்தையாகி மழலை மொழி பேசுவதைக் கண்டு நாம் சிரித்த பொழுதுகள் ஏராளம்.

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது படை நகர்வுத் தந்திரோபாயத்திற்கு அமைய கோட்டையில் இருந்த எதிரிகளை வெளியில் வராமல் தடுக்கும் பொறுப்பும், கோட்டை மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தும் பொறுப்பும் அல்பேட்டிடம் கொடுக்கப்பட்டிருந்தது. தனது பணியைச் செவ்வனே செய்து முடித்து, கிட்டண்ணாவின் வழிநடத்தலில் நடைபெற்ற இத்தாக்குதல் வெற்றிக்கு வலுச் சேர்த்தவன்.

21.12.1985 அன்று ஒரு நாள் விடியற்காலைப் பொழுதில் அல்பேட் தன் முகாமில் உள்ள போராளிகளை காலைப் பயிற்சிக்குத் தயார்படுத்திக் கொண்டிருக்கையில், தொலைத் தொடர்புக் கருவி அலறியது. சுதுமலையில் உள்ள தளபதி கேணல் கிட்டண்ணாவின் முகாம் சிறீலங்கா இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாக தகவல் வந்தது. அல்பேட் தனது அணியினருடன் வானில் இணுவில் பகுதியால் சுதுமலையை அண்மித்தபோது மூன்று பெல் ரக உலங்குவானூர்திகள் குண்டு மழை பொழிந்து கொண்டிருந்தன. கிட்டண்ணாவின் கட்டளைகளுக்கு அமைய வெகு நுட்பமாக அதேவேளை தீரத்துடன் அல்பேட் தனது அணியினரை வெற்றிகரமாக வழி நடத்தினான் முற்றுகையிட வந்த இராணுவம் இப்போது அல்பேட் அணியினரின் பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டது. முன்னேறிய இராணுவம் முடக்கப்பட்டது. வேறுவழியின்றி சிங்களக் கொமாண்டோக்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள். அவர்களை உலங்குவானூர்திகளில் ஏறவிடாமல் அல்பேட் தனது அணியினருடன் தீரமுடன் போராடினான்.



**மேஜர் அல்பேட்**
கந்தையா ரூபநிதி
அச்சுவேலி தெற்கு
24.06.1961- 21.12.1985

ஆனால் தேசியத் தலைவரினதும், மூத்ததளபதி பண்டிதர், மூத்த தளபதி கிட்டண்ணாவினதும் நம்பிக்கைக்கும் பாராட்டுக்களுக்கும் உரிய வீரன் எதிரியின் 2 அங்குல மோட்டர்களின் குண்டுச் சிதறலினால் காயமுற்று மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் வீரச்சாவடைந்தான். சாவின்போதும் சிங்களப்படையை ஓட ஓட விரட்டிச் சாதனை படைத்த வீரனின் இழப்பில் அவன் நேசித்த மக்களை மாத்திரமல்ல யாழ் மீட்ட மறவன் கேணல் கிட்டண்ணாவையும் குலுங்கிக் குலுங்கி அழவைத்துவிட்டது. கிட்டண்ணா தமது போராட்ட வாழ்வில் கப்டன் பண்டிதரின் வீரச்சாவின்போதும், அல்பேட்டினது வீரச்சாவின்போதும்தான் இரு தடவைகள் குலுங்கிக் குலுங்கி அழுதாராம் என்று கிட்டண்ணாவோடு பணியாற்றிய போராளிகள் நினைவுகூருவார்கள். ஆம் வெற்றியையும் தோல்வியையும் சமமாகப் பார்க்கும் தேசியத் தலைவரின் மனங்கவர்ந்த தளபதியை கலங்க வைத்துவிட்ட இந்த மாவீரன் விதையாகி பதினைந்து ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், எல்லைகள் நோக்கிய எம் பணி தொடரும் என உறுதியெடுப்போம்.


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "கண்கள் கூறும் வார்த்தைகள்"

காணும் கண்களே,
கூறும் வார்த்தை
என்ன?
அஞ்சல் ஊடாக
எரிமலைக்கு...





## ஒக்டோபருக்கான...

எதிரியின் ஆயுதம் எதிரியை நோக்கி
கண்களே நீங்கள் காண்பது நிஜம்
எம்மினத்தை கண்மண் தெரியாமல் அழித்தானன்று
இன்று அவனது ஆயுதம் அவனை நோக்கித் திரும்பியது.
பல இழப்புக்களை எதிரியவன் காண்கின்றான்.
அவலத்தைத் தந்தவனிடமே அதை மீண்டும் திருப்பிக்கொடு
இது எம் காவியத் தலைவரின் வேதமந்திரம்
தாயக மீட்பு மரபுவழிப் போரில் இது ஒரு மைல்கல்
இப்படி எத்தனையோ சுடுகலன்கள் எம் புலிகள் வசம்
எதிரியவன் இனி நிற்பானா ஈழ மண்ணில்
வெகுவிரைவில் அலையடித்து ஓயும் ஓடுவான் எதிரி
சூடுவார் விரப்புலிப்படை தமிழீழமென்ற மாலையை

உதயபாரதலிங்கம்
பேர்ண்— சுவிற்சர்லாந்து

எத்தனை பெருங்குழல் ஏவிகள் பல கொண்டு
அத்தனையும் அன்று உன்னிடம் இருக்கையில்
எம் மக்களைக் கொன்றாய் இன்று பாரடா எங்களின்
வேங்கைகள் கையில் ஏவிய உனக்கே திருப்பி ஏவும்
பெரும் குழல் ஏவிகள் முழங்கிது பாராய்
செய்தவன் யாரோ கொடுத்தவன் யாரோ
பெற்றவன் இதனால் ஏவினான் எம்மக்களின் மீது
ஈவும் இல்லை இரக்கமும் இல்லை
எம் இன மக்களை கொன்றழித்ததுவே இவ் எறிகணை
செலுத்தி இன்று ஏவிய பகைக்கே திருப்பி ஏவுவர்
வரிப்புலி விரரின் எறிகணைப் பொறிகள்.

மத்தொனியான்
லண்டன்—பிரித்தானியா

வில்லோடம்பு வீச்சரிவாள்
வேல்க்கம்பு கைவண்ணமோடு,
பகை துரத்திய தொல்காலமது,
ஆங்கிலேயன் பீரங்கி முழங்கி,
அது கண்டஞ்சி நடுங்கி,
அவர் தாள் பணிந்து வணங்கி
கூலிகளாய் நானிலம் பரந்து செறிந்து,
கூனிக்குறுகி அடிமை வாழ்விழந்து
ஏற்றதொரு வாழ்வென விதிதனை நொந்து
சந்ததியைப் பெருக்கியவன்
சங்கதியைக் கேளு,
சமர்க்களத்தைப் பாரு
"பகை தந்த பரிசு தமிழன்,
குகை வந்து நின்று நிதம்,
புகை தள்ளும் கோலமிது,
கண்டின்று விழித்து விட்டோம்
களமாடும் தமிழ் வீரன்
கவிதந்த புலி வீரன்
கரிகாலன் செயல் வீரன்"

நேமிநாதன்
பாரிஸ்— பிரான்ஸ்

எட்டுத்திக்கும் வெடி கேட்கட்டும்- புலி
நட்ட கொடி புகழ் நாட்டட்டும்.
காட்டு வழியிலும் வேட்டுத் தீர்க்கட்டும்
காற்றிலே கந்தகம் வீசட்டும்
குட்டிக் குழந்தைக்கும் வீரம் பொங்கட்டும்
பட்டி தொட்டியெல்லாம் தமிழ் கேட்கட்டும்
மொட்டுவிடும் ஈழம் பூக்கட்டும்
எதிரி அகதியாய் வந்து கைநீட்டட்டும்.
புலி விரர்கள் புகழ் ஓங்கட்டும்
தலைவன் பேட்டியை அகிலம் கேட்கட்டும்

எம்.கிருஸ்ணர்
சூரிச்— சுவிஸ்

விடுதலைக்காய்
ஏவும் எறிகணைகளிற்கு
காட்டுமரங்களும் வழிவிடும்
விந்தை நடக்கும் நாடிது
வேங்கைவீரன் வைத்திடும்
குறியிது வழுவாது ஒரு நாளும்,
எதிரிப்படை சிதறும்.

பா.உ. கரன்
பாரிஸ்— பிரான்ஸ்

மானம் காத்த மாவிரரை மறப்பரோ
மண்ணின் மைந்தர் நாம்,
ஈழம் வேண்டிப் போராடும்
எம் காளையரை நோக்கி
எம் உயிரும் எம் உடலும்
போற்றிடும் பல்லாண்டுதான்.
தலைவன் உரை உலகெங்கும்
தமிழர் புகழ் பாட, துடித்தெழுவீர் தமிழா
ஈழச் சுதந்திரம் நாடி மானம் காக்க போர் முரசு
தொடர்ந்து கொட்ட
வென்றிடுவீர் எம்மண்ணை
தலைவர் வழி நின்றே!

ப. குணபாலன்
லண்டன்

அவ்ரோ, புக்காரா, கிபீர், அன்ரனோவ்-32,
வை-8, வை-12, எம்.ஐ-17, பெல்-212
எண்ணிக்கை முப்பதைத்தாண்டும்
தொடரட்டும் புலிகளின் ஏவுப்பொறி சுடுதிறன்
நொருங்கட்டும் எதிரியின் வான்படை
பரவட்டும் பட்டி தொட்டியெல்லாம்
புலிகன் சேனை மரபுப் போர்த்திறன்
நிமிரட்டும்
எங்கள் தலைவனின் மேலாண்மைத்திறன்
எழுதட்டும் கவிகளெல்லாம்
இனவாத சிங்கள அரசுக்கு
இனிவரும் காலமெல்லாம்
இலையுதிர் காலங்களென.

யாழினி
யூலிச்— ஜேர்மனி

பாரோடு, பறை சாற்றும் புலிவீரம்.
போராட்டக்களத்தில் பெரும் நீரோட்டமாய்,
வந்த படை நீர் போட்ட அடியிலே
இப்படைக்கலமும், எம் வசமாயிற்று.
எம் நிலத்தை ஆட் கொள்ள வந்த படை
சுடுதிறன் துல்லியம் கண்டு ஓட்டம்
தேசியத் தலைவர் வழியில் எந்நாளும்
தொடர்ச்சியாய் வெற்றியை மட்டுமே காணும்
தமிழினம்
இதைக் கண்ட எதிரிப்படை ஓட்டமெடுக்கும்
விரைவில் எளிதாய் உருவாகும் தமிழீழம்

கு. முருகா
பலர்மோ— இத்தாலி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்பான வாசகர்களே! "உணர்வுப்பாலமாக" "உறவுப்பாலமாக" வெளிவரும் எரிமலை இதழ்




உலகமெலாம் பரவி வாழும்
நம்மவர் எல்லோரையும்
சென்று எட்டவேண்டும் என்பது எமது ஆவல்.
உங்களை வந்தடையும் எரிமலை
உங்கள் உறவுகளை,
நண்பர்களை சென்றடைகின்றதா?
இல்லையெனில்...
அது உங்கள் பணி அவர்களையும்
எரிமலை வாசகர்கள்
ஆக்கிடுங்கள்!

## மாதம் ஒருமுறை எரிமலை நாடிவர நாடுங்கள்

**சுவிற்சர்லாந்து**
T.E.C.C
Postfach 2274
8031 Zurich
Tel:(41) 127 33 407

**இங்கிலாந்து**
U.T.O
202 Long Lane
London SE1 4QB
Tel:(44) 207 403 45 54

**ஜேர்மனி**
T.C.C
Postfach 101613
46016 Oberhausen
Tel:(49) 208 205 991 03

**பிரான்ஸ்**
T.C.C
341 Rue Des Pyrenees
75020 Paris
Tel:(33) 1 43 58 11 42

**இத்தாலி**
T.C.C
Via Paolo Balsamo -11
90100 Palermo
Tel:(39) 091 61 62 804

**நெதர்லாந்து**
T.C.C
P.O.Box 18600
2502 EP Den Haag
Tel:(31) 70 346 1963

**டென்மார்க்**
L.T.T.E
P.O.Box 47
7400 Herning
Tel:(45) 97 21 76 49

**நோர்வே**
T.C.C
P.O.Box 1699,Vika
0110 Oslo
Tel:(47) 22 35 09 80

**சுவீடன்**
T.C.C
Glomminge Grand-25
3rd Floor,
16362 Spanga

**கனடா**
W.T.M
64 Eaton Ave, Toronto
Ontario M4J 2Z5
Tel:(1) 416 46 15 991

**அவுஸ்திரேலியா**
T.C.C
P.O.Box 375
Preston
Victoria 3072
Tel:(61) 03 95 47 83 00

**அமெரிக்கா**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica
New York 11432
Tel:(1) 718 657 94 63

எரிமலை இதழ் சார்ந்த தொடர்பு களுக்கும், உங்கள் நாடுகளில் தொடர்பு முகவரிகள் இல்லாத வர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ERIMALAI
C/O T.C.C -France
341 Rue Des Pyrenees
75020 Paris
FRANCE.

Fax: (33) 1 43 58 11 91
Email: erimalai@freesurf.fr

வாசகர்களே! எழுத்தாளர்களே! உங்கள் மேலான கருத்துக்களை, ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை எரிமலையை ஊக்கப்படுத்தும். அதன் தரத்தை மேலும் உயர்த்தும். இது உங்களின் எரிமலை.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

